# ஞானச்சுடர்




மாசி 2019

254 ஆவது மலர்

வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

# குறள் வழி



சுடச்சுடரும் பொன்போ லொளிவிடுந் துன்பஞ்
சுடச்சுட நோக்கிற் பவர்க்கு.

**பொருள்:** புடமிடப்படும் பொன் சுடச்சுட ஒளிவிடுதல் போலத் தவஞ் செய்வார்க்கு அதனால் வரும் துன்பம் வருத்த வருத்தப் பாவம் நீங்கி ஞானம் மிகும். (267)

தன்னுயிர் தானறப் பெற்றானை ஏனைய
மன்னுயிர் எல்லாந் தொழும்.

**பொருள்:** தன்னுயிரைத் தான் அடக்கியாள வல்லவனை அவ்வாறு பெறாத மற்றைய உயிர்கள் எல்லாம் வணங்கும். (268)

# நற்சிந்தனை

## மறப்பேனோ குருநாதன் தன்னை

### முத்தி நல்குமே

### இலங்கை நம் நாடு

வெண்பா



செல்வநிலை யாதென்று தேர்ந்தோம் சிவபெருமான்
நல்ல பதமறவோம் ஆளல்லோம் – அல்லலுற
மாட்டோ மவனி மதித்தாலு மின்புறோம்
வேட்டோ மிலங்கை வெளி 10

இலங்கைவாழ் தெய்வ மெமையாளுந் தெய்வம்
கலங்க விடாத்தெய்வம் காணின் – புலன்வழியிற்
செல்லவிடாத் தெய்வம் தேவர் தொழுந்தெய்வம்
நல்லதெய்வம் நாடோறும் நாடு 11

எல்லாந் தருந்தெய்வம் எல்லாமா குந்தெய்வம்
எல்லாந் தொழுந்தெய்வ மெந்தெய்வம் – நில்லாநீர்
செஞ்சடைசேர் தெய்வம் சிரஞ்சீவி யானதெய்வம்
அஞ்செழுத் தானதெய்வ மாம் 12

நிலனாகிக் காற்றாகி நீராகுந் தெய்வம்
அலகி லருக்கனு மம்புலியும் – பலபலவாம்
வேடங் கொளுந்தெய்வம் வேதாளஞ் சூழ்தெய்வம்
மாட மலியிலங்கை வாழ்வு 13

# ஞானச்சுடர்



வெளியீடு:

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை

உ

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 254

2019 மாசி

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| தேனாய் இன்னமுதமுமாய்த்... | மு.க. மாசிலாமணி | 01 -06 |
| திருச்சதகம் | சு. அருளம்பலவனார் | 07 -09 |
| சமயமும் சமுதாயமும் | கு. ஶ்ரீஸ்கந்தராஜா | 10 -13 |
| ஆனந்தக் கிருஷ்ணனின்... | திருமதி பா. சிவனேஸ்வரி | 14 -16 |
| சான்றோன் ஆக்குதல்... | கு. சோமசுந்தரம் | 17 -20 |
| சைவ சமயம் | கௌ. சித்தாந்தன் | 21 -23 |
| கருடபுராணம் உரைக்கும்... | செல்வி ச. வர்ணி | 24 -27 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 28 -29 |
| ராகு கேது விளக்கம் | ப. பத்மநிருபன் | 30 -33 |
| நித்திய அன்னப்பணி... | சந்நிதியான் ஆச்சிரமம் | 34 -36 |
| உண்மையின் மகிமை | பூ.க. இராசரத்தினம் | 37 -39 |
| திருவருட்பயன் | ஆ. ஆனந்தராசன் | 40 -46 |
| தில்லைக் கூத்தனின்... | திருமதி ப. நடராஜா | 47 -50 |
| சமய வாழ்வு | இரா. செல்வவடிவேல் | 51 -53 |
| இல்லறம் அல்லது நல்லறம்... | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 54 -55 |
| படங்கள் தரும் பதிவுகள் | சந்நிதியான் ஆச்சிரமம் | 56 -57 |
| சந்நிதியான் ஆச்சிரமத்தின்... | மோகனதாஸ் சுவாமிகள் | 58 -62 |


வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)

**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இலக்கம்: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

# ஞானச்சுடர் தைமாத வெளியீடு

## வெளியீட்டுரை:

தைமாதம் இருபத்திரண்டாவது அகவையில் கால்பதிக்கும் ஞானச்சுடர் மலருக்குரிய வெளியீட்டுரையினை வருடா வருடம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலய நிர்வாகசபைத் தலைவரும், சிவபூமி நிறுவனத்தின் ஸ்தாபகருமாகிய திரு ஆறு. திருமுருகன் அவர்கள் மேற்கொள்வது வழமை. அன்னார் மேற்கொண்டுவரும் அறப்பணிகள் காரணமாக வருகை தராத காரணத்தால் பிரபல எழுத்தாளரும், மக்கள் வங்கியின் இளைப்பாறிய முகாமையாளரும், ஞானச்சுடர் தைமாத மலரின் சிறப்புப்பிரதி பெறுபவருள் ஒருவருமாகிய திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் அவர்கள் மேற்கொண்டார்கள்.

அவர் தமது உரையின்மூலம் ஆரம்பகால ஞானச்சுடரிலிருந்து இன்றுவரை வெளிவந்துகொண்டிருக்கும் மலரின் தரம் படிப்படியாக வளர்ச்சி அடைந்து எல்லோரும் விரும்பிப் படிக்கக்கூடியதாக வருவது சந்நிதி வேலவனது பெருங்கருணை என்றே கூறவேண்டும். அத்தோடு தைமாத மலருக்கு மக்கள் வங்கி சமூகம் சிறப்புப்பிரதி பெறுவோர் பட்டியலில் இடம்பெறும் காரணமாக ஆச்சிரமம் ஆற்றும் சகல சமய, சமூகப் பணிகளுக்கு உந்துசக்தியாக விளங்குவதுடன், மக்கள் வங்கியின் செயற்பாட்டுக்கு முன்நின்று உழைக்கும் இளைப்பாறிய நிர்வாக அலுவலர் திரு சி. பத்மநாதன் அவர்கட்கும் நன்றிகூறித் தனது வெளியீட்டுரையை நிறைவு செய்தார்.

## மதிப்பீட்டுரை:

ஞானச்சுடர் 253ஆவது தைமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை இளைப்பாறிய அதிபரும், சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் சகல பணிகளுக்கும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவராகிய திரு ஆ. சிவநாதன் அவர்கள் மேற்கொண்டார்கள்.

வருடா வருடம் தைமாத மலருக்குரிய மதிப்பீட்டுரையினை ஆற்றுவதையிட்டும், இன்றும் இம்மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றுவதற்கு வாய்ப்புத் தந்த சந்நிதி வேற்பெருமானுக்கு நன்றி கூறித் தனது மதிப்பீட்டுரையினை மேற்கொண்டார்.

குறிப்பாக மற்றைய மலர்களுக்கு ஆற்றும் மதிப்புரைபோல ஞானச்சுடர் மலருக்கு ஆற்றமுடியாது. 253 மாத காலமாக ஒரு மலர் அதுவும் விளம்பரம் அற்றவகையிலும், ஆன்மீகம் சார்ந்ததாகவும் வெளிவருவதென்பது ஒரு சாதாரண காரியமல்ல. வேற் பெருமானின் பார்வையின் நிமித்தம்தான் மலர் மென்மேலும் மெருகேற்றப்பட்டு வெளிவந்து கொண்டிருக்கிறது.

மலரில் இடம்பெறும் சகல விடயங்களுக்கும் சந்நிதி வேற்பெருமான்தான் பொறுப்பு; தாங்கள் அல்ல என்று ஆச்சிரம சுவாமி அவர்கள் மலர்வெளியீட்டின்போது அடிக்கடி கூறுவார். அதுதான் உண்மை. ஆகையால் மலருக்கு மதிப்பீட்டுரை ஆற்றுவதை விட்டு மலர் மென்மேலும் தொடர்ந்து பிரகாசிக்க வேண்டும் என வாழ்த்தித் தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார். எவ்வகையிலும் மலரில் இடம்பெற்ற கட்டுரைகளின் தன்மைக்கேற்ற வகையில் அவரது மதிப்பீட்டுரை அமைந்திருந்து.

# சுடர் தரும் தகவல்

சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் மறைவு சைவ உலகிற்கு ஏற்பட்ட பேரிழப்பாகும். அவரது பேச்சாற்றலும் - எழுத்தாற்றலும் சைவ சமய வளர்ச்சிக்கு உறுதுணையாகவும்- உந்துசக்தியாகவும் இருந்தது என்பது மறுக்கமுடியாத உண்மை. புலம்பெயர்ந்து நம்மவர்கள் வாழ்ந்துவரும் லண்டன் - கனடா - மலேசியா முதலான நாடுகளில் அவர் ஆற்றிய சமய சொற்பொழிவுகள், அந்தந்த நாடுகளில் உள்ள சைவ சமய நிறுவனங்களின் பணிகளுக்கு புதிய வேகத்தையும் புத்தாக்கத்தையும் கொடுத்தது.



சைவ சித்தாந்தத்தை முன்னிலைப்படுத்துவதாக அமைந்த அவரது தொடர் சொற்பொழிவுகள் - வல்லமையுள்ள மாணவ பரம்பரை ஒன்றினைத் தோற்றுவித்தது. அந்த மாணவர்களே இன்று கட்டுரையாளர்களாகவும், விரிவுரையாளர்களாகவும், சொற்பொழிவாளர்களாகவும், பட்டிமன்ற விற்பன்னர்களாகவும் பிரகாசித்து அவரது பணியினைத் தொடர்வது நாம் செய்த பேறேயாகும்.



"கலாபூஷணம்" முதலான பல்வேறு பட்டங்கள் அவரைத் தேடி வந்தபோதும், இணுவில் செகராசசேகரப் பிள்ளையார் ஆலயம் வழங்கிய "சிவத்தமிழ் வித்தகர்" எனும் பட்டமே, அவரது மறைவின் பின்னரும்- அவரது பெருமை பேசி நிற்கும் சிறப்புப் பெற்றுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரமத்துடன் அவருக்குண்டான தொடர்புகளும் - நினைவுகளும் மிக நீண்டவை. ஆச்சிரம வெளியீடான "ஞானச்சுடர்" சமய சஞ்சிகையில் சிவத்தமிழ் வித்தகர் சிவ. மகாலிங்கம் அவர்களின் கனதியான- பொருள் பொதிந்த சமயக் கட்டுரைகள் பலவும் வெளிவந்துள்ளன.

அன்னாரது பூதவுடல் தகனம் செய்யப்பட்ட 15.02.2019 வெள்ளியன்று- சந்நிதியான் ஆச்சிரமத்து வாராந்த வெள்ளி நிகழ்வும் பொருந்தி வந்தது எதிர்பாராத சம்பவம். அன்றைய நிகழ்வினில் திரு அ. குமாரவேல் ஆசிரியர் அவர்களுடன், இரா செல்வவடிவேல் ஆசிரியர் அவர்களும் இணைந்துகொண்ட அஞ்சலி நிகழ்வாக அமைந்தது குறித்து சந்நிதியான் ஆச்சிரமம் மனநிறைவு கொள்ளுகிறது.

ஆத்மீக சிந்தனையுடன் அறவாழ்வைக் கடைப்பிடித்து வந்த சிவ. மகாலிங்கம் அவர்களின் இவ்வுலக வாழ்வு 70 வயதில் நிறைவு பெற்றாலும், அவரது ஆக்கங்களும் நினைவுகளும் உலகம் உள்ளளவும் நிலைத்திருக்கும் என்பதில் ஐயமேதுமில்லை.

அன்னாரது ஆத்மா இறைவன் திருப்பாதங்களைச் சென்றடைய சந்நிதியான் ஆச்சிரமம் பிரார்த்திக்கின்றது.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

# ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் திருவாய் மலர்ந்தருளிய திருவகுப்பு


## 13. சேவகன் வகுப்பு

இருபிறை யெயிறு நிலவெழ வுடல
        மிருள்படு சொருப முடைக்கோ விடவே
இறுகிய கயிறு படவினை முடுகி
        யெமபடர் பிடரி பிடித்தே கொடுபோய்:,

அருமறை முறையின் முறை முறை கருதி
        யதரிடை வெருவ ஒறுத்தால் வகையால்
அறிவொடு மதுர மொழியது குழறி
        யலமரு பொழிதி லழைத்தால் வருவாய்:,

ஒருபது சிரமு மிருபது கரமும்
        விழவொரு பகழி தொடுத்தோன் மருகா
உரமது பெரிய திரிபுர மெரிய
        வுயர்கன கிரியை வளைத்தோர் புதல்வா:,

மருவள ரடவி வனிதையர் பரவ
        மரகத விதணி லிருப்பாள் கணவா
வளைகடல் கதற நிசிசரர் மடிய
        மலையொடு பொருத முழுச்சேவகனே.



# மாசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

M. இந்துசேகரம்
(அவுஸ்திரேலியா)
சிவபாலன் சுந்தரமூர்த்தி
(சுவிஸ்லாந்து)
N. கதிர்காமநாதன்
(யாழ்ப்பாணம்)
திருமதி. த. சுரேந்திரநாதன்
(இளை. அதிபர், மயிலியதனை, தொண்டைமானாறு)
செ. நவரெத்தினராசா J.P
(கப்பூது, குப்பிளான்)
ந. யோகேஸ்வரன்
(பாடசாலைவீதி, கோண்டாவில்)
அதிபர்
(யா/ தொண்டைமானாறு வீ. ம. வித்தியாலயம்)
த. இராசேஸ்வரன்
(இராஜ உதயம், அல்வாய்)
சி. பத்மநாதன் J.P
(உப தவிசாளர், நகரசபை, பருத்தித்துறை)
சி. சிவம்
(சிதம்பரப்பிள்ளை புத்தகசாலை, நெல்லியடி)
வ. நந்தகுமார்
(அம்மன் கோவிலடி, கரணவாய் தெற்கு)
T. பாக்கியம்
(கந்தர்மடம்)
நா. பவளம்
(அச்சுவேலி)
திருமதி தேவதாஸ் தயானி
(அச்சுவேலி)
கணேசகுலசிங்கம் துஷிகரன்
(அச்சுவேலி)
பொ. இராமலிங்கமூர்த்தி
(இளை. உதவி மின் அத்தியட்சகர், கரவெட்டி)

சி. மகாலிங்கம் J.P

(மலையன் தோட்டம், கொற்றாவத்தை)

சு. சிவதாசன் G.S

(புன்னாலைக்கட்டுவன் வடக்கு)

**தலைவர், செயலாளர்**

(கலைவாணி சனசமூக நிலையம், தொண்டைமானாறு)

**உரிமையாளர்**

(ஜெயகிருஷ்ணா, K.K.S. வீதி, சுண்ணாகம்)

**ஐ. லோகஞானம்**

(அஞ்சல் அதிபர், யாழ்ப்பாணம்)

**ஆ. விஸ்வலிங்கம்**

(இளைப்பாறிய ஓவசியர், சுண்ணாகம்)

**V. அரியராசா J.P**

(இளை. வரை. வல்லுனர், தொண்டைமானாறு)

**கந்தசாமி தேவராணி**

(ஆனைக்கோட்டை)

**உரிமையாளர்**

(ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பு நிலையம், யாழ்ப்பாணம்)

**செ. சந்திரமூர்த்தி**

(சந்திரா தொலைத்தொடர்பு நிலையம், உடுப்பிட்டி)

**சி. பஞ்சலிங்கம்**

(ஞானவைரவர் கோவிலடி, உரும்பராய் கிழக்கு)

**செ. தேவேந்திரா**

(ஒஸ்காவீதி, உரும்பராய்)

**இராசரெட்ணம் வசந்தன்**

(ஊரெழு மேற்கு சுண்ணாகம்)

**இ. குமாரதாசன்**

(இளை. பிராந்திய மருந்தாளர், இடைக்காடு)

**R. குலசிங்கம்**

(இளை. அதிபர், கோண்டாவில்)

**N. K. தங்கராசா**

(இளை. தபாலதிபர், புலோலி)

**இ. பாலகிருஷ்ணன்**

(முகமாலை)

உரிமையாளர்

(நாதன் மெடிக்கல் சென்ரர், நெல்லியடி)

செ. செல்வரெத்தினம்

(இளை. அதிபர், சுண்ணாகம்)

த. விவேகானந்தன்

(சியாமி பேபி நீட்ஸ், பருத்தித்துறை)

இ. ஜெயபாலன்

(பெற்றோலியக் கூட்டுத்தாபனம், யாழ்ப்பாணம்)

மா. ந. பரமேஸ்வரன்

(கந்தசுவாமி கோவிலடி, இணுவில்)

பா. கேதீஸ்

(உரும்பராய்)

S. ஈஸ்வரன்

(டச்சுவீதி, சித்தங்கேணி)

ச. மதனகுமார்

(சிவகாமி அம்மன் கோவிலடி, இணுவில்)

கெ. தவராசா

(விவேகானந்தர் வீதி, இணுவில்)

வி. ந. ஸ்ரீதரன்

(இளை. அதிபர், நீராவியடி, யாழ்ப்பாணம்))

செ. செல்விகா

(நாவலடி ஒழுங்கை, மானிப்பாய்)

சி. இராசரத்தினம்

(இராஜஸ்தான், சுதுமலை)

வே. மதிபாலசிங்கம்

(செட்டியதெரு, கரவெட்டி)

நா. முருகையா

(ஊரெழு கிழக்கு, சுண்ணாகம்)

செல்வராசா பொன்னுத்துரை

(கரந்தன், நீர்வேலி)

விஸ்வலிங்கம் குகலிங்கம்

(பண்ணாகம், சுழிபுரம்)

மா. தேவநேரு

(செட்டிவளவு லேன், இணுவில்)

சசிகரன் கௌதமன்

(அச்சுவேலி)

செ. பாலச்சந்திரன்
(கொக்குவில் மேற்கு, கொக்குவில்)
இ. புவனேந்திரராஜா (பிள்ளையார்)
(நெல்லியடி, கரவெட்டி)
தி. பாலசுப்பிரமணியம்
(பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்)
ஆறுமுகம் கந்தையா
(நீர்வேலி)
நாகன் கிருஸ்ணபிள்ளை
(கோண்டாவில்)
சி. கந்தையா
(சுண்ணாகம்)
K. விஷ்ணுமோகன்
(உரும்பராய் கிழக்கு)
பொ. சிற்றம்பலம்
(கொடிகாமம்)
ச.க. தம்பு
(அல்லாரை, மீசாலை)
சிதம்பரநாதன் ஸ்ரீகரன்
(புத்தூர்)
நாகராசா சாந்தி
(அச்சுவேலி)
க. ரட்ணேஸ்வரன்
(இளை. அதிபர், சங்கானை)
க. கிருஷ்ணேஸ்வரக்குருக்கள்
(ஆனைக்கோட்டை)
திருமதி விஜயலட்சுமி இராசநாயகம்
(வட்டுக்கோட்டை)
திருமதி செல்வநாயகம்
(வடலியடைப்பு)
திருமதி சீதாதேவி இந்திரன்
(யா/ கச்சாய் மகா வித்தியாலயம்)
உரிமையாளர்
(சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்)

# தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் திருவாசகம்

– **திரு மு.க. மாசிலாமணி** அவர்கள் –

"பக்தியின் மொழி" என விதந்து போற்றப்படும் செந்தமிழ் இறைநெறியை இறையுணர்வை-இறைவனின் பெரும்புகழை அவனின் பேரருளாற்றல்களை எல்லாம் விபரிக்கும் பக்திப் பனுவல்களை மிகப் பல எண்ணிக்கையில் கொண்டு விளங்குகின்றது. பல நூறு ஆண்டுகளாக மக்கள் வாழ்க்கைக்கு ஒளிவிளக்காகத் திகழ்ந்து வழிகாட்டியாக இருந்து வருகின்ற பெருநூல்களாகப் போற்றப்படுகின்ற விரல்விட்டெண்ணக்கூடிய அத்தகைய தலைசிறந்த ஒரு சில நூல்களுள் திருவாசகமும் ஒன்று. கிறிஸ்தவ வேத நூலான பைபிள், திருக்குறள், பகவத்கீதை ஆகியனவற்றையும் இவ்வாறான மிகமிக உயர்ந்த நூல்கள் எனப் போற்றுவர். ஏறத்தாள 18350 பக்திப் பாசுரங்களைக் கொண்ட பன்னிரு திருமுறைகளில் எட்டாந் திருமுறை யாக விளங்குந் திருவாசகம் 658 பாசுரங்களை மட்டுமே கொண்டதாயினும் கடந்த பல நூறு ஆண்டுகளாக உலகியல் என்ற சம்சார சாகரத்துள் அகப்பட்டு அமிழ்ந்து அல்லலுறும் மானிடர்களின் மனமாசினை அகற்றித் தூய்மைப்படுத்தி உய்திபெற வழிகாட்டும் ஞானக் கருவூலமாக அனைத்துச் சைவப் பெருமக்களாலும் பக்தி சிரத்தையுடன் ஓதிப் போற்றப்பட்டு வருகின்ற ஒப்புயர்வற்றதொரு தெய்வீகத் திருநூல் திருவாசகமே.



"உனது குற்றங்குறைகளை ஒப்புக்கொண்டு இறைவன் முன்னிலையில் வருந்தி வருந்தி அழு; அவனுடைய அருளைப் பெறலாம்" என்ற மையக் கருத்தினை மிக உருக்கமாகவும் அழுத்தந்திருத்தமாகவும் எடுத்தோதுகின்றமைதான் ஏனைய நூல்களிலும் பார்க்கத் திருவாசகம் படிப்பவர் மனங்களை ஈர்த்திழுப்பதற்கான மிக முக்கிய காரணமாகும். எவ்வாறு தனது தவறுகளையும் தகுதியின்மைகளையும் திரும்பத் திரும்ப இறைவனை நோக்கியவாறு உரக்கக் கூறியும் இறைவனின் பெருங்கருணையைப் பேரருட்திறனை விதந்து விதந்து போற்றிக் கூறியும் என்னை விட்டிடாதே ஆண்டருள் என இரந்திரந்து மன்றாடியும் அழகொழுகும் கவிதைகளாக வடித்துச் சிவனின் அருளைப் பெற்றுக்கொண்ட மணிவாசகரின் தெய்வீக அனுபவ உணர்வுகளின் பதிவே திருவாசகம் எனச் சுருக்கமாகக் கூறலாம். அழுதழுது அரனடி அடைந்த மணிவாசகர் பெற்றுக்கொண்ட அவ்வனுபவ உணர்வுகளைப் பொருளுணர்ந்து நெஞ்சம் நெக்குருகிப் பொருத்தமான இசையோடு மனம் ஒன்றிக் கற்போரையும் கேட்போரையும் அவ்வுணர்வுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு செய்வதே திருவாசகத்தின் மகத்துவம் மாண்பாகும். அதுமட்டுமல்ல ஏனைய நூல்களுக்கில்லாத அதன் தனிப் பெருஞ் சிறப்பாகும்.

இறைவனை அடையத் துடிக்கும் ஆன்மா ஒன்றிற்கு,

"நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி நாயிற் கடையாய்க்
கிடந்த அடியேற்குத் தாயிற் சிறந்த தயாவான தத்துவனே..."

என மணிவாசகர் சிவபுராணத்துள் கூறுவதுபோல இறைவனே தேடி வந்து தரிசனம் கொடுக்க அவ்வான்மா அடைகின்ற பெருமகிழ்ச்சி எல்லையற்றது; பின் இறைவன் விட்டுப் பிரிவதனால் அப் பிரிவினைத் தாங்கிக்கொள்ள முடியாத அவ்வான்மா அடையும் மனச்சோர்வு, துயரம், மனக்குமுறல் போன்ற உணர்வுக் கொந்தளிப்புகளும் இறுதியில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட அவ்வான்மா அடையும் எக்களிப்பு, பேரானந்தம் போன்ற உணர்வுகளும் மணிவாசகரின் உள்ளத்தின் ஆழத்திலிருந்து பொள்ளெனத் தோன்றிய இறை அனுபவக் கருத்துக்கள் மடைதிறந்த வெள்ளம்போல் செஞ்சொற்களாக இனிய இசையுடனான நடையில் பொங்கிப் பிரவாகித்து வெளிவந்த அதிசிறந்த செந்தமிழ்க் கவிதைகளான திருவாசகத்திற்கு இணையாக நிகராக வேறெந்த நூலையும் ஒப்புவமை கூறமுடியாதென்பது இப்பாசுரங்களை மனம் ஒன்றிக் கற்றனுபவித்த அனைவரினதும் ஒருமனதான முடிவாகும்.

திருவாசகத்தின் உயர் தனிச்சிறப்புகளில் குறிப்பிட்டுக் கூறக்கூடிய மிக முக்கிய பண்பு கல்நெஞ்சையும் கரையச் செய்யும் அதன் உருக்குந் தன்மையாகும். "திருவாசகத்திற்கு உருகார் ஒரு வாசகத்திற்குமுருகார்", "வாக்கிற்கு அருணகிரி வாதவூரர் கனிவில்" என்பன போன்ற ஆன்றோர் மொழிகள் மனதை நெகிழ வைத்து உருக்கத்தின் உச்சிக்கே கொண்டு செல்லுந் திறனில் திருவாசகத்திற்கு நிகர் திருவாசகமே. திருப்பெருந்துறையில் குருந்தமர நீழலில் இறைவனால் ஆட்கொள்ளப்பட்டபோது மணிவாசகர் அடைந்த பேரானந்தத்திலும் இறைவன் விட்டுப் பிரிந்தபோது அவர் உற்ற கலக்கமும் ஆறாத் துயரும் மிகமிகப் பெரிது" "...நாயிலாகிய குலத்திலுங் கடைப்படும் என்னை நன்னெறி காட்டித் தாயிலாகிய இன்னருள் புரிந்த என் தலைவனை நனிகாணேன் தீயில் வீழ்கிலேன் திண் வரை உருள்கிலேன் செழுங்கடல் புகுவேனே" எனத் தனக்கு இன்னருள் புரிந்த இறைவன் தன்னைவிட்டுப் பிரிந்த பின் இருந்தென்ன இறந்தென்ன என்ற நிலையில் கணவனைப் பிரிந்த கற்புடைப் பெண்போல அலறி அலறித்

*நன்றியுள்ள மனிதனுக்குக் கேட்டதைவிட அதிகம் கொடு.*

துடிப்பது அரற்றி அரற்றி உருகிக் கலங்குவது போன்ற துயரத்தின் எல்லைக்கே சென்றுவிட்ட மணிவாசகரின் நாவிலிருந்து துன்ப அனுபவப் பிழிவுகளாக வெளிவரும் திருச்சதகம் போன்ற திருவாசகப் பகுதிகளில் நிரம்பிவழியும் வார்த்தைகளும் வசனங்களும் கற்போரையும் கேட்போரையும் உலுக்கி விடுகின்றன.

"யாரொடு நோகேன் யார்க்கெடுத்துரைக்கேன் ஆண்ட நீ அருளில்லையானால்..."

"முழுப் புழுக் குரம்பையிற் கிடந்து கடைபடா வண்ணம் காத்தெனை
ஆண்ட கடவுளே கருணைமா கடலே..."

"இரும்பு தரு மனத்தேனை ஈர்த்தீர்த்தென் என்புருக்கிக்
கரும்பு தரு சுவை எனக்குக் காட்டினை உன் கழலிணைகள்..."

என்பன போன்ற திருவாசகத்தில் பல இடங்களில் பயின்றுவரும் செஞ்சொற்களும் சொற்றொடர்களும் எந்த வன்நெஞ்சையும் கரைக்கும் ஆற்றல் பெற்றவை. இதயத்தினை இளகச் செய்து உள்ளத்தை உருக்கிப் புனிதப்படுத்துவதில் திருவாசகம் தலைசிறந்து விளங்குகின்றது.

உருக்குந்தன்மைபோல் திருவாசகத்தின் மற்றொரு முக்கிய பண்பு மணிவாசகர் தன் குறைகளையும் தகுதியின்மைகளையும் பெரிதுபடுத்தித் தன்னை தாழ்த்திக் கொள்ளுதலாகும். "தாழ்வெனுந் தன்மையோடு சைவமாம் சமயம் சாரும்" எனச் சைவசித்தாந்த நூலான சிவஞானசித்தியார் கூறுவதற்கமையச் சைவசமயிகளுக்குக் கட்டாயமாக இருக்க வேண்டிய பணிவு என்ற உயரிய பண்பு இறைவனின் பெருங்கருணையை மிகமிகப் புகழ்ந்தும் தன் குறைகளை மிகமிகத் தாழ்த்தியும் கருதிக்கொள்ளும் இயல்பு இறையருள் பெற்றுய்யும் தகுதியுடைய மெய்ஞானிகளுக்கு மட்டுமே வாய்க்கக்கூடியதொன்று, அத்தகையவர்கள் தங்குற்றம் குறைகளைப் பெரிதுபடுத்தி "இரங்கி இறைவனிடம் மன்றாடுவர். மணிவாசகர் எங்கெல்லாம் இறைவனின் பெரும் புகழை உயர்த்தியும் தன்னை இழித்தும் பழித்தும் கூறமுடியுமோ அங்கெல்லாம் இறைவனை உயர்த்தியும் தன்னைத் தாழ்த்தியும் கொள்கின்றார். தன்னை நாயினுங் கெட்ட ஒரு ஈனப் பிறவியாகத் திருவாசகம் முழுவதும் சித்தரித்துள்ளார்.

"கல்லாத புல்லறிவில் கடைப்பட்ட நாயேனை"

"நாயான நந்தம்மை ஆட்கொண்ட நாயகனை"

"பொய்மையே பெருக்கிப் பொழுதினைச் சுருக்கும் புழுத்தலைப் புலையனேன்"

எனத் திருவாசகத்தில் பரவலாகப் பயிலப்பட்டுவரும் செந்தமிழ் வார்த்தைகளையும் வசனங்களையும் ஆழ்ந்து படிக்கும்போது மணிவாசகர் தம் கவித்துவத்திறன் முழுமையினையும் தன்னைத் தாழ்த்திக் கொள்வதற்கே முயன்று கையாண்டுள்ளாரோ என்று எண்ணத் தோன்றுகிறது.

உடற் பிணிகளை நீக்கித் தேகாரோக்கியத்தினைக் கொடுக்குந் தேன்போலப் பிறவிப் பிணியை நீக்கிப் பேரின்பத்தினைக் கொடுக்கவல்ல சிவபெருமானாகிய தேனை ஆரப் பருகி உண்ட மணிவாசகர் திருவாசகத்தில் சிவனையும் அவரது திருவருளையும் தேன் என்று பல இடங்களில் விதந்து பாடுகின்றார்.

"தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்
தானே வந்து எனதுள்ளம் புகுந்தருள் செய்தான்"

"சிவன் கருணைத் தேன் பருகி"

"தேனாய் இன்னமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்"

*நேர்மைக் குணமிருந்தால் நல்ல எண்ணங்களைச் செயற்படுத்தமுடியும்.*

எனத் திருவாசகத்தில் பல இடங்களில் சிவனைத் தேன் எனவே மணிவாசகர் சிறப்பித்துக் குறிப்பிடுதலின் அதனை ஓதி உணர்ந்தனுபவித்த சான்றோர்கள் திருவாசகத்தினையே "திருவாசகம் என்னுந் தேன்" என்றே போற்றியுள்ளனர்.

மானுடர் மானுடர்களுடன் கொள்ளும் அன்பு - காதல் பற்றிச் சங்ககால அகத்திணை நூல்கள் மிக விரிவாகவும் விளக்கமாகவும் பேசுகின்றன. மானிடர் தம்மைக் காதலியாகவும் இறைவனைக் காதலனாகவும் கற்பித்துப் பாடும் தெய்வீகக் காதல் மரபினை நாயன்மார்களும் ஆழ்வார்களும் ஆரம்பித்துப் பல பக்திப் பாசுரங்களைப் பாடியுள்ளனர். ஆயினும் பெண் பாத்திரம் ஏற்றுத் தன்னை நாயகியாகவே கருதி நாயகனான சிவன்மீது கொண்ட "நாயக நாயகி பாவம்" எனச் சிறப்பித்துக்கூறக்கூடிய ஆராக் காதல் பற்றி மணிவாசகர் திருவாசகத்தில் பாடுவதுபோல் தமிழில் வேறெந்த நூலும் பாடவில்லை. திருவாசகம் முழுவதுமே மணிவாசகர் என்ற மானுட நாயகிக்கும் இறைவனான சிவனுக்கும்- நாயகனுக்குமிடையேயான தெய்வீகக் காதல் பற்றிய மணிவாசகரின் உரையாடல்களே. "இன்பமே என்னுடைய அன்பே" எனச் சிவனை விளித்து உரிமையோடு பாடும் மணிவாசகர் திருவாசகத்தில் பல இடங்களில் சிவனை அன்பின் வடிவமாகவே பாடிப்பரவுகின்றார்.

பெண்மையினை இழிவான பொருளாகக் கருதி வெறுத்து ஒதுக்கிய சமண, பௌத்தர்களின் செல்வாக்கு ஓங்கியிருந்த காலத்தில் பெண்மைக்கு முதன்மையளித்து அவளைப் பெருமையோடு போற்றிப் பெண்களுக்கே சிறப்பாகவுரிய அவர்கள் சேர்ந்து விளையாடும் விளையாட்டுக்களைப் பாடு பொருளாகக் கொண்டு பாடல் புனைந்த ஓர் சீர்திருத்தப் பெருங் கவிஞர் மணிவாசகராவர். திருவெம்பாவை, திருவம்மானை, திருப்பொற்சுண்ணம், திருச்சாழல், திருப்பூவல்லி, திருப்பொன்னூசல், அன்னைப்பத்து, குயிற்பத்து போன்ற பெண்கள் சேர்ந்து விளையாடுவதும், வழிபடுவதுமாகக் கற்பித்துச் சைவசமயம் கூறும் அரும்பெரும் தத்துவச் சிந்தனைகளை மிக இலகு நடையில் இனிய இசையில் அழகொழுகும் செந்தமிழ்க் கவிதை களாக வடித்துள்ள மணிவாசகரின் புலமை நலம் வியக்கத்தக்கது.

கல்வி, கேள்விகளில் மிகப் பெரும் புலமையாளரும் அறிவு, ஆற்றல் மிக்க முதலமைச்சராகப் பதவி வகித்தவருமான மணிவாசகர் செந்தமிழ் நடையில் கவிதை பாடுந்திறன் படைத்தவராயினும் பாமர மக்களுக்கான நாட்டுப்பாடல் வகையில் கவிதை இலக்கியம் படைத்த ஒரு மக்கள் கவிஞராகவும் பிற்காலப் புலவர்களுக்கு அவ்வகை இலக்கியங்களுக்கு ஓர் வழிகாட்டியாகவும் சிறப்புப் பெறுகின்ற ஒரு பெருங் கவிஞருமாவர்.

இனிமை, எளிமை, இசைச் சிறப்பு, கவிதை நயம் ஆகிய அனைத்தும் நிறைந்த கவிதைகளின் சிகரம் எனக் கூறத்தக்க மேன்மை உடையது திருவாசகம் என்பதற்கு

"மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெட
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத் தொளிக்கும் ஒளியானே..."

என்ற முதற் பதிகமான சிவபுராணத்து ஒரு சில அடிகளே போதுமானவை.

*உள்ளத்தில் உண்மை ஒளி உண்டானால் வாழ்க்கையினிலே ஒளி உண்டாகும்.*

உணர்ச்சிகள் அனைத்திலும் மிகமிகவுயர்ந்ததும் தெய்வத் தன்மை உடையதுமான அன்பின் உயர்வைத் திருவாசகம் எடுத்தோதுவதுபோல் வேறெந்த நூலும் விபரிக்கவில்லை என்று கூறுமளவிற்கு திருவாசகம் முற்றிலும் அன்புணர்ச்சியே அடிநாதமாக இழையோடுகின்றது.

"யானே பொய் என்நெஞ்சும் பொய் என் அன்பும் பொய்
ஆனால் வினையேன் அழுதால் உன்னைப் பெறலாமே"

என்றும்,

"இடையறா அன்புனக்கென் ஊடகத்தே நின்றுருகத் தந்தருள்..." என்றும் அன்பேயான சிவனையே பொருளாகக் கொண்டு அன்பே வடிவான மணிவாசகர் பாடிய திருவாசகம் அன்புணர்ச்சி பொங்கித் ததும்பும் கவிதைப் பெருங்கடலுமாகும்.

உருக்கமும் அதற்குப் பொருத்தமான இசையும் இணைந்த கவிதைகளின் உச்சமாக உயர்ந்து விளங்குந் திருவாசகம் தனித்தனிப் பாடல்களின் தொகுப்பு நூலன்று. அல்லது கற்பனை நிரம்பிய இலக்கிய நூலுமன்று. அது இறைவனைச் சேரத் துடிக்கும் ஆன்மா ஒன்றின் சுயசரிதை. ஆரம்பத்திலிருந்து இறுதிவரை அவ்வான்மா சிவனை முன்னிலைப்படுத்திச் சிவனோடு பேசும் முறையில் அமைந்த ஒரு உரையாடல் நூல். இறைவனை அடைய வேண்டுமென்ற தன் நோக்கையும் அதற்குத் தடையாகவுள்ள தன் குற்றங் குறைகளையும் அழுதழுது கூறித் தன்னை ஏற்றுக்கொள்ளுமாறு இரங்கும் நாயகி பாகம் ஏற்றுள்ள மணிவாசகருக்கும் சிவனுக்கும் இடையேயான தெய்வீகக் காதல் நூல். சுருங்கக் கூறின் சிவனைச் சேரவேண்டுமென்ற ஒரே இலக்குடன் ஓயாதொழியாது தேடித் தேடிச் சிவனிடம் சரணாகதி அடைந்த மணிவாசகரின் ஆன்மீக யாத்திரை வரலாற்று நூல் என்றுங் கூறலாம்.

இவ் ஞானக் கருவூலத்தினை மனம் ஒன்றி ஓதி உணர்ந்தனுபவித்த பலரும் தம்மனதை இந்நூலிடம் பறி கொடுத்துள்ளனர். "திருவருட்பா" என்ற பக்திப் பெரு நூலின் ஆசிரியரும் அரும் பெருந் தவயோகியுமான இராமலிங்க வள்ளலார்.

"...மாணிக்கவாசக நின் வாசகத்தை நான் கலந்து பாடுங்கால்
நற்கருப்பஞ் சாற்றில் தேன்கலந்து பால் கலந்து செழுங்கனித்
தீஞ்சுவை கலந்தென் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிக்கும்"

உத்தமக் கவிதைகளே எனத் திருவாசகத்தினைப் போற்றுகின்றார்.

தமிழ்ப் பெரும் புலவர்களில் ஒப்பற்ற ஒருவராகப் போற்றப்படுபவரான துறைமங்கலம் சிவப்பிரகாசர்:

"வேதமோதின் விழிநீர் பெருக்கி நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்க் காண்கிலேம்
திருவாசகம் இங்கொருகால் ஓதின் கருங்கன் மனமும் கரைந்துருகக் கண்கள்
தொடுமணற் கேணியிற் சுரந்து நீர் பாய மெய்மயிர் பொடிப்ப
விதிர்விதிர்ப் பெய்தி அன்பராகுனரன்றி மன்பதை உலகின் மற்றையரிலரே"

எனத் திருவாசகத்தை வேதத்துடன் ஒப்பிட்டு உருக்குந் தன்மையில் வேதத்திலும் மிகமிக உயர்ந்தது திருவாசகம் என விதந்து போற்றுகின்றார்.

கிறிஸ்தவ மதத்தினைப் பரப்ப இந்தியாவிற்கு வருகை தந்த மதபோதகரான பேரறிஞர் ஜி.யு. போப் முதலில் தமிழைக் கற்றுத் தொடர்ந்து திருக்குறள், திருவாசகம் போன்ற நூல்களைக் கற்றவர், சிவபுராணத்தின் இரண்டாம் அடியான "இமைப் பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க" என்ற வரியால் ஈர்க்கப்பட்டுத் திருவாசகத்தினை முழுமையாகக்

கற்றுணர்ந்து தான் அனுபவித்தது மட்டுமன்றி இத்தகையதொரு உயர்வான ஞானக் கருவூலத்தினை மேலை நாட்டினரும் கற்றுணர்ந்தனுபவிக்க வேண்டுமென்ற பெரு நோக்குடன் அதனை "என்புருக்கி நூல்" "Bone Melting Hymms" என ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துத் தமிழ் பக்திக் கவிதையின் உயர் தனிச் சிறப்பை உலகறியச் செய்ததுடன் தான் இறந்தபின் தன் கல்லறையில் "கௌரவ ஜி.யூ. போப் ஒரு மாணவன் தமிழ் இலக்கியத்தில்" எனப் பொறிக்குமாறு அறிவுறுத்துமளவிற்குத் தான் கற்றனுபவித்த திருவாசகத்தினால் தமிழ்மீது ஆராப் பற்றுக்கொண்ட பேரறிஞருமாவர்.

"துயரம் நிறைந்த அனுபவங்களை விபரிக்கும் கவிதைகளே மனித மனங்களை ஈர்க்கும் இனிமையும் நயமும் மிக்க கவிதைகளாகும்.

என இலக்கியத் திறனாய்வாளர்கள் கூறுவதுபோல் தமிழ்நாடு தோற்றுவித்த தலை சிறந்த மெய்ஞானியும் அழுதழுது அரனடி அடைந்தவருமான மணிவாசகர் தான் மேற்கொண்ட ஆன்மிக யாத்திரை பற்றிய தன் சொந்த இறையனுபவங்களை எல்லோர் மனங்களையும் ஈர்க்கும் வகையில் அருமையாக விபரித்துள்ள திருவாசகம் தமிழிலுள்ள சமய நூல்களின் சிகரமாகத் திகழும் தலையாய ஒரு பக்திப் பனுவலாகும்.

"யாவரும் பெறவுறும் ஈசன் காண்க, கண்ணால் யானுங் கண்டேன் காண்க,
சிவனென யானுந் தேறினன் காண்க, அவனெனை ஆண்டுகொண்டருளினன் காண்க"

எனத் தான் கண்ட சிவனைத் திருவண்டப் பகுதியில் எடுத்தோதி மனுக்குலம் முழுமையும் காணவேண்டுமென அழுதழுது மன்றாடிய வேண்டுகோள்கள் அடங்கிய மணிவாசகரின் மணி வார்த்தைகளை மானிடர் ஒவ்வொருவரும் தம் துன்ப துயரங்களைத் தீர்த்தருளுமாறு இறைவன் முன்னிலையில் மனம் ஒன்றிப் பாடுவராயின் அவை அவர்களை ஆன்மிக வழியில் அழைத்துச் சென்று உய்யும் நெறி காட்டுமெனத் திடமாக நம்பலாம்.

## ஆறு திருமுருகனின் தவப்பேறுடைய திட்டமிது

ஏனைய நாடுகளில் இருப்பதைப்போன்று வடமாகாணத்தில் நன்றியுள்ள நாய்களுக்கு ஒரு காப்பகம் அமைவது நாட்டுக்கும் வீட்டுக்கும் புண்ணியமேயாகும். தெருவிலே ஆதரவற்று விடப்படும் நாய்க்குட்டிகள் வீதிகளில் வாகன சில்லுகளுக்குள் அகப்பட்டு, நசிபட்டு இரத்தம் பீறிடக் குடல் வெளிவந்த நிலையில் அகால மரணமடைவது கண்டு எல்லோருமே அஞ்சலி செலுத்தி அப்பால் செல்லுகின்ற நிலையில் ஆறு திருமுருகன் அவர்கள் ஆற அமர தீர யோசித்து வடமாகாணத்தின் கருணைக்குப் பாத்திரமான வாய்விடாச் சாதிகளின்பால் கவனம் செலுத்தியிருப்பது ஏனைய அறங்களிலும் பார்க்கத் தலையானதாக நோக்கப்படுகிறது. அவரின் தவம் நீடு வாழ்வதாக.

கண்கள் திறக்க முன்னமே, சாக்குகளில் போட்டுக் கட்டி சந்திகளில் நாய்க்குட்டிகளை வீசிவிட்டுச் செல்பவர்கள் இனிமேல் நேரடியாக இயக்கச்சியிலுள்ள நாய்களின் காப்பகத்திற்குச் சென்று நாய்க்குட்டிகளை ஒப்படைத்து புண்ணியத்தைச் சம்பாதிக்க முடியும்.

எத்தனை கல்வியியலாளர்கள், புத்திஜீவிகள், கலாநிதிகள் இருந்தும் முகவரி தெரியாத நாய்கள் பற்றி எவருமே வருந்தியதாகத் தகவல்கள் இதுவரையில்லை. மனிதப் பிறப்பின் உச்சம் இதுவாகும்.

இதுவரை காலமும் இருந்த ஆறு திருமுருகன் இத்திட்டத்தின் மூலமாக ஏழு திருமுருகன் ஆகின்றார். இனியென்ன வானமும் கைவசப்படும். பெட்டை நாய்களுக்கு இனி விடுதலை கிடைத்துவிடும். ஆண் நாய்களின் பாடு இனித் திண்டாட்டந்தான்! அதற்காக இத்திட்டத்தினை எவர்தான் தடுப்பர்?

-கே.எஸ். சிவஞானராஜா-

*சிறந்த புத்தகங்களே மிகச் சிறந்த நண்பர்கள்.*

# திருச்சதகம்

(தொடர்ச்சி...

## பக்திவைராக்கிய விசித்திரம்

(திருப்பெருந்துறையிலருளிச் செய்யப்பட்டது)

மறைந்த
– சங்கநூற் செல்வர் பண்டிதர் சு. அருளம்பலவனார் அவர்கள் –
(யாழ்ப்பாணம் – காரைநகர்)

## 08. ஆனந்தத்தழுந்தல்

### இறைவனது பேரின்பத்தில் முழுகி நிற்றல்

### எழுசீர்க் கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

77 ஐய நின் தல்லதில்லை மற்றொர் பற்று வஞ்சனேன்
பொய்க லந்த தல்ல தில்லை பொய்மை யேனே னெம்பிரான்
மைக லந்த கண்ணி பங்க வந்து நின்க ழறகணே
மெய்க லந்த அன்ப ரன்பெ னக்கு மாக வேண்டுமே.

**ப-ரை:**

ஐய- ஐயனே; என் எம்பிரான்- என்னுடைய எம்பிரானே; மை கலந்த கண்ணி பங்க- அஞ்சனம் தோய்ந்த கண்களையுடைய உமையம்மையை ஒரு கூற்றில் உடையவனே; வஞ்சனேன் நின்னது அல்லது மற்று ஓர் பற்று இல்லை- மாயையின் தொடர்புடைய எனக்கு நினது பற்றுக்கோடேயல்லாமல் பிறிதொரு பற்றுக்கோடும் இல்லை, அங்ஙனம் அறிந்திருந்தும்; பொய்ம்மையேன்- பொய்யன்புடையவனாகிய யான்; பொய் கலந்தது அல்லது இல்லை- பொய்யாகிய மாயை என்னைச் சார்ந்ததல்லாமல் வேறு குற்றமும் இல்லேன்; நின்கழற்கண் மெய் கலந்த அன்பர் அன்பு- நினது திருவருளாகிய திருவடிக்கண் வந்து சார்ந்து மெய்ம்மையாகவே இரண்டறக் கலந்த மெய்யடியார்களது அன்பே; எனக்கும் ஆகவேண்டும்- பொய்ம்மையேனாகிய எனக்கும் உண்டாகும்படி அருள் செய்தல் வேண்டும்.

ஐயனே, என் எம்பிரான், "கண்ணி பங்கனே, வஞ்சனேனுக்கு நின்னையல்லாது வேறோர் பற்றுக்கோடு இல்லை. அங்ஙனம் அறிந்தும் பொய்யன்பினையுடையவனாகிய யான் பொய்யாகிய மாயை என்னைச் சார்ந்ததல்லாமல் வேறு குற்றமும் இல்லேன்; ஆதலால் நின் திருவடிக்கண் வந்து கலந்த மெய்யடியார்களது மெய்யன்பே எனக்கும் உண்டாகும்படி அருள் செய்தல் வேண்டும் என்பதாம்.

வஞ்சனேன் நின்னது அல்லது மற்றொர் பற்று இல்லை என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. அடிகள் தம்மை வஞ்சனேன் என்றலை "வஞ்சனேற் குய்தலாவது", "வஞ்சனேனை ஆண்டு கொண்ட நின்னதாள்" (சத 77:80) "வஞ்சனே னிங்கு வாழ்கிலேன் கண்டாய்" (வாழாப்6) என வருவனவற்றினுங் காண்க. அடிகள் இறைவனையே யன்றிப் பிறிதொன்றையும் பற்றுக்கோடாகக் கொண்டிலர் என்பதை,

"மற்றோர் பற்றிங் கறியேன் போற்றி" போற்றி 155.
"நின்னலால் பற்று மற்றெனக் காவதொன்றினி உடையனோ" சத 97.

"எம்பரனே பற்று நான் மற்றிலேன் கண்டாய்" வாழா 1.
"பண்ணினேர் மொழியாள் பங்கநீ யல்லால்
பற்று நான் மற்றிலேன் கண்டாய்" வாழா 5.

என வருவனவற்றாலுமறிக. வஞ்சனேன் என்பதற்கு மாயையின் தொடர்புடைய எனக்கு என நான்காவது விரிக்க. இனி, இல்லை என்பது இரு திணை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாகிய எதிர்மறைக் குறிப்புவினை முற்றாகலின் வஞ்சனேன் நின்னது அல்லது மற்றொர் பற்று இல்லை என்பதற்கு மாயைத் தொடர்புடைய யான் நின்பற்றல்லது பிறிதொரு பற்று இல்லேன் எனவும் உரைக்கலாம்.

பொய்ம்மையேன் பொய்கலந்ததல்லதில்லை என மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்க. பொய் கலந்தது அல்லது இல்லை என அடிகள் கூறியது நிலையில்லாத உடம்பும் அது முகந்து நின்ற பிராரத்த வினையும் தமக்கு உளவாதல் பற்றியாகும்.

மைகலந்த கண்ணி என்றது உமையம்மையை. "மை விரவு கண்ணாள்" (நாவு 312:3) என வருதலுங் காண்க. இறைவன் மெய்யன்பரைத் தன் திருவடிக்கீழ்ச் சேர்த்துக் கொள்ளத் திருவருட் சக்தியோடு இயைந்து நின்றமை தோன்ற "மைகலந்த கண்ணி பங்க" என்றார். வந்து கலந்த என இயையும்.

கழற்கணே கலந்த அன்பர் என்க. அன்பர் அன்பு எனக்குமாக வேண்டுமென அடிகள் வேண்டிக் கொண்டது, அதுவே திருவடிக் கண் இரண்டறக் கலத்தற்கு ஏதுவாதல் பற்றி என்க.

"அன்போ டுருகி அகங் குழை வார்க்கன்றி
என்போல் மணியினை எய்தவொண் ணாதே" (272)
"ஆர்வம் உடையவர் காண்பர் அரன் தன்னை
ஈரம் உடையவர் காண்பர் இணையடி" (273)

எனத் திருமந்திரத்து வருதல் காண்க.

இதன்கண் மெய்கலந்த அன்பர் அன்பு எனக்குமாக வேண்டும் என்றதனால் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம்பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

**78 வேண்டும் நின்க ழற்கண் அன்பு பொய்மை தீர்த்து மெய்ம்மையே**
**ஆண்டு கொண்டு நாயி னேனை ஆவ வென்ற ருளுநீ**
**பூண்டு கொண்ட டிய னேனும் போற்றி போற்றி யென்றும் என்றும்**
**மாண்டு மாண்டு வந்து வந்து மன்ன நின்வ ணங்கவே.**

**ப-ரை:**

மன்ன- என் அரசே; நாயினேனை- நாயைப் போன்ற இழிந்தவனாகிய என்னை; ஆவ என்று பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே ஆண்டு கொண்டு அருளும் நீ- ஆஆ என்று இரங்கியருளி பொய்ம்மையாகிய உலகப் பற்றை ஒழித்து மெய்ம்மையாகவே ஆட்கொண்டருளியநீ; அடியனேனும் பூண்டு கொண்டு- நின் அடிமையாகிய யானும் நின் தொண்டினை மேற்கொண்டு; போற்றி என்றும் போற்றி என்றும்- வணக்கம் என்றும் வணக்கம்

என்றும் பன்முறை கூறிக்கொண்டு; மாண்டு வந்து மாண்டு வந்து- பன்முறை இறந்து பிறந்து இறந்து பிறந்தாயினும்; நின் வணங்க- நின்னை மறவாது வணங்கும் பொருட்டு; நின் கழற்கண் அன்பு வேண்டும்- நின் திருவடிக்கண் அன்பினைத் தந்தருள வேண்டும்.

மன்ன! நாயினேனை ஆஆ என்று இரங்கியருளி பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையாகவே ஆட்கொண்டருளிய நீ நின் அடிமையாகிய யானும் நின் தொண்டினை மேற்கொண்டு- வணக்கம் என்றும் வணக்கம் என்றும் பன்முறை கூறிக்கொண்டு பலமுறை இறந்து பிறந்து இறந்து பிறந்தாயினும் நின்னை மறவாது வணங்கும் பொருட்டு நின் திருவடிக்கண் அன்பினைத் தந்தருள வேண்டும் என்பதாம்.

வேண்டும் நின்கழற் கன்பு என்பதில் வேண்டும் என்பதற்குத் தந்தருள வேண்டும் என ஆற்றலால் ஒருசொல் வருவித்துரைக்கப்பட்டது. பொய்ம்மை என்றது நிலையில்லாத அகப்புறப் பற்றுக்களை.

மெய்ம்மையே ஆண்டு கொண்டு என்றது, "கண்ணார நீறு இட்ட அன்பரோடு யாவரும் காண" (சத 49) வெளிப்படையாக ஆட்கொண்டமையைக் குறித்தது. ஆ, ஆ என்னும் இரக்கக் குறிப்புச் சொல் ஆவ எனச் செய்யுள் நோக்கிக் குறுகி நின்றது. "அளித்து வந்தெனக் காவவென்றருளி" (செத்திலாப் 10) எனப் பிறாண்டு வருதல் காண்க.

நாயினேனை ஆவவென்று பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையே ஆண்டு கொண்டு அருளுநீ என இயைத்து நாயினேனை ஆவா வென்று இரங்கியருளி பொய்ம்மை தீர்த்து மெய்ம்மையாகவே ஆட்கொண்டருள்வாயாக என உரைப்பாருமுளர். அங்ஙனம் உரைப்பின் அடிகள் இன்னும் இறைவனால் ஆட்கொள்ளப் பெற்றிலர் என்றும் அதனால் தம்மை ஆட்கொள்ள வேண்டுகின்றார் என்றும் பொருளமையும். இறைவனால் ஆட்கொண்ட பின்னரே இத் திருவாசகத்தைப் பாடியருளும் அடிகள் ஆட்கொண்டருள வேண்டும் என்றல் வேண்டா கூற்றாகும். அடிகள் இத்திருப்பாட்டில் வேண்டிக் கொள்வது இறைவன் தம்மை உடனேயே தன்பால் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பது. பிராரத்த வினையுண்மையால் அது முடியாதெனில் மாண்டு மாண்டு வந்து வந்தாயினும் போற்றி என்றும் போற்றி என்றும் நின்னை மறவாது வணங்குதற்குரிய நின்கழற் கண் அன்பினைத் தந்தருள வேண்டும் என்பது.

அடியனேனும் என்பதில் உம்மை, நின் திருவடிப்பேற்றை உடனே பெறும் பக்குவமில்லாத வனாகிய யானும் என இழிவு சிறப்பு. போற்றி போற்றி என்றும் என்றும் என்பதைப் போற்றி என்றும் போற்றி என்றும் என இயைத்து வணக்கம் என்றும் வணக்கம் என்றும் பலகாற் கூறி எனப் பொருள் கொள்க.

மாண்டு வந்து மாண்டு வந்து எனக் கூட்டி இறந்து பிறந்து இறந்து பிறந்து எனவுரைக்க. பிறந்து என்பதற்குப் பிறந்தாயினும் என ஒரு சொல் ஆற்றலால் வருவிக்கப்பட்டது. மன்ன, அருளநீ மாண்டு மாண்டு வந்து நின் வணங்க நின்கழற்கண் அன்பு தந்தருள வேண்டும் என முடிக்க.

இதன்கண், வேண்டும் நின்கழற்கண் அன்பு என்றதனால் சாதனமாகிய அன்பு கிடைக்கவே சாத்தியமாகிய ஆனந்தத்தழுந்தல் ஒருதலையாகலின் ஆனந்தத்தழுந்தல் என்னும் எட்டாம் பத்து நுதலிய பொருள் போந்தவாறு காண்க.

(தொடரும்...

*சொர்க்கத்தில் அடிமையாய் இருப்பதைவிட நரகத்தில் அரசனாய் இரு.*

# சமயமும் சமுதாயமும்

– திரு குமாரசாமி ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள் –

உலகில் மனிதராகப் பிறந்து, மனிதராக வாழ்ந்து, உயர் நிலையைப் பெற்றுக்கொண்ட மாண்புமிகு ஞானிகளும், தீர்க்கதரிசிகளும் தங்கள் தீர்க்கதரிசனத்தில் கண்டறிந்த உண்மைகளை கிறிஸ்துவுக்கு முன் நான்காயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் எல்லோருமே மேன்மையடையும் பொருட்டு மக்களுக்காகக் கூறி வைத்தவைகள்தான் வேதங்கள். மற்றவர்களும் உயர்நிலை அடைந்து, உயர் ஞானிகளாக ஆகவேண்டும், ஆத்மீக விடுதலை பெற்று முத்தி இன்பத்தை அனுபவிக்க வேண்டும் என்ற உயர்ந்த நோக்கில்த்தான் அந்த உண்மைகளையும், உயர்நிலை அடையும் வழிகளையும் எங்களுக்கு எடுத்துக் காட்டியுள்ளனர். அதைச் செயற்படுத்துகின்ற நிறுவனங்கள்தான் ஆதீனங்களும் ஆலயங்களும்.

உலக நாடுகளிலுள்ள மக்களின் வெவ்வேறு மொழி, கலை, கலாசாரம், காலநிலை ஆகியவற்றிற்கமைய, சமயக் கொள்கைகளும் கடைப்பிடிப்புக்களும், செயற்பாடுகளும் ஒன்றுக்கொன்று மாறுபட்டதாயிருக்கின்றன. இது இயல்புதான். இதில் எது சரி, எது பிழை, எது நல்லது, எது தீயது என்று நன்கு கற்றறியாமல் மேலெழுந்த வாரியாகச் சொல்வதற்கில்லை.

மக்களின் ஆத்மீக வளர்ச்சி பல படித்தரங்களாக இருக்கின்றன. ஆகவேதான் சமய நெறிகளிலும் வேறுபட்ட பல்வேறு சாதனைகள் கூறப்பட்டிருக்கின்றன. சைவ சமயத்தில் சரியை, கிரியை, யோகம், ஞானம் என நான்கு பெரும் பிரிவுகள் கூறப்பட்டுள்ளன. அதில் யோகத்தை எடுத்துக்கொண்டால் பக்தி யோகம், கர்மயோகம், ராச யோகம், ஞான யோகம் என நான்கு பிரிவுகள் இருக்கின்றன. பக்தி யோகத்திலும் பல பிரிவுகள் இருக்கின்றன. அதில் ஒரு பிரிவுதான் ஆலய வழிபாடு. ஆத்மீக வளர்ச்சியில் மிகவும் குறைந்த நிலையில் உள்ளவர்களுக்கு இது மிகவும் ஏற்புடையதாகவும், பின்பற்றக் கூடியளவு இலகுவானதாகவும் இருக்கும். ஆலயங்கள்தான் சமயங்கள், ஆலயத்துக்குப் போகின்றவர்கள்தான் சமயத்தவர்கள் என்றெல்லாம் எண்ணுவது பெருந்தவறு.

மக்களின் உடலில் ஏற்படும் நோய்களுக்கு வைத்தியம் செய்வதற்காக அமைக்கப்பட்ட நிறுவனங்கள்தான் வைத்தியசாலைகள். மக்களின் அறிவு வளர்ச்சிக்காக கல்வியைக் கற்பதற்கு நிறுவப்பட்டவைகள்தான் பள்ளிக்கூடங்கள். அதேபோன்று மக்களுடைய ஆத்மீக வளர்ச்சிக்காக, ஆத்மீக சாதனைகள் செய்வதற்குரிய நிலையங்களாக அமைக்கப்பட்டவைகள்தான் ஆலயங்கள். இதில் கருத்து வேற்றுமைகள் ஏற்பட இடமில்லை. ஒரு இடத்தில் மற்றொன்றை எதிர்பார்ப்பது தவறு.

சைவ சமயத்தவர்களில் பெரும்பாலானோர் தங்களுடைய சமயத்தையும், சமய தத்துவங்களையும், சமயக் கடைப்பிடிப்புக்களையும் அறியாதவர்களாக இருக்கிறார்கள். அறிந்து கொள்வதற்குரிய வாய்ப்புகளும் அவர்களுக்கு மிகவும் குறைவாகவே உள்ளன. இதன் காரணமாகத்தான், ஏமாற்றுப் பேர்வழிகளின் சூழ்ச்சிக்கு ஆளாகி தங்களையும் தங்கள் சமூகத்தையும் அழித்துக்கொள்ளக்கூடிய அளவுக்கு, வேறு வழிகளில் சென்று விடுவதைப்

பார்க்கக்கூடியதாக இருக்கிறது. தூண்டிலில் இருக்கின்ற இறாலைத்தான் பார்க்கிறார்களே தவிர, இறாலினுள் தூண்டில் இருக்கிறதென்பது இவர்களுக்குத் தெரியாது.

சைவ சமயத்தவர்கள் மிக ஆழமாகச் சிந்திக்க வேண்டும். நம்மவர்கள்மீது கொண்ட உண்மையான அன்பும் அனுதாபத்தினாலும்தான் பல மேலைத்தேச நாடுகளிலெல்லாம் இருந்து வந்து எங்களுக்கு ஆசை வார்த்தைகள் கூறுகின்றார்களா? ஒருபோதுமில்லை. நாங்கள் இப்போது அறிவியல் அனாதைகளாக இருப்பதைப் பயன்படுத்தி, நம்மவர்களது வேதனைகளையும் சோதனைகளையும் தமக்குச் சாதகமாக்கி நம்மைப் பலிக்கடாக்களாக்கும் கசாப்புக்கடை முதலாளிகளாகவே வருகின்றார்கள். அவர்கள், நம்மவரை ஏமாற்ற முதலைக் கண்ணீர் வடிக்கிறார்கள் என்பதை சைவர்கள் அனைவரும் உணரவேண்டும்.

"தகை சால் முற் பிறப்பில் ஆன்ற தருமம் நன்கியற்றினோர்கள் ஒக்கவிப்பிறவியில்
இன்பம் ஒருங்கனுபவிப்பர், இன்றேல் மிக்க வெந்துயரத்தாழ்வார்"

திருக்குறளில் இதன் பொருளைத் தெய்வப் புலவர் திருவள்ளுவரும் பின்வருமாறு விளக்குகிறார். அதாவது,

"பிறர்க்கு இன்னா முற்பகல் செய்யின் தமக்கு இன்னா
பிற்பகல் தாமே வரும்"

என நவில்கின்றார்.

ஆகவே, இவ்வுலகில் வாழுகின்ற எல்லா மக்களும் தாங்கள் அனுபவிக்கின்ற இன்ப துன்பங்களுக்கு அவரவர்கள் முன்பு செய்த நல்வினை, தீவினைகளின் பிரதிபலன்கள்தான் காரணம் என அறுதியிட்டுக் கூறப்படுகிறது. அதுபோல்,

"தீதும் நன்றும் பிறர் தர வாரா, நோதலும் தணிதலும் அன்னோரன்ன, என்ற செய்யுளில்த்தான் தான் செய்த வினை தாமே அனுபவிப்பர்" என்கின்றார் கணியன் பூங்குன்றனார்.

எனவே சான்றோர் தீர்க்கதரிசனத்தின் பிரகாரம், இதுதான் உலக நியதி. ஒருவருடைய வினைப்பயனில் மற்றவர் பங்கு போட்டுக்கொள்ள முடியாது. எவராலும் மாற்றிவிட முடியாது. எவராலும் மன்னித்து விடவும் முடியாது.

ஆகவே "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்ற நல்வாக்குக்கமைய உலக மக்கள் எல்லோரும் ஒரு கடவுளின் கீழ் ஒன்றுபட்டவர்களாக, ஒற்றுமையாக, சகோதரர்களாக, கடவுளினுடைய குழந்தைகளாக வாழவேண்டும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே, நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே"

நம்மவர் யாவரும் சமயத்தின் பெயராலோ, அரசியலின் பெயராலோ, சாதியின் பெயராலோ குலத்தின் பெயராலோ மொழியின் பெயராலோ அல்லது தொழிலின் பெயராலோ உயர்வு தாழ்வு ஒப்புநோக்கிப் பிரிந்து வாழ முற்பட்டால் அதன் விளைவு அழிவாகவே முடியும். இதில் மாற்றுக் கருத்திற்கு இடமில்லை.

கடவுளின் பெயரால் நோய்களைத் தீர்ப்பு, பேய்பிசாசு ஓட்டல், வறுமையை விரட்டல், வேலைவாய்ப்பு, திருமண இணைப்பு, வீடு காணி பணம் தருவதாகப் பலவிதப் போலி ஆசை வார்த்தைகள் கூறி பாசாங்காகச் செபித்து குரானை அல்லது விவிலியத்தை கையில் கொடுத்து மக்களை ஏமாற்றி மதம் மாறச் செய்வார்கள், இவ்வாறானவர்கள் எப்போதும் நம்

தமிழ் சைவ மக்களை ஒரு காலமும் மீள முடியாத பேரழிவுக்கு அழைத்துச் செல்கிறார்கள் என்ற உண்மையை யாவரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும்.

"எப்பொருள் யார் யார் வாய் கேட்பினும்
அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு"

ஆகவே யார் எதைக் கூறினாலும் மெய்ப்பொருள் காணக்கூடிய அறிவு உங்களுக்கு உண்டு. கடவுள் தத்துவத்தை யார் கூறினாலும், எந்த வேதம் கூறினாலும் அதை நன்கு செவிமடுத்துக் கேளுங்கள். இந்த உரிமை உங்கள் எல்லோருக்கும் உண்டு. ஆனால் உங்கள் அறிவினைப் பயன்படுத்தி மெய்ப்பொருள் என்ன என்பதை அறிந்து, அதன்படி வாழக் கற்றுக்கொள்ளுங்கள். அறிவு மயக்கமடைந்து தீய கயவர்களின் பின்னால் போய்விடாதீர்கள். தீயவர்கள் உங்களை நடுவழியில் விட்டுவிடுவார்கள். மீண்டும் திரும்பி வரமுடியாதளவு, உற்றார் உறவினர்களும் உங்களைக் கழித்து விடுவார்கள். ஒவ்வொருவரும் தம் வாழ்க்கையின் நடுவழியில் நின்று திண்டாட வேண்டியவர்களாவீர்கள். இனம் பிரிந்த குரங்கினுடைய நிலைதான் உங்களுக்கும் ஏற்படும். எனவே இதுபற்றி அனைவரும் நன்கு சிந்தியுங்கள்.

பொய், களவு, கொலை, புலாலுண்ணல், போதை, காமம், மது, மாச்சர்யம், சூது, வாது, பொறாமை, வஞ்சனை, பேராசை, கோள் சொல்லல், சினம், கோபம் போன்ற தீய பழக்கங்களை உடைய மக்கள்தான், ஆத்மீக வழியில் முன்னேற முடியாது மீண்டும் மீண்டும் பிறவிப்பிணிக்கு ஆளாகித் தவிக்கிறார்கள்.

நீங்கள் எந்த மதக் கொள்கைகளை உடையவர்களாக இருந்தாலும் மேற்கூறிய தீய பழக்கவழக்கங்களிலிருந்து விடுபடாவிட்டால், எங்கு ஓடினாலும், யார் பின்னால் போனாலும், எத்தனை பிறவிகள்தான் எடுத்தாலும், நிச்சயமாக ஒருபோதும் ஆத்மீக விடுதலை அடையமாட்டீர்கள்.

சைவ சமயத்தவர்களுக்கு உபநிடதங்கள், பிரமசூத்திரம், பகவத்கீதை, திருமுறைகள், திருக்குறள், திருவருட்பா, திருப்புகழ், திருப்பாவை, திருமந்திரம் ஆகியன பெரிய வேதங்களாகக் கிடைத்திருக்கின்றன. இவைகளைப் படித்து உணரும் வாய்ப்பு எல்லோருக்கும் கிடைப்பதில்லை.

ஆனாலும், தாமாக முயற்சி செய்தோ அல்லது படித்தவர்களிடமிருந்தும் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். முயற்சி செய்தால் முடியாததில்லை. அதைச் செய்யாமல் நமது சைவத்தையும் சைவக் கொள்கைகளையும், குறை கூறுவதும் குறைகூறக் கேட்பதும் எவ்வளவு அறியாமை, கையில் வெண்ணெய் இருக்க நெய் தேடி அலைந்த மூடனுடைய நிலைக்கு நீங்கள் ஆளாகலாமா?

பாமர மக்கள் சைவ அறிவை விருத்தி செய்துகொள்ளக்கூடிய வகையில் ஆலயங்களும், சமய ஸ்தாபனங்களும், சமயத் தலைவர்களும், சமய அறிஞர்களும் செயற்படவேண்டும் என்று கூறி வைக்க விரும்புகிறேன்.

ஆகவே நீங்கள் உங்கள் நாளாந்த வாழ்வில், உங்களிடமுள்ள தீய பழக்கவழக்கங்களை விலக்கி நல்ல பழக்கவழக்கங்களை விருத்தி செய்து வருவீர்களானால், நிச்சயமாக உயர்நிலையை அடைவீர்கள், கடவுள் அருளைப் பெறுவீர்கள். எல்லா நலன்களையும் பெற்று இன்புற்று வாழ்வீர்கள். பிறவிப்பிணியிலிருந்து விடுபடுவீர்கள், கடவுளைக் காண்பீர்கள் நீங்களும் கடவுளாக மாறிவிடுவீர்கள்.

*கோபம் வரும்போது அதனை அடக்கி ஆள்வதே வீரமாகும்.*

மனிதப் பிறவியின் நோக்கமே ஆத்மீக விடுதலைதான். இந்த நோக்கத்தைக் குறிக்கோளாகக் கொண்டு வாழுங்கள். இந்தப் பிறவியிலேயே ஆத்மீக விடுதலையை அடைந்து விட வேண்டும் என்று உறுதி பூணுங்கள். நாளை நாளை என்று காலத்தைக் கடத்தாது இன்றே முழு நம்பிக்கையுடன் ஆத்மீக சாதனையில் ஈடுபடுங்கள். ஆத்ம ஞானிகளை அடைந்து, அவர்களின் உபதேசங்களைப் பெறுங்கள். நிச்சயம் இப்பிறவியிலேயே நீங்களும் அந்த உயர்நிலையை அடைவீர்கள். பேரின்பப் பெருவாழ்வு கைகூடும் பல கோடி ஆயிரம் பிறவிகளின் பின்பு நமக்குக் கிடைத்த மானிடப் பிறவியை எக்காரணங் கொண்டும், வீணாக்கி விடாதீர்கள். அடுத்த பிறவி மனிதப்பிறவியாயிருக்கும் என்பதற்கு எவ்வித ஆதாரமுமில்லை. முயற்சி செய்யுங்கள். முயற்சி திருவினையாக்கும். காலம் மிகவும் வேகமாகக் கழிந்து கொண்டிருக்கிறது. மரணம் எந்த நேரத்திலும் ஏற்படலாம். உலக மாயையில் மயங்கியது போதும். மிகுதியாயுள்ள காலத்தையும் அவப்பொழுதாக்கிக் கொள்ளாதீர்கள். எல்லாம் வல்ல தெய்வம் நல்லோரை எப்பொழுதும் பாதுகாக்கும். ஆகவே எதிர்வரும் காலங்களை மிகப் பயனுடையதாக அனைவரும் உருவாக்கிக் கொண்டு திட்டவட்டமாகவே நல்ல வண்ணம் வாழும் இறவாப் பெருநிலை வாழ்வைப் பாதுகாக்கும் தவப்பொழுதாக்கிக் கொள்ளுங்கள்.

"குருட்டினை நீங்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடும் குருடும் குருட்டாட்டம் ஆடி
குருடும் குருடும் குழி விழுமாறே"

மேற்கூறிய கருத்துக்கள் யாவையும், மிகச் சரியான முறையில் போதிக்கின்ற குருவை, மாணாக்கர்கள் தேர்ந்தெடுத்துக்கொண்டு, ஆத்மீக சேவையைச் சாதித்துக்கொள்ளல் வேண்டும் என்கிறார் "திருமந்திரம்" தந்த திருமூலர். அல்லாத போதனைகளெல்லாம் வெறுமனே தம்மைத் தாமே அழித்து ஒழித்து விடும் நரகக் குழியிடையே நம்மை மீள முடியாதவாறு தள்ளி வீழ்த்திவிடும் என்பதே மேற்காணும் திருமந்திரத்தின் மெய்ப்பொருள் ஆகும்.

## செல்வச் சந்நிதிக்கு வந்து வந்து வணங்குவேன்

சந்ததமும் உனை நினைத்துப் பாடுவேன் - முருகா
சகல சக்தி உள்ள வேல் என்பதைக் காணுவேன்
பந்த பாச உறவு இருந்தாலும் (உனை) நாடுவேன்
பன்னிருகை வேலவா உனையே வந்து வந்து வணங்குவேன்
செல்வச்சந்நிதியில் விரும்பி வந்து குடிகொண்டவா
சகலவித நோய் பிணி பாவம் யாவும் நீக்கி ஆள்பவா
நல்லவர்கள் பக்கம் என்றும் நின்றருள்பவா
நடு இரவு வேளையிலும் எனை எழுதவைப்பவா முருகா.

-சின்னப்பு தனபாலசிங்கம்-

# ஆனந்தக் கிருஷ்ணனின் அற்புத லீலைகள்

(தொடர்ச்சி...)

– திருமதி சிவனேஸ்வரி பாலகிருஷ்ணன் அவர்கள் –

## காளிய (காளிங்க) நர்த்தனம்

ஒருநாள் கிருஷ்ணர் நண்பர்களுடன் யமுனா நதிக்கரைக்குப் போனார். சிறுவர்கள் தாகத்தால் தண்ணீர் குடித்தார்கள். தண்ணீர் விஷத்தன்மை கொண்டதால் அவர்கள் இறந்து வீழ்ந்தார்கள். கிருஷ்ணரின் அமுதம் பொழியும் பார்வையால் அவர்கள் உயிர்பெற்று எழுந்தார்கள். யமுனா நதியில் ஒரு மடு இருக்கிறது. அங்கே காளியன் என்ற விஷப் பாம்பு இருக்கிறது. அதன் விஷசுவாலையால் தண்ணீர் விஷமாகி, விஷமயமான காற்றால் அங்கே ஒரு ஜீவனும் வாழமுடியாமற் போனது. அந்தப் பாம்பை அடக்க அவதரித்த பகவான் கிருஷ்ணர் இடுப்பில் ஆடையை இறுக்கிக் கட்டிக்கொண்டு அம் மடுவுக்குள் குதித்தார். குதித்த வேகத்தில் அலைகள் எழும்பி நூறு வில்லளவு தூரத்துக்குப் பரவியது. அப்படியே மடுவில் நீந்தி விளையாடினார். காளியன் சீற்றத்தோடு மேலெழும்பி வந்தான். பயமற்று விளையாடுகின்ற அழகிய கிருஷ்ணனை கண்டபடி கடித்து, தன் உடலினால் சுற்றி வளைத்தான். இதனைக் கண்ட சிறுவர்கள் துக்கம் தாங்காமல் மயங்கி வீழ்ந்தார்கள். பசுக்களும் எருதுகளும் கதறின.



கோகுலத்தில் பெருத்த அபசகுனங்கள் தோன்றின. நந்தகோபர் எல்லாரும் பயந்து பெரியவர்கள் குழந்தைகள் எல்லாரும் கிருஷ்ணரைத் தேடிக்கொண்டு கிளம்பினார்கள். கிருஷ்ணருடைய மகிமை தெரிந்த பலராமர் சிரித்தபடி இருந்தார். தூரத்தே வரும்போது பாம்பால் சுற்றப்பட்ட கிருஷ்ணரையும், திகைத்து மதிமயங்கிய சிறுவர்களையும், கதறுகின்ற பசுக்களையும் கண்டு சிலர் மூர்ச்சித்து வீழ்ந்தனர். தனக்காக எல்லாரும் துயரப்படுவதைக் கண்ட கிருஷ்ணர் பாம்பிடமிருந்து விடுவித்துக்கொண்டு மேலே கிளம்பினார். காளியன் தன் படங்களைத் தூக்கிக்கொண்டு கொடிய விஷசுவாலையுடன் முறைத்தான். கிருஷ்ணரோ கருடன்போல் பாம்பைச் சுற்றிவந்து விளையாடினார். அவனைக் குனியச் செய்து அவன்தலைமீது ஏறினார். அவனுடைய தலைகளிலுள்ள மாணிக்கங்களால் ஏறிநிற்கும் பகவானுடைய பாதங்கள் செந்தாமரைகளென ஒளிர்ந்தன. அத் திருப்பாதங்களால் கூத்தாடினார் கிருஷ்ணர். ஸ்ரீ கிருஷ்ணர் கொடிய காளியன்மீது ஜதி தாளத்துடன் ஆனந்த நர்த்தனமாடினார். அந்த நடனத்தைப் பார்ப்பதற்கு தேவர்கள், கந்தர்வர்கள் பக்கவாத்தியங்களுடன் வந்துவிட்டார்கள். காளியனுக்கு நூற்றொரு தலைகள். எந்தத் தலை வணங்காமல் தூக்கிறதோ, அந்தத் தலைமீது பகவான் குதித்து மிதித்து நடனமாடிய காட்சியைத் தேவர்களும் கோகுலவாசிகளும் பார்க்கச் செய்தார். காளியன் வாயிலிருந்தும், மூக்கிலிருந்தும் ரத்தம் பெருகியது. காளியனுக்கு தன்மீது நடனமாடுவது ஸ்ரீமத் நாராயணரே எனப் புரிந்தது. அக்கணமே மனதால் அவரைச் சரணடைந்தான். அவனுடைய மனைவியரும் விரைந்து வந்து தங்கள் குழந்தைகளோடு கிருஷ்ணரைச் சரணடைந்தார்கள்.

பகவானே! தீயவர்களைத் தண்டிப்பதற்காகவே தாங்கள் அவதரித்துள்ளீர்கள். குற்றம் செய்த காளியனைத் தண்டித்தது முறையானதே. இந்தத் தண்டனைகூட அனுக்கிரகமல்லவா? காளியன் முற்பிறவியில் என்ன தவம் செய்தானோ தங்களுடைய பாத தூளி அவனுக்குக் கிடைத்திருக்கிறது. பகவானே! காளியன் உயிர் போய்க்கொண்டிருக்கிறது. தாங்கள் கருணை காட்டி எங்கள் கணவரை எங்களுக்குத் தாருங்கள் என வேண்டினர். கிருஷ்ணர் தனது கால்களால் மிதிப்பதை நிறுத்தினார். காளியன் போன உயிர் வரப்பெற்று, மிகவும் சிரமப்பட்டு வணங்கினான்.

"பகவானே! கோபம் சர்ப்பங்களாகிய எங்களது பிறவிக்குணம் தங்கள் மாயையைக் கடக்க நாங்கள் வல்லவர்களல்லவே? எனவே எங்களைத் தண்டிக்கிறீர்களோ, கருணை காட்டுகிறீர்களோ தங்கள் விருப்பம் எதுவோ அதன்படி செய்யுங்கள்" என வேண்டினான். அதற்குப் பகவான், "ஸர்ப்பமே நீ இங்கிருக்கக்கூடாது. இந்த நதியை பசுக்களும், மனிதர்களும் அனுபவிக்கட்டும். நீ உன் உறவினர்களுடனும் மனைவி மக்களுடனும் தாமதிக்காது ஸமுத்திரத்திற்குப் போ. எந்த மனிதன் நான் உனக்குச் சொன்ன கட்டளையை இரண்டு ஸந்தியா காலங்களிலும் தியானிக்கிறானோ, அவன் உங்களால் பயத்தை அடையமாட்டான்" என்றார்.

மேலும் கிருஷ்ணர் நான் விளையாடிய இந்த மடுவில் எவன் உபவாசமிருந்து நீராடி தேவர்களுக்குத் தர்ப்பணம் செய்வானோ, என்னை நினைத்துப் பூஜை செய்வானோ அவன் அனைத்துப் பாவங்களிலிருந்தும் விடுபடுவான். காளியா, கருடனுக்குப் பயந்துதானே நீ ரமணகத் தீவை விட்டுவிட்டு, இந்த மடுவில் வந்து வாசம் செய்கிறாய். கருடனைக் கண்டு அஞ்சவேண்டாம். உன் தலைகளில் என் திருவடிகளின் அடையாளம் இருப்பதால் கருடன்

*தோல்வியைக் கண்டு அஞ்சுபவர்களிடமிருந்து வெற்றி தானாகவே ஒதுங்கிக் கொள்கிறது.*

உன்னைக் கொல்லமாட்டான் என்றார். காளியனும், மனைவியரும் பேருவகையோடு கிருஷ்ணருக்குப் பூஜை செய்தனர். பின் சமுத்திரத்திற்குப் போனார்கள். கிருஷ்ணருடைய அருளால் யமுனாநதி விஷம் நீங்கியதாக, அமுதமயமான நீரை உடையதாக ஆனது.

நாக பத்தினிகள் அளித்த திவ்யமாலைகள், வஸ்திரங்களோடும், இரத்தினக் குவியல்களைக் கொண்டு செய்யப்பட்ட அலங்காரங்களோடும் இருந்த கிருஷ்ணனை, இழந்த உயிரைத் திரும்பப் பெற்றவர்கள்போல கோபர்கள் கட்டியணைத்துக் கொண்டார்கள். பலராமரும் கிருஷ்ணனை அணைத்துச் சிரித்தார். மயக்கம் தெளிந்த யசோதை கிருஷ்ணரை மடியில் அமர்த்தி ஆரத்தழுவியபடி ஆனந்தக் கண்ணீர் சொரிந்தாள்.

அச்சமயம் இருட்டிவிட்டது. பசி, தாகம், களைப்பினால் எல்லோரும் உறங்கிவிட்டார்கள். நடு இரவில் காட்டுத்தீ பரவியது. எல்லோரும் கிருஷ்ணரைச் சரணடைய அவர் அத்தீயை அப்படியே விழுங்கிவிட்டார். இப்போது காளியன்மீது கிருஷ்ணர் ஆடியதைக் கண்டபிறகு கண்ணன் தங்களைப்போல் அல்ல. அசாதாரணமான ஆத்மா என்று புரிந்துவிட்டது. அதனால் காட்டுத் தீ ஏற்பட்டவுடன் அலறாமல், அவர் இருக்கும்போது நாம் ஏன் பயப்படுவானென அவரைச் சரணடைந்தார்கள். அவரும் தனது அமானுஷ்ய சக்தியை வெளிப்படுத்திக் காப்பாற்றினார்.

காலமாகிய வெள்ளத்தில் எதிர்நீச்சல் அடிக்க முடியாமல், சம்சார சாகரத்தில் மூழ்கித் தவிக்கும் நமக்கு, அந்த ஸ்ரீ கிருஷ்ணனின் பாதக் கமலங்கள்தான் ரக்ஷை என்பதனை உணர்த்தினான் காளியன். அஞ்ஞானியாகிய காளியன் பகவானின் பாதங்கள் பட்டு ஞானியானான். அன்று ஸ்ரீராமர் கால்பட்டு கல் உயிர் பெற்றது. வாமனனாக வந்த அவன் கால்பட்டு மகாபலி மன்னன் விஷ்ணு பதவி பெற்றான்.

காளத்தி நதியே காலமாகிய பிரவாஹம்! அதிலுள்ள மடுவே! ஆணவம், கன்மம், மாயை போன்ற மும்மலங்களாகிய நம் சத்ருக்கள். நாம் காலமாகிய வெள்ளத்தில் சிக்கி, மும்மலங்கள் நிறைந்த அஞ்ஞான வாழ்க்கையில் மூழ்கி, எதிர்நீச்சல் அடிக்கமுடியாமல் தத்தளிக்கும்போது நம்மைக் காத்துக்கொள்வதற்கு ஸ்ரீ கிருஷ்ணனின் பாத கமலங்களைத் தவிர வேறு மார்க்கம் உண்டோ!

ஒருநாள் பிரலம்பன் எனும் அசுரன் பலராமரைத் தூக்கிக்கொண்டு போகும் எண்ணத்தோடு வந்தான். பலராமர் தன் கை முஷ்டியால் ஓங்கி அவன் தலையில் அடித்தார். அவன் பெரும் அலறலோடு மலை சாய்ந்ததுபோல் ரத்தம் கக்கிக்கொண்டு கீழே விழுந்து இறந்தான். கோபர்கள் பலராமரை வாழ்த்தி சந்தோசமாக எல்லோரும் வீடு திரும்பினார்கள்.

காயமலர் நிறவா! கருமுகில் போலுருவா, கானகமா மடுவில் காளியனுச்சியிலே
தூய நடம்பயிலும் என்சுந்தர என்சிறுவா! துங்கமதக்கரியின் கொம்பு பறித்தவனே
ஆய மறிந்து பொருவானெதிர் வந்தமல்லை அந்தரமின்றி அழித்தாடிய தாளிணையாய்
ஆய எனக்கொருகால் ஆடுகசெங்கீரை ஆயர்கள் போரேறே ஆடுக ஆடுகவே.

-பெரியாழ்வார்.

(தொடரும்...

*நமது மனதில் தூய்மை அதிகமாக இருந்தால் வலிமை அதிகமாக இருக்கும்.*

# சான்றோன் ஆக்குதல், தந்தை கடனே

– **திரு குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

சாந்தி, சமாதானம், நிம்மதி, அமைதி ஆகியவை ஒவ்வொரு மனிதனாலும் விரும்பப்படுபவை. மனித இனம் வாழவும், வளரவும் தொடர்ந்து நிலைக்கவும் இவை தேவை. எனவே, இவை மனித உரிமைகள். இவற்றைப் புறக்கணிப்பவர்கள்; பிறர் அனுபவிக்க விடாமல் தடுப்பவர்கள் மனித உரிமைகளை மீறுகின்ற குற்றத்திற்கு ஆளாவர். சாந்தி, சமாதானம் ஆகியவற்றை விரும்பவும், அனுபவிக்கவும் ஒவ்வொருவருக்கும் உரிமை உண்டு. அவற்றின் பெறுமதியை உணருகின்ற சமுதாயமே அபிவிருத்தி பெறுகின்றது. சமூக, பொருளாதார சுபீட்சமும் முன்னேற்றமும் அடைகின்றது.

ஒரு குடும்பத்திலோ, சமூகத்திலோ, நாட்டிலோ அமைதி நிலவவேண்டுமானால் அதன் அங்கத்தவர்களின் ஒத்துழைப்பு அவசியம். அங்கத்தவர்களிடையே பரஸ்பர புரிந்துணர்வு, அன்புடைமை, பிறர்நலம் பேணலில் ஆர்வமுடைமை, நம்பிக்கை என்பன வளரும்போதுதான் அவர்கள் வாழுகின்ற சமூகத்தில் சமாதானத்தை நிலைபெறச் செய்யலாம். சுருக்கமாகக் கூறினால், மனிதர்களுடைய நல்லொழுக்க வாழ்வில்தான் சமாதானத்தைக் காணவும் அடையவும் முடியும். எங்கே மனிதர்கள் நல்லொழுக்கங்களையும், மனிதப் பண்புகளையும் வாழ்க்கையில் மேற்கொள்ளுகிறார்களோ, அங்கே சமாதானம் மலர்ச்சி பெறுகின்றது; அமைதி தழைக்கின்றது. மனித ஒழுக்கத்தைக் கைவிட்டு விட்டுச் சமாதானத்தைத் தேடுவதோ, அமைதியை அழைப்பதோ என்பது பயனற்ற வீண் முயற்சி. இருட்டில் பொருள் தெரியாததுபோல; ஒழுக்கம் குன்றிய சமுதாயத்தில் சமாதானம் இருக்காது. சமாதானத்திற்கு முன்நிபந்தனை, மனிதரின் நல்லொழுக்கம் ஆகும் என்பது நன்கு உணரப்படவேண்டியது.

சமுதாயத்தில் பகைமை, பொறாமை, துன்பம், வெறுப்புணர்வு என்பன ஏற்படுவதற்குச் சமுதாய உறுப்பினர்களிடையே காணப்படுகின்ற ஒழுங்கீனம் என்பனவே காரணம் ஆகும். எனவே, சமுதாயம், நன்நிலையும் சீரும் பெறவேண்டுமாயின் மக்கள் ஒழுக்கப்பண்புகளை ஓம்புதல் அவசியம்.

தாமும் வாழ்ந்து, மற்றையோர்களை வாழ விடுதல் என்கின்ற பண்பினை மனிதகுலம் பேணிவருகிறது. இங்கும் அங்குமாகக் கடந்த காலங்களில் ஒரு சிலரின் பண்புக் குறைவினைச் சுட்டிக்காட்டி, மனிதகுலம் தன்னிலையினின்று தாழ்ந்துவிட்டது என்று கூறமுடியாது. மனித இயல்பு, பண்புகளைப் பேணுவதுதான். எனவே, ஒவ்வொரு மனிதரும், “தான் மனிதன்; மனித இயல்புக்கு மாறானவற்றைச் செய்யக்கூடாது” என்று அடிக்கடி நினைவுபடுத்திக் கொண்டு வாழ்ந்தால், ஒழுக்கத்தை ஓம்புவதில் சிரமம் இருக்காது.

இன்றைய சிறுவர்கள், நாளைய பிரஜைகள். எனவே நற்பிரஜைப் பயிற்சியை இவர்களுக்கு அளிக்கவேண்டிய பொறுப்பும், கடப்பாடும் வளர்ந்தவர்களுக்கு உண்டு. இளைய தலைமுறையினர் விடும் தவறுகளுக்கு மூத்த தலைமுறையினரே பொறுப்பேற்க வேண்டும்.

ஒருமுறை, கிரேக்க தத்துவஞானி பிளேற்றோ வீதி வழியே சென்று கொண்டிருந்தார். சிறுவன் ஒருவன் போவோர் வருவோரிடம் சேஷ்டை செய்துகொண்டிருந்தான். அதைக் கண்ணுற்ற பிளேற்றோ, அந்தச் சிறுவனிடம் ஏதும் பேசவில்லை. நேராக அச்சிறுவனின் தந்தையிடம் சென்ற பிளேற்றோ, அவனைத் திருத்தினான். தந்தையின் தன்மையே மகனைச் சார்கிறது; தந்தையைத் திருத்திவிட்டால் மகன் திருந்திவிடுவான் என்று அறிஞர் பிளேற்றோ எண்ணியே அவ்வாறு செய்தார்.

இந்தச் சம்பவத்தை நோக்கும்போது, நம்மிடையே நெடுங்காலமாக வழக்கில் இருந்துவரும் பழமொழியொன்று நினைவிற்கு வருகிறது. "தொண்டர்கள் செய்த பாவம் தொடர்ந்து தம் குருவைச் சாரும்" என்பதே அந்தப் பழமொழியாகும். தொண்டர்கள், சீடர்கள் தவறாக நடந்தால் அவர்களைச் சரியாக வழிநடத்தாத குருவே அதற்குரிய பொறுப்பினை ஏற்கவேண்டும். இளையவர்கள் ஒழுக்கத்தில் குன்றிக் காணப்பட்டால், அவர்களைச் சரியாக வழிநடத்தத் தவறிய பெற்றோர், ஆசிரியர்கள் சமூகப் பெரியோர்கள் ஆகியோர் அதற்குரிய பொறுப்பினை ஏற்கவேண்டும்.

எனவே, பெற்றோர் தம்மக்களை நன்மக்களாக வளர்க்கவேண்டும். "தந்தை மகற்கு ஆற்றும் உதவி, அவையத்து முந்தியிருப்பச் செயல்" என்கிறார் வள்ளுவப் பெருமான். நல்ல கல்வியை வழங்கி, தம் மக்களைச் சான்றோர் ஆக்குதல் பொறுப்புள்ள தந்தையின் கடன். தமது பிள்ளைகளின் நலன்கருதி எல்லாவகைத் தியாகங்களையும் செய்யப் பெற்றோர் தயங்குவதில்லை. அந்தவகையில் பெற்றோர்கள் தம்மிடமுள்ள தீய பழக்கங்களையும், தீயவற்றையும் தியாகம் செய்வார்களேயானால், அதுவே மிகப்பெரிய தியாகம் ஆகும். பெற்றோர் திருந்தும்போது பிள்ளைகளும் நிச்சயம் திருந்திவிடுவார்கள்.

"தம்மின் தம் மக்கள் அறிவுடைமை மாநிலத்து
மன்னுயிர்க் கெல்லாம் இனிது"

என்பது வள்ளுவர் பொய்யாமொழி.

பெற்றோரைப்போல், இன்னும் சொல்லப்போனால், பெற்றோரைவிட அவர்களின் பிள்ளைகள் அறிவுடையவராகச், சான்றோர்களாக விளங்குவார்களேயானால், இவ்வுலகத்து மன்னுயிர்களுக்கெல்லாம் இனிதாகவும் நன்மை பயப்பதாகவும் அமையும் என்பது வள்ளுவர் கருத்து. ஒரு குடும்பத்தில் பிறந்த மக்கள் அறிவுள்ளவர்களாகவும், ஒழுக்கசீலர்களாகவும், சான்றாண்மை படைத்தவர்களாகவும் விளங்கும்போது, அக்குடும்பத்திற்கு மட்டுமன்றி, சமுதாயம் முழுவதற்கும் நன்மையாகும் என்னும்போது ஒழுக்கத்தின் விழுப்பம் உயர்ந்து போற்றப்படுகின்ற பாங்கினைக் காணலாம். அதனாலேயே, மக்கள் அனைவரையும் விழித்து, "ஒழுக்கத்தை உங்கள் உயிரினும் மேலாக ஓம்புங்கள் என்கிறார் வள்ளுவப் பெருந்தகை.

பெற்றோர்களும் மக்களைப் பெற்று, ஒழுக்கம் நிறைந்தவர்களாக அவர்களை வளர்த்து, சமூகத்திற்கு இனியவை செய்யும் நன்மக்களாக சமுதாயத்தில் அவர்களை விடும்போது, இம்மாநிலத்து மன்னுயிர்க்கெல்லாம் சிறந்த தொண்டினைச் செய்யும் பாக்கியம் பெற்றவர்கள்

ஆகின்றனர். பிள்ளைகளைப் பெற்று வளர்ப்பது தத்தம் நன்மைக்காக மட்டுமன்று; உலகத்து நன்மைக்காகவும் என்பதை மறந்து விடுதல் ஆகாது. அப்போதுதான் மக்கட்பேறு மாபெரும் சமூகத் தொண்டு ஆகின்றது. "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்கும்" நிலையினைப் பெற்றதாய் பெற்றுக்கொள்ளவும்; "இவன் தந்தை என் நோற்றான்" என்று பலராலும் போற்றப்படும் இனிமையை, தந்தை சுவைக்கவும் வேண்டுமானால், சிறுபராயத்திலிருந்தே பிள்ளைகளை நல்லொழுக்கம் நிறைந்தவர்களாக வளர்த்து வரவேண்டும்.

"தக்கார் தகவிலர் என்பது அவரவர்
எச்சத்தால் காணப்படும்"

என்பது குறள்.

பெற்றோரின் தகுதியும் தகுதியின்மையும்; பெருமையும் சிறுமையும் அவரவர் பிள்ளைகளின் ஒழுக்கம், ஒழுக்கவீனம் என்பவற்றைப் பொறுத்தே அமைகின்றன. நல்லொழுக்கமுள்ள பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் பெருமைக்குரியவர்; உலகம் போற்ற வாழ்வர். மாறாக ஒழுக்கம், நடத்தைகெட்ட பெற்றோர்கள் துன்பங்களையும் அடைந்து, பிறர் தூற்றுதலுக்கும் ஆளாகின்றனர்.

நல்ல குடும்பத்தில் பிறந்து வளர்ந்து வருபவர்கள் சிலரும் சந்தர்ப்பம், சூழ்நிலை, சேர்க்கை காரணமாகக் கெட்ட நடத்தையுள்ளவர்களாக மாறிவிடுவதைக் காண்கின்றோம். நல்ல குடும்பம் என்று இங்கு கருதப்படுவது நன்னடத்தை, நற்பண்புகள் நிறைந்த பெற்றோர்களைக் கொண்ட குடும்பத்தையே. அத்தகைய நல்ல குடும்பங்களைச் சார்ந்த பிள்ளைகள் சீரழிந்தால் பெற்றோர் படும் துன்பங்கள் சொல்லி முடியாது. சீரழிவிற்குக் காரணம் இளமையில் வந்துசேரும் கெட்ட சகவாசம்தான். ஓர் அறிஞர், "உன் நண்பர்கள் யார், யார் என்பதைச் சொல்; நீ எப்படிப்பட்டவன் என்று கூறிவிடுகிறேன்" என்றாராம். இது ஒரு பொருள் பொதிந்த கூற்று. நண்பர்கள் ஒத்த இயல்புகளைப் பெற்றிருப்பர் என்ற அடிப்படையில் இவ்வாறு அந்த அறிஞர் கூறியிருப்பர்.

நல்ல நண்பர்கள் கிடைத்துவிட்டால் அது ஒரு பெரும்பேறுதான். மாறாக, நண்பர்கள் தீயவர்களாக அமைந்துவிட்டால், கெடுதியைச் சம்பாதித்தவர்கள் ஆகிவிடுகின்றனர்.

பிறரிடம் காணப்படுகின்ற நல்ல பண்புகள் நல்ல இயல்புகள் என்பவற்றைவிட, அவர்களிடம் காணப்படுகின்ற தீய பண்புகளும். கெட்ட இயல்புகளும் ஒருவரிடம் மிக வேகமாகத் தொற்றியும் பற்றியும் கொள்கின்றன. கெட்டவற்றைக் கற்றுக்கொள்வதில்த்தான் எத்துணை ஆர்வம். எனவே, இளமையில் எத்தகையோரிடம் தம் பிள்ளைகள் நட்புக் கொள்ளுகிறார்கள் என்பதை அறிந்து கொள்ளுதல், தம் பிள்ளைகளின்மீது அக்கறை கொண்ட பெற்றோர்களுக்கு மிக அவசியம். தீயவர்களின் நட்பைக் கொண்டிருப்பார்களேயானால், எந்தவிதத்திலாவது, அந்த நட்பை தொடரவிடாது, முளையிலே கிள்ளியெறிந்து விடுவது பெற்றோர் கடன். வளரவிட்டால் ஆபத்து.

தீமையின் ஈர்ப்பு விசைக்கு இலகுவில் விட்டுக்கொடுக்கும் தன்மை மனிதர்களுடையது. இது மனிதனின் பலவீனம் ஆகும். மனவலிமையினால்த்தான் இத்தகைய பலவீனத்தை இல்லாமல் செய்யமுடியும். அல்லது பெற்றோர், பெரியோர்களின் கண்காணிப்பினாலும் தீமையின் பக்கம் சாராமல் பிள்ளைகளைத் திசை திருப்ப முடியும். எனவே இளம்பராயத்தில் பிள்ளைகளைக்

*விதியின் முன் கெஞ்சாமல் எதிர்த்து வேலை செய்வதே மனித சுதந்திரம்.*

கண்காணித்து அவர்களை நன்மையின் பக்கம் நாட்டம் செல்லச் செய்வது பெற்றோர், ஆசிரியர், சமூகப் பெரியோர் ஆகியோரின் பொறுப்பு ஆகும். இந்தப் பொறுப்பு சம்பந்தப்பட்டவர்களினால் நெகிழவிடப்பட்டு வருவதைத் தற்காலத்தில் உணரமுடிகிறது. அதனால் சமுதாயத்தில் தீமைகள் பெருகுவதையும், தீயோர்கள் மேலாண்மை செலுத்துவதையும் காணமுடிகிறது.

தீயவருடன் நட்புக்கொண்டால் நல்லவன்கூடத் தீயவன் ஆகிவிடுகின்றான். அதிலிருந்து தம்மைப் பாதுகாத்துக்கொள்ள ஒரே வழி தீயவர்களுடன் சகவாசம் செய்யாமல் ஒதுங்கி விடுவதுதான் என்பதை உணர்ந்து கொள்வோமாக.

வாழ்க வையகம்; வாழ்க வளமுடன்"

## வட மாகாண கீதம்

**பல்லவி**

வட மாகாணம் எங்கள் வளர் தாயகம்! - இங்கு
வாழும் எமக்கு அது அறிவாலயம்! (வட)

**அநுபல்லவி**

திடங்கொண்டு உழைப்போர்கள் திகழும் இடம்! - இலங்கைத்
திரு நாட்டின் தலையாகத் துலங்கும் இடம்! (வட)

**சரணம்**

மன்னார், முல்லைத்தீவு, யாழ்ப்பாணமும்
கிளிநொச்சியுடன், வவுனியா மாவட்டங்களும்
என்னாளும் வளஞ்சேர்க்கும் எங்கள் பூமி! - என்றும்
எழிலார் வடமாகாணம் என்னும் பூமி!
(வட)

நிலவளமும், கடல்வளமும் நிறைந்த இடம்! - அன்பு
நெறிகாக்கும் ஆலயங்கள் அமைந்த இடம்!
பலம் கொண்ட மறவர்கள் வாழும் இடம்! - நல்ல
பாவலரும் நாவலரும் வாழும் இடம்!
(வட)

ஒற்றுமையாய் வாழ உறுதி கொள்வோம்! - நல்
ஒழுக்கம் பண்பாடுகளால் உயர்ந்து நிற்போம்!
பற்றோடு உழைத்துமே வெற்றிகள் காண்போம்! - இப்
பாரில் தலை நிமிர்ந்து முன்செல்வோம்!
(வட)

-கி. குலசேகரன்-

*ஆயிரம் அறிவுரைகளை அள்ளி வீசுவதைவிட ஓர் அரிய செயலைச் செய்தல் நலம்.*

# சைவ சமயம் (தொடர்ச்சி...)

– திரு கௌரிகாந்தன் சித்தாந்தன் அவர்கள் –

## சைவ சித்தாந்தம் கற்றல்

சைவ சமயத்தின் முடிந்த முடிவான கருத்துக்களைப் பொதுமக்கள் அறிதலும் அதன்வழி அவர்கள் சாதனையாளர்களாக மாறுவதும் சைவ சித்தாந்தம் கற்றல் என்பதன் பொருளாகக் கொள்ளவேண்டும். இலங்கையில் எழுத்தறிவு வீதம் வரவர உயர்ந்துகொண்டே செல்கின்றது. இலங்கையில் தமிழ் மக்களைப் பொறுத்தவரை இடைநிலை வரையிலாவது கற்காதவர்கள் அரிதென்று கூறலாம். அதிலும் க.பொ.த சாதாரணதரத்தில் சைவ சமய பாட அடைவு உயர்வாகவே உள்ளது. பெரும்பாலானோர் உயர் சித்திபெற வாழ்வியலுடன் சைவம் கலந்திருப்பதும் ஒரு காரணம். இவ்வாறு கற்போர்கள் வாயிலாகவும் சமயம் வளர்க்கும் நிறுவனங்களின் சமயம்சார் நடவடிக்கைகள் மற்றும் சமயச் சொற்பொழிவுகள், புராணபடனங்கள் வாயிலாகவும் பொதுசனங்கள் சைவ சித்தாந்த உண்மைகளை அறிந்துகொண்டே இருக்கின்றார்கள்.

இலங்கையில் காலத்திற்குக் காலம் பல சைவப் பெரியார்கள் சைவ சித்தாந்தக் கல்வியைப் பெரும்பாலானோர்க்கு கிடைக்கச் செய்வதில் பெரும்பணியாற்றி இருக்கின்றனர். வினா விடை முறை, கதை கூறல், நாடகம் மூலம் கற்பித்தல், புராணபடன முறைமூலம் கற்றல்- கற்பித்தல் என்பன சிலவாகும்.

## வினா - விடை முறை

தொன்றுதொட்டு வருகின்ற கற்றல் - கற்பித்தல் முறைகளின் வினா - விடை முறை முக்கியமானதொன்றாகும். குரு - சிஷ்யக் கல்வி முறையிலும் இது பின்பற்றப்பட்டது. வேத உபநிடத காலத்தில் இம்முறையே காணப்பட்டது. சைவ சித்தாந்தக் கல்வி இவ்வாறுதான் போதிக்கப்பெற்றது. ஆறுமுகநாவலரது இரண்டாம் சைவ வினாவிடையில் சைவ சித்தாந்தக் கருத்துக்கள் இலகுவாகவும் தெளிவாகவும் கூறப்பெற்றிருப்பதை அடிப்படையாகக் கொண்டே பொதுமக்களுக்குப் பயன்படக்கூடிய வகையில் புலியூர்க்கேசிகன் அவர்கள் "சித்தி அளிக்கும் சிவநெறி" என்று அரியதொரு நூலை எழுதியுள்ளார். "சிவநெறியை முறைப்படுத்தவும், மக்களிடத்தே வலுவாக்கவும் முயன்றவர்களுள், யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுகநாவலர் அவர்களும், மற்றும் பல சிவநெறிச் செல்வர்களும் எடுத்துக்கூறியுள்ள செய்திகளைத் தழுவியே இந்த நூலை அமைத்துத் தந்திருக்கிறேன்' என்று தமது முன்னுரையில் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது. புலியூர் கேசிகனது நூலிலுள்ள பதி இயல், பசு இயல், பாச இயல், வேதாகம இயல், சைவ இயல், விபூதி இயல், உருத்திராக்க இயல், பஞ்சாட்சர இயல், சிவலிங்க இயல், விரத இயல், நித்திய கருமங்கள், சிவாலய தரிசனம், குரு வழிபாடு, மகேசுர பூசை, அன்பியல் என்ற பதினைந்து இயல்களும் ஆறுமுகநாவலரது இரண்டாம் சைவ வினாவிடையில் உள்ளவாறே அமைந்துள்ளது. உள்ளேயுள்ள வினாவிடைகளிலும் புலியூர்க் கேசிகனின் முயற்சி குறைவென்றே கூறவேண்டும்.

*செயலில்லாத சிந்தனை அழிவைத் தரும்.*

### கதை கூறல்

கி.மு. நான்காம் நூற்றாண்டினைச் சேர்ந்த புராணங்களிலேயே கதைகள்மூலம் சமய தத்துவக் கருத்துக்கள் கூறப்பெற்றிருக்கின்றன. பாமர மக்கள் மத்தியில் சமய தத்துவக் கருத்துக்கள் இவ்வாறு கதைகள்மூலமாகப் பரப்பப்பட்டன. இலங்கையில் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களும் அச்சுவேலி ச. குமாரசுவாமிக் குருக்களும் சிறிய சிறிய கதைகள் மூலமாகச் சைவ சித்தாந்தக் கருத்துக்களை மிகவும் இலகுவான முறையில் எடுத்துக் கூறினர். இவர்களிலே சு. சிவபாதசுந்தரனாரின் சைவபோத முதற் புத்தகம் குறிப்பிடத்தக்கதொன்று. இதிலே சேர். பொன். இராமநாதன் (1851 - 1930) அவர்கள் எழுதிய பாயிரத்தில் குறிப்பிட்டவாறு கடவுள் அன்பு நிறைந்தவர், கடவுள் எங்கும் உள்ளவர், கடவுள் உயிர்க்கு உயிராயுள்ளவர், கடவுள் அடியார்க்கு எளியவர், கடவுள் ஆன்மாவை என்றும் காக்கிறார், உடம்பு அழிவுக்கு உரிய பொருள், கடவுளை நம்பினோர்க்கு ஒரு குறையும் இல்லை, கடவுள் வழிபாடு அவசியம் வேண்டற்பாலது, கடவுள் வழிபாட்டினால் பழவினைப் பயனை வெல்லலாம். அகந்தை, மமதைகள், துஷ்ட நினைவுகள், விஷய சுகபோகங்கள், அநித்திய வஸ்துவிலுள்ள பற்றுக்கள் ஆகிய மலங்கள் யாவற்றையும் சிவபெருமான் நீக்குவார். ஆதலால் அந்த அநுக்கிரகத்தை உணர்த்தும் திருநீறு வணங்கப்படத்தக்கது, திருக்கோயிலிலே தொண்டு செய்தல், தாசமார்க்கத்தாருக்குப் பெரும் புண்ணிய கருமம், ஆன்ம லாப முயற்சியிலே சரீர வருத்தஞ் சற்றேனும் நினைக்கப்படத்தக்கதன்று. தாயை, தந்தையை வழிபடல், சீவகாருண்யத்தை அபிவிருத்தி செய்தல் வேண்டும். தனக்கு வரும் துன்பங்களை மிகப் பாராட்டாமல் பொறுத்துக்கொள்ளுதல் “தபஸ்” எனும் பெருங் குணம். பழிப்பன பகரேல், நேர்மையாக இருத்தல் வேண்டும், திருநீற்றை அவமதித்தால் தீமை உண்டாகும். மிருக பலி பெரும் பாதகம், நமக்கு அதிகாரம் வந்த காலத்திலே நமது இலாபத்தைக் கருதாமல் பிறருடைய நன்மையையே கருதல் வேண்டும், பிறருக்காக நாம் வருந்துதல் வேண்டும் எனும் உண்மைகள் சிறிய சிறிய கதைகள் மூலமாக உணர்த்தப்பட்டிருக்கின்றன. பெரும்பாலும் வீடுபேற்று வழிமுறைகள் இதிலே கதைகள்மூலம் எளிதாகக் கூறப்பெற்றுள்ளன. இதனைப் பின்பற்றி ச. குமாரசுவாமிக் குருக்கள் சைவப் பிரகாசிகைகள் செய்துள்ளமையும் பிற்கால சைவ சமய பாட நூல்களிலும் இந்த அணுகுமுறை பின்பற்றப் பெற்றுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

### நாடக மூலம் கற்பித்தல்

அருணகிரிநாதர், திருவருட்செல்வர், திருவிளையாடல் முதலான திரைப்படங்கள் சாதாரண மக்கள் மத்தியில் சமய, தத்துவக் கருத்துக்களை மிகவும் இலகுவான முறையில் போதித்தமையை நாம் அறிவோம். இத்திரைப்படங்களுக்கு எவ்வளவோ ஆண்டுகளுக்கு முன்பு (1936) சைவ சித்தாந்தக் கருத்துக்களை இலகுவாக உணர்த்துமுகமாக நவாலியூர் சோமசுந்தரப் புலவர் அவர்களால் “உயிரிளங் குமரன் நாடகம்” எனும் நாடக நூல் எழுதப்பெற்றது. இது படிப்பதற்கும் நடிப்பதற்குமான அரிய நூலாகும்.

### புராணபடன முறை மூலம் கற்றல்

இது ஈழநாட்டில் நாவலர் காலத்திலிருந்து பொதுமக்களுக்குச் சமய அறிவையும் சித்தாந்த உண்மைகளையும் புகட்டுவதற்காக ஆலயங்களிலும் ஆலய மண்டபங்களிலும்

மடங்களிலும் நிகழ்த்தப்பெற்று வந்ததொன்றாகும். இதில் கந்தபுராணப் படிப்பு முக்கியமானதொன்றாகும். கந்தபுராணத்தை "சைவசித்தாந்தக் கருவூலம்" எனவும் "சைவ சித்தாந்த சாரம்" என்றும் கூறுவதுண்டு. இலங்கையில் "குக சைவ சித்தாந்தம்" எனவொன்று உருவாகுவதற்குக் கந்தபுராணத்தின் செல்வாக்கு மிக முக்கிய காரணமெனலாம். சைவ சித்தாந்தத்தை பொதுமக்கள் மத்தியில் பரப்புவதற்கான சிறந்த தத்துவ முறையாக நாம் குக சைவ சித்தாந்தத்தைக் கருதவேண்டியிருக்கின்றது.

**நிறைவுரை**

சைவ சித்தாந்தம் கூறும் பதி, பசு, பாசம் மற்றும் முத்தி பற்றிய அறிவானது சித்தாந்த நோக்கில் பசு மற்றும் பாச ஞானமாகவே கருதப்படுகின்றது. முத்திக்கு சித்தாந்தம் கூறும் வழிமுறைகள் அல்லது மார்க்கங்கள் மிகவும் முக்கியமானவை. சைவ நாற்பாதங்கள், குரு இலிங்க, சங்கம வழிபாடு, அறவொழுக்கச் செயற்பாடுகள் போன்றன இவ்வகையில் குறிப்பிடத்தக்கன. இலங்கையில் நாற்பாத நெறியைச் சரியாக விளங்கிச் செயற்பட்டவர்களில் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் அவர்களைக் குறிப்பிடுவார்கள். அவரிடம் சைவ சித்தாந்த அறிவு நிறையவே இருந்தது. ஆயினும் அவர் சரியை நெறியை இறுகப்பிடித்தார். சரியையிலும் சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம் இருப்பதனை நடைமுறையில் காட்டியவர் சைவப்பெரியாரவர்கள். இவர் அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின் கந்தவனக்கடவை கோயிலுக்குச் சென்று நிறையச் சரியைத் தொண்டு செய்து மேநிலைக்குச் சென்றவர். மரணப்படுக்கையிலே இருந்தபோது முத்தி பஞ்சாட்சரமாகிய "சிவாயநம" எனும் திருவைந்தெழுத்தை அவரின் திருச்செவியில் ஓதவே அவர் உயிர் பிரிந்தது. எனவே அவரது நூல்களைப் படித்தவர்கள் சித்தாந்த அறிவைப் பெற்றார்கள். அவரது வாழ்வை நேரிலே தரிசித்தவர்கள், அதனைப் பின்பற்றி உயர முயற்சி செய்தார்கள். எனவே சைவ சித்தாந்த முன்மாதிரி வாழ்க்கை என்பது முக்கியமானது.

சிவஞானபோத பன்னிரண்டாம் சூத்திர இறுதி இரண்டு அடிகளான,

"மாலற நேய மலிந்தவர் வேடமும்
ஆலயந்தானும் அரன் எனத் தொழுமே"

என்பன முத்திக்குரிய சாதன நெறிகளில் முக்கியத்துவம் பெறுபவை. பெரியபுராணம் சிவனடியார் வாழ்விற்குச் சிறந்த எடுத்துக்காட்டு. இதன் வழியில் இலங்கைச் சைவர்கள் ஏதாவது ஒரு வகையில் நெருங்கிய தொடர்பைக் காட்டுபவர்கள். இலங்கையில் தொண்டைமானாறு செல்வச்சந்நிதியில் வந்து தங்கியிருப்போரை இரப்போராகக் கருதாமல் அரன் அடியவர்களாகக் கருதி அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்துகொடுத்துக் கொண்டிருக்கும் ஆலய மடம், சந்நிதியான் ஆச்சிரமம், அடியார் மடம் முதலானவை போற்றத்தக்க பணிகளையே ஆற்றிக்கொண்டிருக்கின்றன. இவ்வாறு தெல்லிப்பழை துர்க்கை அம்மன் ஆலய நிர்வாகம், ஏழாலை வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயம் முதலானவை மக்களுக்கு சமய தத்துவ அறிவூட்டல்களுடன் சமூகத் தொண்டையும் செய்து வருகின்றன. எனவே சமய தத்துவ அறிவூட்டல்களும் அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்தலும் பிரதானமானவை. இப்படியான தொண்டுகள் "அனைவருக்கும் கல்வி" என்பது போன்று "பொதுமக்களுக்கான சித்தாந்தம்" என்ற நிலையைத் தோற்றுவிக்கும். (முற்றும்)

*நிதானமாகத்தான் சிந்திக்கவேண்டும். ஆனால் விரைவாகச் செயற்படவேண்டும்.*

# கருடபுராணம் உரைக்கும் மனித வாழ்வின் தவறுக்கான தண்டனைகள்

– **செல்வி ச. வர்ணி** அவர்கள் –

"அரசன் அன்று கொல்வான்; தெய்வம் நின்று கொல்லும்" என்பார்கள். இவ்வாக்கு நிதர்சனமே! மனிதனின் சொல்லுக்கும் சிந்தனைக்கும், செயலுக்கும் விளைவாக பாவ புண்ணியங்களின் அடிப்படையில் இறைவனால் ஆன்மாவிற்கு தண்டனையோ, வெகுமதியோ உண்டு. அதற்காகவே சொர்க்கம், நரகம் படைக்கப்பட்டுள்ளன எனும் பொதுவான கருத்து உண்டு. சொர்க்க, நரகம் பற்றி மற்ற எல்லா நூல்களைக் காட்டிலும் கருடபுராணத்தில் தெளிவான விளக்கம் தரப்பட்டுள்ளது. பதினெண் புராணங்களுள் ஒன்றாகிய கருடபுராணம்,



*எச்சரிக்கை ஒருபோதும் தவறுக்குத் துணையாக நிற்பதில்லை.*

மானிடம் புரியும் இன்றைய இழி செயல்களுக்கான தண்டனையை இறைவன் காத்திருந்து வழங்குவதை நயம்பட உரைக்கின்றது.

நன்மை செய்தவர்களுக்குக் கிடைக்கும் சுகங்கள், தீமை செய்தவர்களுக்கு அவர்களுடைய பாவங்களுக்கு ஏற்றபடி நரகத்தில் கொடுக்கப்படும் 28 வகையான தண்டனைகளைத் தெளிவுற எடுத்துரைத்துள்ளது. அவற்றுள் சிலவற்றை நோக்குவோம்.

பொய்சாட்சி சொல்லி நிரபராதிகளைத் துன்பத்துக்குள்ளாக்கும் மனிதர்களுக்கு உண்டான நரகம் அவீசியாகும். இங்கு துர்நாற்றம் கொண்ட நீரில் ஆன்மாக்கள் அழுத்தப்பட்டுத் துன்புறுத்தப்படும் என்கிறது கருடபுராணம்.

மற்றும் மக்களைக் கொன்று குவித்து; அப்பாவிகளின் உடைமைகளைப் பறித்துக் கொள்ளும் அநியாயக்காரர்களுக்கு சாரமேயாதனம் என்ற நரகம் நிச்சயம் உண்டெனவும் அங்கு கொடிய மிருகங்கள் ஆன்மாக்களை வாட்டி வதைக்கும் தண்டனையை காணலாம் என்கிறது.

அத்தோடு மனைவியை துன்புறுத்தி வதைக்கும் நபர்களுக்கு லாலாபட்சம் எனும் நரகம் அமைவதோடு இங்கு ஆன்மாக்கள் தீக்கோலால் சுட்டுத் தண்டிக்கப்படும் என்கிறது கருட புராணம்.

மற்றும் பசுக்களைக் காரணமின்றி வதைப்பவர்களுக்கு விசஸனம் எனும் நரகம் கிடைக்கும். இங்கு ஆன்மாக்கள் சவுக்கடியால் துன்புறும். எந்தத் தொந்தரவும் செய்யாத மிருகங்களை வதைக்கும் நபர்களுக்கு பிராணிரோதம் எனும் நரகம் அமைவதோடு இங்கு ஆன்மாக்கள் கூரிய அம்புகளால் குத்தப்பட்டு துன்பத்தை அனுபவிக்கும். இதனால் மனிதன் காருண்யத்தோடு வாழ்வது சிறப்பானது.

தொடர்ந்து நோக்குகையில் கருடபுராணத்தைப் படிப்பவர்கள் தவறு செய்ய அஞ்சும்படியாக இருக்கும் தண்டனைகளை விஷ்ணு கருடனுக்கு உரைத்தார். இதனை எமனின் சித்திரவதைகள் என்பர். இதில் தாமிஸிர நரகம் எனப்படுவது, பிறருக்குச் சொந்தமான மற்றவர் மனைவியை விரும்புவதும் அபகரிப்பதும் பாவச் செயலாகும். அதேபோல் பிறரது குழந்தையை அபகரிப்பது மகா பாவமாகும். இதற்குத் தண்டனையாக நரகத்தில் எம கிங்கரர்கள் முள்ளாலான கட்டைகளாலும் கதைகளினாலும் நையப்புடைப்பார்கள். பிறர் மனை நயவாது வாழ்தல் தலைசிறந்தது.

கணவனும் மனைவியும் சேர்ந்து மனமொத்து வாழ்வது அவசியம். அதை விடுத்து ஒருவரை ஒருவர் ஏமாற்றுதல் தவறாகும். கணவன் மனைவியை வஞ்சித்தலும் மனைவி கணவனை வஞ்சித்தலும் பாவச் செயலாகும். இத்தகையவர்கள் அநித்தாமிஸ்ர நரகம் எனும் நரகத்தில் உழன்று கண்கள் தெரியாத நிலையில் இருள்சூழ மூர்ச்சையாகி விழுந்து தவிக்க வேண்டியதுதான்.

அடுத்து ரௌரவ நரகமாகும். இங்கே, பிறருடைய குடும்பத்தை, அதாவது வாழும் குடும்பத்தைக் கெடுப்பது, பிரிப்பது, அழிப்பது, அவர்தம் பொருள்களைப் பறிப்பது என்பன குற்றமாகும். இதற்குத் தண்டனையாக ஜீவன்களை எம கிங்கிரர்கள் சூலத்தில் குத்தித் துன்புறுத்துவார்கள்.

இவை மாத்திரமன்றி கும்பிபாகம் எனும் நரகமானது, சுவையான உணவுக்காக வாயில்லா உயிர்களை வதைத்தும் கொன்றும் பலவிதங்களில் கொடுமைப்படுத்தும் பாவிகள்

அடையும் நரகம் இதுவாகும். எரியும் அடுப்பில் எண்ணெய்க் கொப்பறையில் போட்டு எமதூதர்கள் பாவிகளைத் துன்புறுத்துவார்கள்.

மற்றையது காலகுத்திரம். பெரியோர்களையும் பெற்றோர்களையும் அடித்தும் அவமதித்தும், துன்புறுத்தியும், பட்டினி போட்டும் வதைத்த பாவிகள் செல்லும் நரகமாகும். இங்கே அதே முறையில் அடி, உதை, பட்டினி என்று அவர்கள் வதைக்கப்படுவது உறுதி.

அத்தோடு அசிபத்திரம் எனும் நரகம். தெய்வ நிந்தனை செய்தவர்களும், தர்ம நெறியை விட்டு அதர்ம நெறியைப் பின்பற்றியவர்களும் அடையும் நரகமாகும். இங்கு பாவிகள் பூதங்களால் துன்புறுத்தப்பட்டு அவதிப்படுவார்கள். இனம் புரியாத ஒரு பயம் உண்டாகும்.

அடுத்தது பன்றிமுகம். இது குற்றமற்றவரைத் தண்டிப்பது கொடுமையாகும். நீதிக்குப் புறம்பாக அநீதிக்குத் துணைபோவதும் அதர்மமாகும். இந்த நரகத்தில் பன்றி முகத்துடனும் கூர்மையான பற்களுடனும் ஒருவகை மிருகம் காணப்படும். அதன் வாயில் அகப்பட்டுக் கூர்மையான பற்களால் கடிக்கப்பட்டு பாவிகள் அவதிப்படுவார்கள்.

இவை மாத்திரமன்றி அந்தகூபம் எனும் நரகம். இங்கே உயிர்களைச் சித்திரவதை செய்தல், கொடுமையாகக் கொலை செய்தல் ஆகிய குற்றங்கள் புரிந்த பாவிகள் அடையும் நரகம். இங்கே கொடிய மிருகங்கள் கடித்துக் குதறும் நிலை ஆன்மாக்களிற்கு ஏற்படும். விசித்திரமான மாடுகள் கீழே போட்டு மிதித்துத் துன்புறுத்தும்.

மற்றையது வஜ்ரகண்டகம் எனும் நரகமாகும். சேரக்கூடாத ஆணையோ பெண்ணையோ கூடித் தழுவி மகிழும் காமவெறியர்கள் அடையும் நரகமாகும். நெருப்பால் செய்யப்பட்ட பதுமைகளைக் கட்டித் தழுவ ஜீவன்கள் இங்கு நிர்ப்பந்திக்கப்படுவார்கள்.

தொடர்ந்து சான்மலி எனும் நரகம். இங்கே நன்மை, தீமை, பாவம் ஆகியவற்றைப் பாராமல் உறவுமுறையைக் கூடப் பாராமல் யாருடனாவது எப்படியாவது கூடிமகிழும் காதகர்கள் அடையும் நரகம் இது. இங்கு இத்தகைய பாவிகளை முள்ளாலான தடிகளாலும் முட்செடிகளாலும் எமகிங்கிரர்கள் துன்புறுத்துவார்கள்.

பூபோதம் எனப்படும் நரகம். சிறிதும் வெட்கமின்றி இழிவான பெண்களுடன் கூடி ஒழுக்கக் குறைவாக நடந்து எந்த இலட்சியமும் இன்றி வாழ்ந்தவன் அடையும் நரகமாகும். இங்கு ஜீவனை விஷமுடைய பூச்சிகள், பிராணிகள் கடிக்கும்.

கிருமிபோஜனம் என்பது, தான் மட்டும் உண்டு, பிறரது உழைப்பைச் சுரண்டிப் பிழைத்த பாவிகள் இங்குதான் போயாகவேண்டும். பிறவற்றைத் துளைத்துச் செல்லும் இயல்புடையது கிருமிகள். இந்த நரகத்தில் பாவிகளைப் பலவிதமான கிருமிகள் கடித்துத் துளையிட்டுத் துன்புறுத்தும். இவ்வண்ணம் ஏராளமான மனிதன் புரியும் தவறுகளுக்கு ஏராளமான கொடூர தண்டனைகள் காத்துக்கொண்டுதான் இருக்கின்றது.

ஆன்மா உணர்வை உடையதா? பிறப்பு எடுக்குமா? தண்டனையை அனுபவிக்குமா? சொர்க்கம், நரகம் உள்ளதா? இவ்வாறான பல ஐயங்கள் காணப்படினும் கூட கருட புராணத் தண்டனைகளுள் நிதர்சனமும் எம் எதிர்காலமும் ஒருபுறம் அடங்கியுள்ளது

இன்று எமது நாட்டில் களவு, கருணையே இல்லாத மனிதர்கள், வயது வேறுபாடு இன்றி கற்பழிப்பு, வார்த்தைகளால் பிறரை வஞ்சித்தல், தன்னிடம் இருந்தும் பிறருக்குக் கொடுக்காமல் வாழுதல், அடித்துத் துன்புறுத்துதல், பிறர்மனை நயத்தல், சிந்தனை, சொல்,

செயலில் தூய்மையில்லை என பாவங்கள் புரியும் மனிதர்கள் ஏராளம் முகிழ்த்த வண்ணம் உள்ளனர்.

இத் தவறுகளுக்கெல்லாம் நாட்டில் வழங்கப்படும் தண்டனை மிகக் குறைவானதே. இவ்விதம் தண்டனைகள் குறைகின்ற சந்தர்ப்பத்தில் தவறிழைப்பவனும் அஞ்சுவதில்லை. ஆனால் தவறிழைப்பவன் அஞ்சி ஒடுங்கி நல் மனிதனாகுவதற்கான சந்தர்ப்பத்தை கருட புராணம் எளிதாய் புரியும்வண்ணம் உரைத்துள்ளது. இவ்வாறான இழி செயல்களால் என்ன பயன்? காருண்யம், அன்பு, அறம், தர்மம், கொடை, பெண்களை மதித்தல், செயலில் தூய்மை போன்ற நல்லெண்ணம் படைத்தவராய் மாறி இறைவன் தரும் தண்டனையிலிருந்து மீட்சி பெறுவோம்.

"வினை விதைத்தவன் வினை அறுப்பான்"

---

## எதையும் ஏற்காத பெருமை

குருகுலத்தின் புகழ்பெற்ற அரசர்களுள் ஒருவராக யயாதி விளங்கினார். சீரும் சிறப்புடனும் ஆட்சி செய்த அவர் திடீரென்று ஆட்சியைத் துறந்து காட்டிற்குச் சென்று கடுந்தவம் செய்தார். அந்தத் தவத்தின் ஆற்றலால் அவருக்குச் சொர்க்கத்தில் தங்கும் பேறு கிடைத்தது.

தன் தவத்தைப் பற்றி தற்பெருமை கொண்டிருந்த அவர் அங்கு வந்த துறவிகளை இகழ்ந்து பேசினார்.

கோபம் கொண்ட அவர்கள் "தற்பெருமை கொண்ட நீ விரைவில் சொர்க்கத்திலிருந்து கீழே விழுவாய்" என்று சாபம் கொடுத்தார்கள்.

தன் தவறை உணர்ந்த யயாதி "துறவிகளே! முனிவர்கள் தவம் செய்யும் இடத்திற்கு அருகில் நான் விழுமாறு அருள் செய்யுங்கள். நான் மீண்டும் தவம் செய்து இந்த நிலையை அடைய வேண்டும்" என்று வேண்டினார்.

துறவிகளும் "அப்படியே ஆகட்டும்" என்றார்கள். அவர்கள் சாபத்தின்படி சொர்க்கத்தில் இருந்து கீழ் நோக்கி வந்துகொண்டிருந்தார் யயாதி. அவருடைய பேரர்கள் பூவுலகில் தவம் செய்து கொண்டிருந்தார்கள்.

யயாதி கீழ் நோக்கி வருவதைக் கண்ட அவர்கள், "பாட்டனாரே! எங்கள் தவ வலிமையை உங்களுக்குத் தருகிறோம். ஏற்றுக்கொள்ளுங்கள். மீண்டும் சொர்க்கம் நோக்கிச் செல்லுங்கள்" என்று வேண்டினார்கள்.

அதற்கு யயாதி, "நான் அரச குலத்தில் பிறந்தவன். கொடுத்து எனக்குப் பழக்கமே அன்றி யாரிடத்தும் எதையும் ஏற்று எனக்குப் பழக்கம் இல்லை. உங்கள் தவம் உங்களிடமே இருக்கட்டும். நான் தவம் செய்து சொர்க்கம் செல்கிறேன்" என்று பெருமையுடன் சொன்னார். எதையும் ஏற்காத பெருமையினால் அவர் மீண்டும் சொர்க்கம் நோக்கிச் செல்லலானார்.

*விதைத்தவன் உறங்கினாலும் விதைகள் உறங்குவதில்லை.*

# வழித்துணை 20

– ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 சம்பிரதாயம் ஒன்றையேநாம் பேணுடுதல் தன்னைவிட
சம்பவத்தைப் பேணுடுதல் சாலவும் சிறந்ததுவாம்
மேடையின்மேல் விருந்தினர்க்கு சம்பிரதாயம் ஆனவைகள்
முன்வரிசைச் சிறார்களுக்கோ அது சம்பவம் ஆகிடுமாம்.

02 இளமையில் வறுமையது கொடுமையென்று ஆகாது
இருந்ததை இழப்பதும் கொடுமையென்று ஆகாது
கொடுமையிலும் கொடுமையிந்தக் குவலயத்தில் ஏதென்றால்
குழந்தைகட்கு கொடியவற்றை ஊட்டிவிடல் ஆகும்.

03 உன்னைநீ உணர்ந்தாலே ஆத்மாவை உணர்ந்திடலாம்
ஆத்மாவை உணர்ந்தாலே இறைவனை நீ உணர்ந்திடலாம்
அல்லாமல் இறைவனையே உணர்ந்திடநீ எண்ணுவது
பூக்காமல் காய்க்காமல் கனிபறிக்க எண்ணுவதாம்.

04 தந்தையார் உடல்தந்தார் தாயாரோ உயிர்தந்தார்
விந்தைமிகு ஆத்மாவை இறையோடு இறைவிதந்தார்
அந்தம்ஆதி இல்லாதார் தந்தது உள்ளிருப்பதனால்
எந்தஉடல் ஆனாலும் அந்தஉடல் கோயிலன்றோ.

05 சாதிசமயமென்று சங்கெடுத்து ஊதிவிட்டால்
சோதியுட் கலந்திடலாம் என்றுமட்டும் எண்ணாதீர்
நாதியற்றுப் போனாலும் நீதிநெறி வழிநடந்தால்
ஆதிசிவன் சக்தியொடு அருகருகாய் இருந்திடலாம்.

06 புகைகாட்டி நெருப்புணர்த்தும் பூவுலகின் தன்மையைப்போல்
பகைகாட்டி பழியுணர்த்தும் பண்பதனை விட்டுவிட்டு
தகைகாட்டித் தனைஉணர்த்தும் தத்துவத்தைக் கடைப்பிடித்து
வகைகாட்டி வழியுணர்த்தும் வாழ்வுதனை வென்றிடுவீர்.

*கடமையை எப்போதும் செய்யத் துணிந்திடுங்கள்.*

07 கந்தனுக்கு ஆறுமுகம் கணபதிக்கு ஐந்துமுகம்
வந்துஎமைப் படைத்தாழும் பிரமனுக்கு நான்குமுகம்
எத்தனைதான் முகமதுவும் அதுஇறைவனுக்கு இருந்திடலாம்
அதுபோலப் பலமுகங்கள் அடியாற்கும் இருக்கலாமோ.

08 தேவையென்றால் தெய்வமென்பார் தேடிவந்து தாள்பணிவார்
ஔவையைக் கயிலைவைத்த ஆனைமுகத் தையனென்பார்
சேவையென்பார் செடில்பிடிப்பார் தேவையெல்லாம் முடிந்துவிட்டால்
பாவையென வீசிடுவார் பஞ்சமுகம் இவர்க்குமுண்டோ.

09 புரியாத இடத்திலேதான் புரிந்துணர்வு உள்ளதென்று
தெரியாத சிலபேற்கு தெரிந்தவர்கள் சொல்வதுமுண்டு
பரிதாபம் புரிந்துணர்வு புரியாமல் இருப்பதற்கு
தெரிந்தோர் தெரியாமலதை மறைப்பதுவே காரணமாம்.

10 பாலும் குருதியிலும் ஓரிடத்தில் தானுண்டு
கறக்கின்ற முறையினால்த்தான் குருதி பாலாய் மாறிடல்போல்
இரக்கமும் அரக்கமும் ஓரிடத்தில் தானுண்டு
நடக்கின்ற முறைநடந்தால் அரக்கமதும் இரக்கமாகும்.

---

## பணத்தைப் பெரிதாக மதித்தால்

ஆற்றில் வெள்ளம் கரை புரண்டு ஓடிக்கொண்டு இருந்தது. மறுகரை சேர நினைத்த ஆறுபேர் ஒரு படகில் அமர்ந்தார்கள். படகு செல்லத் தொடங்கியது.

ஆற்றின் நடுப்பகுதியை அடைந்த படகு வெள்ளத்தில் சிக்கிக் கவிழ்ந்தது. அவர்கள் ஆறுபேருக்கும் நீச்சல் தெரிந்ததால் கரையை நோக்கி நீந்தத் தொடங்கினார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் நீந்த முடியாமல் திணறிக் கொண்டிருந்தான்.

மற்றவர்கள் அவனைப் பார்த்து "எங்களைவிட நீ நன்றாக நீந்துவாயே. ஏன் இப்படித் திணறுகிறாய்? கைகளை நன்றாக வீசி நீந்தி வா" என்றார்கள். அதற்கு அவன் "என் இடுப்பில் நூறு பொற்காசுகளை முடித்து வைத்திருக்கிறேன். அதைப் பாதுகாப்பாகப் பிடித்தபடி என்னால் நீந்த முடியவில்லை" என்றான்.

"பொற்காசுகளைத் தூக்கி எறிந்துவிட்டு வா" என்று அவர்கள் குரல் கொடுத்தார்கள். ஏதும் பதில் பேசாத அவன் அவர்களை மறுப்பதுபோலத் தலையை அசைத்தான். வெள்ளத்தில் சிக்கி அவன் தத்தளிப்பது எல்லோர்க்கும் தெரிந்தது. ஐந்துபேரும் பாதுகாப்பாக கரையை அடைந்தார்கள். "பொற்காசுகளை எறிந்துவிட்டுக் கரை வந்து சேர் முட்டாளே! உயிர் போன பிறகு பொற்காசுகளால் என்ன பயன்?" என்று உரக்கக் குரல் கொடுத்தார்கள். இப்பொழுதும் மறுப்பதுபோலத் தலையை அசைத்தான் அவன். வெள்ளம் அவனை இழுத்துச் சென்றது. நீருக்குள் மூழ்கி உயிரை விட்டான் அவன்.

*நற்பண்பு இல்லாத புத்தி ஆபத்தானது, புத்தியில்லாத நற்பண்பு பயனற்றது.*

# ராகு கேது விளக்கம்

– திரு ப. பத்மநிருபன் அவர்கள் –

ராகு காலம் என்று சொல்கிறோம். ஆனால் கேது காலத்தைத்தான் எமகண்டம் என்று சொல்கிறோம். நவக்கிரகங்கள் ஒன்பதும் நவ நாயகர்கள் எனப்படுவர். மேடம் முதல் மீனம் வரையிலான ராசிகள் பன்னிரண்டு. இதில் சூரியன் முதல் சனி வரையிலான ஏழு கிரகங்களுக்குத் தான் சொந்தவீடு (ஆட்சி) உண்டு. ராகு- கேதுக்களுக்கு ஆட்சி வீடு இல்லை. அதனால்த்தான் வாரத்தில் ஏழு நாட்கள் என்று கணிக்கப் பட்டுள்ளது. ராகு- கேதுவுக்கு கிழமைகள் இல்லை. அப்படியென்றால் ராகு - கேது பலமில்லாத கிரகங்களா? அல்ல!



நவக்கிரகங்களில் புதனும் அதைவிடச் செவ்வாயும் அதைவிடச் சனியும் அதைவிட குருவும் அதைவிட சுக்கிரனும் அதைவிட சூரியனும் வரிசைப்படி ஒருவரைவிட மற்றவர் பலம் பெற்ற கிரகங்கள். அந்த சூரியனைவிட ராகுவும் ராகுவைவிட கேதுவும் அதிக பலம் பெற்றவர்கள் என்று ஜோதிட சாஸ்திரத்தில் பலத்தை நிர்ணயம் செய்திருக்கிறார்கள். ராகு கேதுவுக்கு தனிநாள், கிழமை ஒதுக்கவில்லை என்றாலும், ஒவ்வொரு நாளும் மூன்றே முக்கால் நாழிகை (ஒன்றரை மணி நேரம்) ராகுவுக்குப் பலம் உண்டு. அதுதான் ராகுகாலம்! அதேபோல கேதுவுக்குப் பொருந்திய காலம் எமகண்டம். ராகுவும் கேதுவும் தனியான கிரகங்கள் இல்லையென்றும் கிரகங்களின் நிழல் என்றும் விண்வெளி விஞ்ஞானிகள் ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். வான வெளியில் சூரியனுடைய சுழற்சிப் பாதையும் சந்திரனுடைய சுழற்சிப் பாதையும் ஒரு குறிப்பிட்ட எல்லையில் சந்திக்கும். அப்படி வட திசையில் ஏற்படும் சந்திப்பை ராகு என்றும் அதே நேரத்தில் அதற்கு நேர் எதிரில் 180ஆவது டிகிரியில் சமசப்தமாக ஏற்படும் தென்திசைச் சந்திப்பை கேது என்றும் விஞ்ஞானிகள் கூறுவார்கள். இதையே நமது முன்னோர்களும் மெய்ஞ்ஞானிகளும் ஜோதிட சாஸ்திர மகான்களும் ராகு கேதுக்களை சாயா கிரகங்கள் (நிழல் கிரகங்கள்) என்று எழுதி வைத்தார்கள்.

*பிறர் செய்த உபகாரம் உன் கையில் அதிகமாகத் தங்கிவிடாமல் பார்த்துக்கொள்.*

சூரிய- சந்திரர்கள் வலம் வரும்போது இந்த நிழல் எதிர்முகமாக இடப்புறமாக நகரும். அதனால்த்தான் மேஷ ராசியில் ராகு இருந்தால் அதற்கு நேர் எதிரில் சமசப்தம ராசியான துலா ராசியில் 180ஆவது டிகிரியில் கேது இருக்கும்.

மற்ற கிரகங்கள் மேஷம், ரிஷபம், மிதுனம் என்று வலமாகச் சுற்றும்போது ராகுவும் கேதுவும் மேஷம், மீனம், கும்பம் என்று இடமாகச் சுற்றும். சூரியனும் சந்திரனும் பன்னிரு ராசிகளை வலமாகச் சுற்றி வரும்போது ராகு கேது இடமாகச் சுற்றிவரும். அப்போது சூரியனும் சந்திரனும் ஒரே ராசியில் ஒரே டிகிரியில் சந்திக்கும்போது அமாவாசை, அதே நேரத்தில் அவர்களுடன் ராகுவும் சேரும்போது, அதற்கு ஏழாவது ராசியில் 180ஆவது டிகிரியில் கேது வரும்போது சூரியகிரகணம் ஏற்படும். அதேபோல் பௌர்ணமியன்று சூரியனும் சந்திரனும் நேருக்கு நேர் எதிரில் 180ஆவது டிகிரியில் வரும்போது சூரியனுடன் ராகுவும் சந்திரனும் கேதுவும் அதே டிகிரியில் சேரும்போது சந்திரகிரகணம் ஏற்படும். சூரியன், சந்திரன், பூமி ஆகிய மூன்றும் ஒரே நேர்கோட்டில் (டிகிரியில்) சந்திப்பு ஏற்படுவதை கிரகணம் என்கிறோம். அப்படிப்பட்ட நேரத்தில் ஏற்படும் இயற்கையின் அற்புதங்களை அளவிடமுடியாது. சமுத்திர நீரில் குளிப்பது, தியானத்தில் ஈடுபடுவது, ஜபம் செய்வது இப்படி ஆன்மீக வழியில் ஈடுபட்டால் ஒவ்வொருவருக்கும் "வில் பவர்"- ஆன்ம பலம் கிடைக்கும். அதனால்த்தான் ராகு- கேதுவை ஞானகாரகன், மோட்சகாரகன் என்றெல்லாம் ஜோதிட சாஸ்திரம் வர்ணிக்கும். ராகுவைப்போல் கொடுப்பாரில்லை. கேதுவைப்போல் கெடுப்பாரில்லை என்பார்கள். ராகு கொடுத்துக் கெடுக்கும். கேது கெடுத்துக் கொடுக்கும்.

ஒரு ராசியில் சனி இரண்டரை வருடங்களும் குரு ஒரு வருடமும் தங்கிப் பலன் கொடுப்பதுபோல, ராகு கேது ஒவ்வொரு ராசியிலும் ஒன்றரை வருடங்கள் தங்கி நற்பலனோ துர்ப்பலனோ செய்வார்கள். ராகு- கேது குரூர கிரகங்கள். அசுபர்- பாபக் கிரகம் எனப்படும். இவர்கள் எந்த ராசியில் வந்தாலும் அந்த ஸ்தான பலனைக் கொடுப்பார்கள். ஜாதக ரீதியாக ஒருவருக்கு பாக்கிய ஸ்தானத்தில் ராகுவோ கேதுவோ வந்தால், தகப்பனார், பூர்வ புண்ணிய பாக்கியம் ஆகிய அனுகூலப் பலன்களைக் கெடுப்பார் என்று அர்த்தம்.

ராகுவுக்கு அதிதேவதையான பத்ரகாளியையும் துர்க்கையையும், கேதுவுக்கு அதி தேவதையான விநாயகரையும் ராகுகாலம், எமகண்ட நேரத்தில் வழிபடலாம்.

## புராணத்தில் ராகு - கேது

தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் நீண்டகால நிரந்தரப் பகை இருந்தது. அடிக்கடி அவர்களுக்குள் போர் நடந்தது. இரு தரப்பிலும் பலர் உயிரிழந்தனர். அசுரர்களில் இறந்தவர்களை அவர்களின் ராஜகுருவான சுக்ராச்சாரியார் தன்னுடைய மிருத சஞ்சீவினி மந்திரத்தால் உடனே உயிர்பெற்றெழச் செய்தார். ஆனால் தேவர்கள் வகையில் அவர்களின் குரு பிரகஸ்பதிக்கு அந்த மந்திரம் தெரியாத காரணத்தால் தேவர்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டே வந்தது. அவர்கள் சாகாதிருக்க வழிவகைகளை ஆராய்ந்தபோது, மரணத்தை வெல்லும் சக்தி படைத்த அமிர்தத்தைச் சாப்பிட்டால் சாகாமல் இருக்கலாம் என்பதைக் கண்டறிந்தார்கள்.

திருப்பாற்கடலில் அற்புத மூலிகைகளைப் போட்டு, மந்தர மலையை மத்தாக நிறுத்தி, வாசுகி எனும் பாம்பைக் கயிறாகப் பயன்படுத்தி தயிரைக் கடைவதுபோல் கடைந்தால் அமிர்தம் வரும் என்று தெரிந்துகொண்டார்கள். இது மிகப்பெரிய முயற்சி. மகாவிஷ்ணு ஆமை அவதாரமெடுத்து தன் முதுகில் மந்தர மலையைத் தாங்கிக்கொள்ள தேவர்களும்

*உழைப்பு வறுமையை மட்டும் விரட்டுவதில்லை, தீமையான எண்ணங்களையும் விரட்டுகிறது.*

அசுரர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தார்கள். அதில் கிடைக்கும் அமிர்தத்தை அசுரர்களுக்குப் பங்கு கொடுப்பதாக இருந்தால் அமிர்தம் கிடைக்க பாற்கடலைக் கடைய உதவி செய்வதாக இருதரப்பும் ஒப்பந்தம் செய்துகொண்டார்கள். அதிலும் தேவர்கள் சூழ்ச்சி செய்து வாசுகியின் தலைப்பக்கம் அசுரர்களை நிறுத்தி, வால் பக்கம் தேவர்கள் நின்று கடைந்தார்கள். அப்படிக் கடையும்போது வாசுகியின் வாயிலிருந்து ஆலகால விஷம் வெளிப்பட்டது. அதை சர்வேஸ்வரன் அசுரர்களையும் தேவர்களையும் காப்பாற்றும் பொருட்டு தானே சாப்பிட்டு விட்டார். அந்த விஷம் சிவபெருமானுக்குக் கேடு விளைவிக்கக் கூடாது என்பதற்காக, கழுத்துப் பகுதியில் இருந்து கீழே வயிற்றுக்குள் இறங்கவிடாமல் பார்வதிதேவி சிவனின் கழுத்தைப் பிடித்துக் கொண்டதால் சிவன் கழுத்தில் விஷம் தங்கிவிட்டது. அதனால் சிவனுக்கு நீலகண்டன் என்னும் ஒரு பெயர் உண்டு. நம் அனைவருக்கும் கழுத்தில் சங்கு இருப்பதன் காரணம் அதுதான் என்று ஒரு ஐதீகம் உண்டு. பாற்கடலில் இருந்து ஆலகால விஷத்தை அடுத்து தேவலோகப் பசுவான காமதேனுவும், வெள்ளைக் குதிரையும், வெள்ளை யானை எனப்படும் ஐராவதமும், கேட்டதைக் கொடுக்கும் பாரிஜாத மரமும், அப்சர ஸ்திரிகளும் தேவதைகளும், திருமகள் மகாலட்சுமியும் தோன்றினர். கடைசியாக அமிர்த கலசத்துடன் தன்வந்திரி தோன்றினார். அவர் தேவலோக வைத்தியரானார்.





அமிர்தம் கிடைத்தவுடன் தங்களுக்கும் அதில் பங்குவேண்டுமென்று அசுரர்கள் தகராறு செய்தார்கள். மகாவிஷ்ணு தேவர்களை மட்டும் காப்பாற்றுவதற்காக மோகினி அவதாரமெடுத்து அசுரர்களை மயக்கி, முன் வரிசையில் தேவர்களையும் பின் வரிசையில் அசுரர்களையும் அமர வைத்து எல்லோருக்கும் தன் கையால் பங்கு தருவதாகச் சமாதானப்படுத்தினார். தேவர்களுக்கு மட்டுமே அமிர்தத்தைப் பகிர்ந்தளித்துவிட்டு அசுரர்களை மோகினி ஏமாற்றிவிடுவாள் என்று நினைத்த சொர்ணபானு என்ற ஒரு அசுரன், தேவர் மாதிரி உருமாறித் தேவர்கள் வரிசையில் அமர்ந்து அவனும் அமிர்தத்தை வாங்கிச் சாப்பிட்டுவிட்டான். இதை அறிந்த சூரியனும் சந்திரனும் இவன் நம் தேவர் இனத்தவன் அல்ல; அசுரன் என்று காட்டிக் கொடுத்தவுடன், மோகினி உருவில் இருந்த மகாவிஷ்ணு தன் கையிலிருந்த சட்டுவத்தால் சொர்ணபானுவின் சிரசை அறுத்துவிட்டார். அமிர்தம் அருந்திய காரணத்தால் சொர்ணபானு சாகவில்லை. தலை ஒரு பாகமாகவும் உடல் ஒரு பாகமாகவும் ஆகிவிட்டது. யார் இந்த

சொர்ணபானு? சப்த ரிஷிகளில் ஒருவரான காஸ்யருடைய பேரன். விப்ரசித்து என்ற அசுரனுக்கும் பக்தப் பிரகலாதனின் தந்தையான இரணியனின் உடன் பிறந்த சகோதரி சிம்சிகைக்கும் பிறந்த மகன்தான் இந்த சொர்ணபானு.

துண்டிக்கப்பட்ட சொர்ணபானுவின் தலை பர்ப்பரா என்னும் தேசத்தில் வந்து விழுந்தது. அந்த சமயம் அந்த நாட்டின் மன்னரான பைடீனஸன் என்பவன் தன் மனைவியுடன் சென்றுகொண்டிருந்தான். இந்தத் தலையைக் கண்ட அவன் அதை எடுத்துக்கொண்டு தன் அரண்மனைக்குச் சென்று வளர்த்தான். அமிர்தம் உண்டதால் உயிர் போகாத நிலையில் தலை இருந்தது தனக்கு அழியாத நிலையை அளித்த திருமாலை நோக்கிக் கடுமையாகத் தவம் இருக்க, அதன் விளைவாக தலையின் கீழ் பாம்பு உருவம் வளர்ந்து ராகு பகவான் ஆனார். இதன் காரணமாகவே இவரை பைடீனஸ குலத்தவர் என்று போற்றுகிறோம். இதுபோலவே சொர்ணபானுவின் உடல் பூமியில் மலையம் என்ற பகுதியில் விழுந்தது. அப்படி விழுந்த அந்த உடல் ஜைமினி அந்தண முனிவர் வாழ்ந்த இடத்தில் விழுந்தது. அந்த உடலை ஜைமினி முனிவர் எடுத்து ஆன்மிக உண்மைகளை ஊட்டி வளர்த்து ஞானகாரகனாக ஆக்கினார். மேலும் திருமாலை நோக்கி ராகுவைப்போல கேதுவும் தவம் இருந்து தலையற்ற உடலின்மீது தலையாக பாம்பின் ஐந்து தலை உருவாகி கேது பகவான் என்று பெயர் பெற்றார். மேலும் அவர் ஜைமினி கோத்திரத்தைச் சேர்ந்தவர் ஆனார். இவர்கள் இருவரும் (ராகு- கேது) தங்களைக் காட்டிக் கொடுத்த சூரியன் சந்திரன் இருவரையும் ஆண்டிற்கு இருமுறை கிரகணத்தை ஏற்படுத்தி அவர்களது சக்திகளைப் பாதிக்கின்றனர். இந்த இரு நிழல் கிரகங்களின் பிரத்தியேகமான பலன்களை பாவகரீதியாகக் கூறுவதில்லை. வான மண்டலத்தில் இவற்றுக்கான பிரத்தியேகமான ராசிகளும் ஆட்சி வீடுகளும் அமைக்கப்படவில்லை.

இவை எந்தெந்த ராசிகளில் தோன்றுகின்றனவோ அல்லது எந்தெந்தக் கிரகங்களுடன் சேர்ந்து விளங்குகின்றனவோ அந்தந்த ராசிநாதன் அல்லது கிரகங்களுக்குரிய பலன்களையே பெரும்பாலும் கூறவேண்டும். உதாரணமாக, ராகு மீனத்தில் நின்றிருப்பின் குருவின் பலனையே வழங்கும். கும்ப ராசியிலாவது அல்லது சனி கிரகத்துடனாவது சேர்ந்திருக்கும்போது சனிக் கிரகம் வழங்கக்கூடிய பலன்களையே வழங்குமென்று கூறவேண்டும். சனியைப்போல ராகுபலன் தரும் என்றும் செவ்வாயைப்போல் கேது பலன் தரும் என்றும் சில நூல்கள் கூறுகின்றன. அனுபவத்தில் இதுவும் ஓரளவுக்கு உண்மையென்றே தோன்றுகிறது. சனி வழங்கக்கூடிய பலன்களை ராகுவும் செவ்வாய் வழங்க வேண்டிய பலன்களைக் கேதுவும் ஜாதகருக்கு அளிக்கின்றன. இது அனுபவ உண்மை. ராகு- மேஷம், ரிஷபம், கடகம், கன்னி, மகரம் ஆகிய ஐந்து ராசிகளில் வலுப்பெறுகிறது என்று சில நூல்கள் கூறுகின்றன. கேதுவுக்கென பிரத்தியேகமாகக் கூறப்படவில்லை. இந்த இரு கோள்களுக்கும் இடையே ஆறு ராசிகள் அல்லது 180 பாகை வித்தியாசம் இருப்பதால், ராகுவுக்குக் கூறப்பட்ட ராசிகளுக்கு நேர் எதிர் ராசிகளாகிய துலாம், விருச்சிகம் ஆகியவற்றிலும் மற்றும் கூறப்படாத ராசிகளிலும் கேதுவுக்கு வலு அதிகம் என்று கொள்ளலாம். அவ்வாறே மத்திய ரேகைக்கு வட பாகத்தில் உள்ள ராசிகளாகிய மகரம் முதல் மிதுனம்வரை ராகு பலமுள்ளதாகவும், தென் பாகத்தில் உள்ள கடகம் முதல் தனுசு வரையில் உள்ள ஆறு ராசிகளில் கேது பலமுடையதாகவும் இருக்கும் என்பதும் ஜோதிட ஆராய்ச்சி.

"யாவர்க்குமாம் இறைவர்க்கொரு பச்சிலை"

*பிற உயிர்களிடத்தில் அன்பு செலுத்துவதன்மூலம் சொர்க்கத்தை பூமியிலே காணமுடியும்.*

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி...)

| | | |
|---|---|---|
| மக்கள் வங்கி இளைப்பாறியோர் | | 51000. 00 |
| மக்கள் வங்கி யாழ். பிரதேச காரியாலயம் | | 22000. 00 |
| மக்கள் வங்கி | யாழ். ஸ்ரான்லி வீதி | 32500. 00 |
| மக்கள் வங்கி | யாழ். பிரதான வீதி | 11500. 00 |
| மக்கள் வங்கி | யாழ். கன்னாதிட்டி | 6000. 00 |
| மக்கள் வங்கி | யாழ். பல்கலைக்கழகம் | 11000. 00 |
| மக்கள் வங்கி | யாழ் ஏனையோர் | 13500. 00 |
| மக்கள் வங்கி | சுன்னாகம் | 35500. 00 |
| மக்கள் வங்கி | சங்கானை | 8000. 00 |
| மக்கள் வங்கி | அச்சுவேலி | 5000. 00 |
| மக்கள் வங்கி | வல்வெட்டித்துறை | 11000. 00 |
| மக்கள் வங்கி | பருத்தித்துறை | 9000. 00 |
| மக்கள் வங்கி | நெல்லியடி | 4000. 00 |
| மக்கள் வங்கி | சாவகச்சேரி | 9500. 00 |
| மக்கள் வங்கி | கொடிகாமம் | 10000. 00 |
| மக்கள் வங்கி | பரந்தன் | 5000. 00 |
| மக்கள் வங்கி | வவுனியா பிரதேச அலுவலகம் | 10000. 00 |
| மக்கள் வங்கி | பிரதேச அலுவலகம் | 12000. 00 |
| மக்கள் வங்கி | திருகோணமலை பிரதேச அலுவலகம் | 50000. 00 |
| அ. ஐங்கரன் | திருகோணமலை | 5000. 00 |
| க. மதிவதனன் | திருகோணமலை | 15000. 00 |
| எஸ். துஷாந்தன் | திருகோணமலை | 10000. 00 |
| திருமதி கு. வையெந்தி | திருகோணமலை | 5000. 00 |
| திருமதி த. கலைச்செல்வி | திருகோணமலை | 10000. 00 |
| கு. கோடீஸ்வரன் | திருகோணமலை | 12000. 00 |
| செல்வி வ. கனகசபை | மட்டக்களப்பு | 10000. 00 |
| சி. பத்மநாதன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| இ. யோகராசா | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திருமதி யோகேஸ்வரி சிவப்பிரகாசம் | கோப்பாய் | 5000. 00 |
| க. சுசீந்திரன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| சி. நித்தியானந்தன் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| ப. பார்த்தீபன் | கொக்குவில் | 5000. 00 |

*தாராள மனப்பான்மைக்கு முன் நீதி மனப்பான்மை நமக்கு வேண்டும்.*

இ. சிவராஜா கரவெட்டி (மாதாந்தம் 5 பல்கலைக்கழக மாணவர்களுக்காக) 15000. 00
சு. குமரகுருநாதன் மூலம்

| | | |
|---|---|---|
| த. சிவசுப்பிரமணியம் நினைவாக | காரைநகர் (கல்விப் பணிக்காக) | 50000. 00 |
| குணசிங்கம் இரத்தினபூபதி | மன்னார் (U.K) | 30000. 00 |
| நே. ஜெயக்குமார் | லண்டன் | 20000. 00 |
| Dr சிவஞானசூரியர் | கொழும்பு | 12000. 00 |
| குணபாலசிங்கம் ஜான்சி குடும்பம் | ஜேர்மனி | 20 யூரோ |
| இரஞ்சினிதேவி குடும்பம் | ஜேர்மனி | 230 யூரோ |
| S. சுந்தரலிங்கம் (செல்வம்ஸ்) | யாழ்ப்பாணம் | 10000. 00 |
| கு. அமிர்தலிங்கம் | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| Dr T. சிவபாலன் | அவுஸ்திரேலியா | 30000. 00 |
| பா. யாதவன் | அவுஸ்திரேலியா | 13100. 00 |
| சி. சரவணப்பெருமாள் | கரவெட்டி | 2000. 00 |
| J. சந்திரப்பிரகாசம் ஆசிரியர் | பருத்தித்துறை | 10000. 00 |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| ஸ்ரீ சிவராம் ரேடேர்ஸ் | யாழ்ப்பாணம் | 2புட்டி பருப்பு |
| நா. கந்தப்பு நினைவாக தோப்பு | அச்சுவேலி | 5000. 00 |
| கந்தசாமி (தேவன் ஸ்ரோர்ஸ்) | ஆவரங்கால் | 2000. 00 |
| ஸ்ரீஸ்கந்தராஜா குடும்பம் | லண்டன் | 10000. 00 |

திருமதி மேரி கனகரட்ணம் லண்டன் (வைத்தியப் பணிக்கும், கல்விப்பணிக்கும்) 150 பவுன்ஸ்

| | | |
|---|---|---|
| E. செல்வேஸ்வரன் | திருமலை | 6000. 00 |
| வசந்தரூபன் கருணிகா | நீர்வேலி | 1000. 00 |
| சி. ராகுலன் | புத்தூர் | 2000. 00 |
| ரவிச்சந்திரன் குடும்பம்<br>நந்தகுமார் குடும்பம்<br>அற்புதராஜா குடும்பம்<br>தர்மகுமார் குடும்பம் | கோண்டாவில் | 4000. 00 |
| சண்முகலிங்கம் ஸ்ரீ | கனடா | 25000. 00 |
| சிவசக்தி மில் | வவுனியா | 23மூடை அரிசி |
| பொ. கணேசலிங்கம் | பிரான்ஸ் | 5000. 00 |

திருமதி கமலா குணரட்ணம்மூலம் திருமதி யமுனா வர்ணன் பிரான்ஸ் 10000. 00

| | | |
|---|---|---|
| சி. கணபதிப்பிள்ளை | கொழும்பு | 1500. 00 |
| தி. அரவிந்தன் | தொல்புரம் | 1000. 00 |
| சிவானந்தம் குடும்பம் | கனடா | 2000. 00 |
| ரேணுகா கபில் | லண்டன் | 5000. 00 |
| தட்சணாமூர்த்தி உதயசங்கர் | கரவெட்டி | 10000. 00 |
| க. தர்மலிங்கம் J.P | நீர்வேலி | 20000. 00 |
| பு. புலேந்திரன் | வட்டுக்கோட்டை | 10000. 00 |

*சேமித்து வாழப் பழகிவிட்டால் நீ செல்வந்தனாகி விடுவாய்.*

| | | |
|---|---|---|
| ஸ்ரீயா சிவலிங்கம் | சுவிஸ் | 5000. 00 |
| பரணிதரன் அக்சரா | லண்டன் | 1000. 00 |
| திருமதி சுகன்யா சந்திரகாந் | அரியாலை | 3000. 00 |
| S. செல்வக்குமாரன் | மல்லாகம் | 1000. 00 |
| இ. திருக்குமரன் | சங்குவேலி | 1000. 00 |
| சபா ரேடேர்ஸ் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| பா. கேதீஸ் | உரும்பராய் | 5000. 00 |
| த. கிருஸ்ணவேணி | ஜேர்மனி | 5000. 00 |
| சிவபாதம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| வசீகரன் குடும்பம் | யாழ்ப்பாணம் | 1000. 00 |
| ந. ரத்தினேஸ்வரி | கொக்குவில் | 1000. 00 |
| வ. சதானந்தன் | வசாவிளான் | 5000. 00 |
| சி. கருணாநிதி | இடைக்காடு | 5000. 00 |
| ஜெ. அஸ்வினி | கனடா | 5000. 00 |
| சி. தாருஷன் | கொழும்பு | 5000. 00 |
| அ. பரமேஸ்வரி | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 2000. 00 |
| சு. சுவேதா, சு. ஆருட்ஷன் | தம்பாலை | 500. 00 |
| வி. கபில் | கொழும்பு | 500. 00 |
| ஆ. நீதிராஜா | கனடா | 1000. 00 |
| N. மகிந்தன் | ஜேர்மனி | 5000. 00 |
| தேயோசுலஷ்மி | உடுப்பிட்டி | 5000. 00 |
| கருணாமூர்த்தி குடும்பம் | கோப்பாய் | 5000. 00 |
| வி. விதுஷன் | கரணவாய் கிழக்கு | 2000. 00 |
| R. பொன்னுராசா | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| S. ஞானாம்பிகை | வட்டுக்கோட்டை | 500. 00 |
| திருமதி க. குலராஜசேகரம் | திருநெல்வேலி | 2000. 00 |
| ராஜன் குடும்பம் | நோர்வே | 5000. 00 |
| K. ஜீவிதா | லண்டன் | 25000. 00 |
| அருந்ததி சிவராஜா | துன்னாலை (அவுஸ்திரேலியா) | 10000. 00 |
| த. அருள்நிதி | லண்டன் | 5000. 00 |
| ஆ. மகேந்திரலிங்கம் | இணுவில் | 2000. 00 |
| ச. சுரபி | வல்வெட்டித்துறை | 3000. 00 |
| திருமதி உமா வரதீஸ்வரன் | வதிரி | 5000. 00 |
| தி. தேவகுமார் | கனடா (வாழ்வாதார உதவிக்காக) | 100000. 00 |
| ஐ. தங்கேஸ்வரன் குடும்பம் | கொழும்பு | 10000. 00 |
| ஐ. சண்முகலிங்கம் ஆசிரியர் மூலம் | மனோகரன் கனடா | 15000. 00 |
| சி. விஷ்ணுஷன் | அச்சுவேலி | 10000. 00 |

(தொடரும்...

*பிறர் முதுகுக்குப் பின்னால் நாம் செய்யவேண்டியது தட்டிக்கொடுப்பது மட்டும்தான்.*

# உண்மையின் மகிமை

– **திரு பூ. க. இராசரத்தினம்** அவர்கள் –

நிலையற்ற மனிதவாழ்வு, பெறற்கரிய பெரும் நிலையை அடைய வழி காட்டும் உயர் நெறிகளுள் தலையானது உண்மை நெறியாகும். உண்மை என்ற சொல்லின் உட்பொருள் "உள்ளது" என்பதை உரைப்பதாகும். உண்மைக்கு அழிவில்லை, தோல்வியில்லை. உண்மை நிலையானது. சூரியன் சில நிமிடங்கட்கு கருமுகிலில் மறைந்தாற் போன்று தோன்றும். அதே போன்று உண்மையும் தீயவர்களால் மறைக்கப்படலாம். இந்த நிலை நிரந்தரமானதல்ல. உண்மை ஒரு நாள் வெளிவரும். உண்மையும் நீதியும் நல்வாழ்வுக்குரிய முன்னெச்சரிக்கையான பாதுகாப்புகளை வழங்கிய வண்ணம் திகழும். உண்மைநெறி மீறியவர்கள் பலவிதமான தண்டனைகட்கு உட்பட்டவர்களாக இருந்து வருகின்றனர் என்பதற்கு சரித்திரச் சான்றுகள் ஏராளமாக உண்டு. பாவமன்னிப்புக் கோருபவர்கள் பலர். மனச்சாட்சி அடிக்கடி குறுகுறுக்க வேதனை தாங்க முடியாது அல்லற்படுபவர்கள் இப் பாவ விமோசனத்துக்காக வருந்துபவர்கள் பலர் உண்டு. இறைவனைக் குறிக்கும் "சச்சிதானந்தம்" என்ற சொல்லின் உட்பொருள் கூறும் நெறி உண்மையாகும்.

உண்மையை உணர்ந்தவன் உயர்ந்தவன். அவனை ஒரு நடமாடும் கோயில் எனலாம். மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம். உள்ளதை உள்ளபடி கூறுவது வாய்மையென்பது பொதுவான கருத்தாகும். உண்மையை மறைத்துக் கூறுவதில் விற்பன்னர்களும் உண்டு. உபத்திரவப்படுபவர்களும் உண்டு. அவித்த நண்டு துடிச்சு ஓடியதைக் கண்டதாகக் கூறுபவர்களும் உண்டு. வாய்மை தீமையை விளைவிக்க
எவ்வகையிலும் இடமிருக்காது.

"யாம்மெய்யாக் கண்டவற்றுள் இல்லை எனைத்தொன்றும்
வாய்மையின் நல்ல பிற" குறள்- 300

ஒரு நாட்டில் உண்மை, நம்பிக்கை, மரியாதை, அன்பு வறண்டால், கலை, கலாசாரம் வறண்டுவிடுமென பலமாக திருவள்ளுவர் விளக்கியுள்ளார். நல்ல பண்புகள் ஒருவனிடம் காணப்படும்பொழுது தான் அவனைப் பண்பாளன் எனக் கூறுகின்றோம். உண்மையான உணர்வும் மனோசக்தியும் கொண்ட பல கலைஞர்கள் அறிவாளிகள் அரச உத்தியோகத்தர்கள், சமூக சேவையாளர்கள் பாராட்டைப் பெற்று வருகின்றார்கள்.

"எல்லா விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப்
பொய்யா விளக்கே விளக்கு." குறள்- 299

என உண்மையின் சிறப்பை வள்ளுவர் அழகாக விபரித்துள்ளார். உண்மை உற்சாகத்தை ஆதரவை ஊட்டுகிறது. உண்மை இவற்றில் வெற்றியடையும் என்பதை விளக்கும் கதைகளும் பாடல்களும் இலக்கியங்களில் நிறைய உண்டு. உண்மையை விளக்கும் இலக்கியம் அழியா இலக்கியமாகத் துலங்குகிறது. ஒரு முறையாவது பொய் சொல்லுமாறு தூண்டப்பெற்ற அரிச்சந்திரன், இறுதிவரை உண்மையைக் கூறி விசுவாமித்திர முனிவரை வென்றார். இக்கதை

*ஒரு கை நீட்டி உதவி செய்தால் இரு கைகள் உன்னை வணங்கும்.*

மகாத்மாகாந்தியை நெறிப்படுத்தியதாக மகாத்மா காந்தியின் சுயசரிதையில் குறிப்பிடப்பட்டுள்ளது. "உண்மையிலும் உயர்ந்த சமயமில்லை" என மகாத்மா காந்தி கூறியுள்ளார். உண்மையைக் கடைப்பிடிப்பவன் பல சவால்களை மேற்கொள்ள வேண்டும் என்பதற்கு சரித்திரம் சான்று பகருகின்றது.

"தூய வழியில் ஈட்டாத செல்வமும் புகழும் காற்றினால் சிதறிப்போகும் மேகலைகள் போன்றவையே" தத்துவஞானி கொன்பியு சியஸ் "உண்மை நீ அறிந்துகொள். அது உன்னைச் சுதந்திர மனிதனாக்கும்" என விவிலிய நூல் கூறுகிறது.

"உண்மை பூமிக்கடியில் மறைத்து வைத்தாலும் அது அழியாமல் வளர்ந்து கொண்டே இருக்கும். அது நாளடைவில் மாபெரும் சக்தியாக உருப்பெற்று தனது வழியாக உள்ள அனைத்தையும் தூக்கி எறிந்து வெடித்து வெளிவரும்" என மேல்நாட்டு அறிஞர் எமிலிசோலாகூறியுள்ளார். உலகம் உண்மைக்கு மதிப்பு அளிக்கப்பட வேண்டும். கலைப் பொருட்களைச் சிருஷ்டிப்பதற்கு அவர்களுடைய இதயத்தையும் நம்பிக்கையையும் அன்பையும், பக்தியையும் கிளர்ந்தெழச் செய்யக் கூடிய உண்மையான உணர்வு மிக்க மனோசக்தி இருக்க வேண்டும்.

மனம் அமைதியற்றது. அடக்க முடியாதது. எனினும் உண்மை நிறைந்த பயிற்சியினாலும் வைராக்கியத்தாலும் அதை அடக்கலாம் என பகவத்கீதை கூறுகிறது. மனதில் என்ன நிகழ்கிறது என்பதையும் மனம் எப்படி வலிமையும் தூய்மையும் அடைகிறது என்பதை விஞ்ஞான ரீதியான விளக்கத்தையும் தியானம் மூலம் தெரிந்து கொள்ளலாம். எனவே தியானம் உண்மையின் உணர்வை உணரவைப்பதோடு ஆரோக்கியமான வாழ்வுக்கு வழிவகுக்கின்றது.

மனிதன் உண்மையை நாடுவதற்கு முயலும் பொழுதே அவன் அறிவு வளர்ச்சி பெறுகின்றான். உண்மைதான் உலகத்தின் சொத்து, நிலைத்து நிற்கக் கூடியது. ஒவ்வொரு மனிதனும் தன் சிந்தனையை ஆய்வுகூடமாக்கிக்கொள்ள வேண்டும். விஞ்ஞானம் பல ஆராய்ச்சிகளை மேற்கொண்டு புதிய பொருளின் உண்மையைக் கண்டுபிடிக்கின்றது. பல கண்டுபிடிப்புக்கள் மனித முன்னேற்றத்துக்குத் துணையாக அமைகின்றன. எனவே நாம் நல்லதையே சிந்தித்து நல்லதையே செய்வோம். வாழ்வு மலர வழி சமைப்போம்.

உண்மையின் மகிமையை மாணவர்கட்கு எடுத்துக் கூறி அவர்களை விழிப்படையச் செய்ய வேண்டும். அவர்களை நாம் நெறிப்படுத்த வேண்டும். தீயசெயல்களின் விளைவை உதாரண வாயிலாக எடுத்துரைக்க வேண்டும். உண்மையைக் கடைப்பிடிக்காத தீயவர்களின் செயல்களினால், இன்றைய சிறார்கள் சிலர் துயரம் தோய்ந்த கதைகளைக் கூறி கதறி அழுத கதைகளை ஊடகங்கள்மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

உண்மைக்காகப் போராடிய பஞ்சபாண்டவர்கள் கதை இடையிலே தோல்வி அடைவது போல தோன்றினாலும் இறுதியிலே உண்மைதான் வெல்லும் என்பதை இனிது விளக்கியுள்ளது. பண்பற்ற செயல் உண்மையாக மாற முடியாது. மாற்றவும் முடியாது.

அசுரவேகத்தில் சென்று கொண்டிருக்கும் இவ்வுலகில் அருளைத் தேடாது பொருளைத் தேடுவதில் ஈடுபடுகிறார்கள். மேலும் இவர்களோடு சிற்றின்பங்களில் மயங்கியவர்களின் மத்தியிலும் உண்மையின் உயர்ந்த நிலை விளங்காமல் இருக்கலாம். அல்லது விளங்காதவர்கள் போல் பாசாங்கு செய்யலாம்.

*நாம் தர்மத்தைக் கடைப்பிடித்தால் அது நம்மைக் காக்கும்.*

ஒருவர் போடும் திட்டங்கள் உண்மையை அத்திபாரமாகக் கொண்டால் தோல்வி அடையும் சந்தர்ப்பங்கள் குறைவாகவே அமையும். போலிப்பிரசாரத்தால் உண்மையைத் தற்காலிகமாக மறைக்கலாம். ஆனால் புரட்சிகரமான தோற்றத்தை எடுக்கத்தவற மாட்டாது. புராணத்தில் பல சம்பவங்கள் பலருக்கும் பயன்படக் கூடியதாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஏபிரகாம் லிங்கன் கூறியவற்றைக் குறிப்பிடுவது பொருத்தமாகும். "எல்லா மனிதர்களும் நேர்மையானவர்கள் அல்லர். எல்லா மனிதர்களும் உண்மையாக நடப்பவர்களும் அல்லர்" மனிதன் பெறுமதி மிக்கவனாக இருப்பதற்குரிய காரணம் மனிதத் தன்மைகளோடு, மனித விழுமியங்களைப் பேணி வாழக் கூடிய அதி அற்புத பண்பு அவனிடம் உண்டு. மனித விழுமியங்களை வாழ்க்கையில் மேற்கொள்ள மறுப்பவர்கள் யாவரும் மனிதப் பெறுமதியோடு வாழ மறுப்பவர்கள் ஆகிவிடுகிறார்கள்.

சத்தியம், இலட்சியத்தில் வாழ்கிறதே தவிர நடைமுறையில் வாழ்வதில்லை. உண்மையின் தேவையை உணர்ந்து விளங்கி அதனை மேற்கொண்டு வாழ்வோமாக.

உண்மை உயர, மக்கள் உயர, நாடு உயர உலகம் உயரும் உய்த்து நிற்கும். மனிதனின் கனவுகள் நிறைவாகும். இது உண்மை.

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| மார்ச் | 14 | மார்ச் 30 | வியாழன் | கச்சியப்பசிவாச்சாரியார் |
| மார்ச் | 18 | பங் 04 | திங்கள் | யோகர்சுவாமி |
| மார்ச் | 24 | பங் 10 | ஞாயிறு | காரைக்காலம்மையார் |
| ஏப்ரல் | 02 | பங் 19 | செவ்வாய் | பரமகுருசுவாமி |
| ஏப்ரல் | 04 | பங் 21 | வியாழன் | குழந்தைவேற்சுவாமி |
| ஏப்ரல் | 06 | பங் 23 | சனி | செல்லப்பாசுவாமி |
| ஏப்ரல் | 29 | சித் 16 | திங்கள் | திருநாவுக்கரசர் |

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

E.mail: suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com

*இலட்சியத்தை அடைய ஊக்கம் மிகுந்த கவனமான உழைப்பு தேவை.*

(தொடர்ச்சி...

# உமாபதி சிவம்

அருளிய

# திருவருட்பயன்

[விரிவான பொருளுரையும் தெளிவுரையும்]

முனைவர் ஆ. ஆனந்தராசன்



## பத்தாம் அதிகாரம்

### அணைந்தோர் தன்மை

**உயிர் சுத்த நிலையை எய்துதல்:**

காலைப் பொழுதில் கீழ் வானில் எழுந்த கரிய மேகக்கூட்டம் கதிரவனை முற்றிலும் மறைத்து விடுகிறது. அதன் இருப்புச் சிறிதும் தோன்றாதவாறு செய்கிறது. அதன் பொன்னொளி சிறிதும் புலனாகவில்லை. பரிதி இருந்தும் விளங்காத நிலை அது. அப் பரிதியின் நிலையில் உயிர் முதலில் இருந்தது. ஆணவ மலமாகிய முகிற் படலத்தால் அது மறைக்கப்பட்டுத் தனது அறிவு இச்சை செயல்கள் சிறிதும் விளங்காமல், தானொரு பொருள் உண்டு என்ற உணர்வும் இல்லாமல், முழு இருளில் அழுந்திக் கிடந்தது. இது கேவல நிலை.

கதிரவனை மறைத்திருந்த முகிற் கூட்டம் சிறிது கலைகிறது. இடைவெளி தோன்றுகிறது. அந்த இடைவெளியூடே கதிரவன் ஒளி மெல்ல எட்டிப் பார்க்கிறது. அந்நிலையில் கதிரவன் ஒளி மழுங்கியே காணப்படுகிறது. அது போன்றது சகல நிலை. இறைவன் உயிருக்கு உடம்பையும் கருவிகளையும் மாயையினின்றும் படைத்துக் கொடுக்க அவற்றோடு கூடிய உயிர் பிறந்தும், இறந்தும், உலகப் பயனாகிய இன்ப துன்பங்களை நுகர்ந்தும் வருகிறது. இச் சகல நிலையில் ஆணவ இருள் சிறிது நீங்க உயிரின் அறிவு இச்சை செயல்கள் சிறிது விளங்கப் பெறுவது, முகிற் கூட்டம் சிறிது விலகியபோது கதிரவன் தனது ஒளி சிறிது விளங்கி நிற்கும் தன்மை போன்றது ஆதல் காணலாம்.

அப்பொழுது வேகமாகப் பெருங் காற்று வீசுகிறது. அது மேகக் கூட்டத்தை அடித்துத் துரத்துகிறது. முன்பு சிறிது விலகிய முகிற் கூட்டம் இப்பொழுது முற்றுமாக நீங்குகிறது. இது போன்றது சுத்தநிலை. உயிர் வினைகளை ஈட்டியும் நுகர்ந்தும் வருவதால் ஆணவமலம் மெலிந்து தேய்வடைகிறது. உயிர் தவநெறியில் ஈடுபட்டு இருவினையொப்பும் சக்தி நிபாதமும் எய்திய காலத்தில் இறைவன் குருவாகி வந்து ஞானத்தை உணர்த்த, அதனைக் கேட்டும் சிந்தித்தும் தெளிந்தும் மும்மலங்களும் வாசனையும் தோன்றாது நீங்கப் பெறுகிறது. அந்நிலையில் உயிரின் அறிவு இச்சை செயல்கள் முற்றும் விளங்கி நிற்பது, முகிற் கூட்டம் முற்றும் நீங்கியபொழுது கதிரவன் தனது ஒளி எங்குமாக விளங்கி நிற்கும் தன்மை போன்றதாதல் காணலாம்.

*கற்பெனும் உறுதி நிலையே ஒரு பெண்ணுக்கு உண்மையான பெருமை.*

இங்ஙனம் விளங்கிய தனது அறிவு இச்சை செயல்களால் உயிர் இறைவனையே அறிந்தும், அன்பு செய்தும், அவனது திருவடியின்பத்தில் திளைத்து நிற்கும். அவ்வின்பம் மேலும் மேலும் எல்லையின்றி விளைந்துகொண்டேயிருக்கும். அந்த ஆரா இன்பத்தில் ஆன்மா அழுந்தித் தன்னையும் மறந்திருக்கும். இதுவே நிட்டை நிலையாகும். இன்புறு நிலையாகிய அதிகாரத்தில் இதனை விளங்க அறிந்தோம்.

**அணைந்தோர் - விளக்கம்:**

நிட்டை கூடித் திருவடியின்பத்தில் திளைத்திருப்போர் இவ்வுலகில் வாழ்ந்தாலும், இவ்வுடம்போடு கூடியிருந்தாலும், அவர் முத்திபெற்றவரே. அவரைச் சீவன் முத்தர் என்று அழைப்பர். தமிழில் அணைந்தோர் என்பர். உடம்பு உள்ளபோதே இறைவனது திருவடியை அணைந்தோர் ஆதலின் அவ்வாறு சொல்லப்படுவர். உடம்பை விட்டுப் போனபிறகு எந்த முத்தியின்பத்தை அடையலாமோ அந்தப் பேரின்பத்தை இந்த உடம்பில் இருக்கும்போதே பெற்றவர்கள் அவர்கள்.

**பிறரிடமிருந்து வேறுபட்டு நிற்றல்:**

சீவன் முத்தர் பார்ப்பதற்கு மற்றவர்களைப் போலத்தான் இருப்பர். ஆனாலும் அவருக்கும் பிறருக்கும் பெரிய வேறுபாடு உண்டு. ஓர் எடுத்துக்காட்டினால் இதனை விளக்கலாம். நெல்லை ஓரளவு சூடு ஏறும்படி வறுத்து எடுத்தால், அதற்கும் வறுக்காத நெல்லுக்கும் வேறுபாடு வெளியே தெரியாது. பார்வைக்கு இரண்டும் ஒன்றுபோலவே தோன்றும். ஆனாலும், வேறுபாடு இருக்கிறது அல்லவா? வறுத்த நெல் முளைக்காது; மற்றது முளைக்கும். அதுபோலச் சீவன் முத்தராய் உள்ளவர் பிறரைப்போல உண்டும், உடுத்தும், பூசுவன பூசியும், புனைவன புனைந்தும் வாழ்ந்தாலும் பிறரிடமிருந்து வேறுபட்டு நிற்பர். அவர் வினையினின்றும் நீங்கியவராதலின் இந்த உடம்பை விடுத்துச் சென்றால் வேறு உடம்பை எடுக்கமாட்டார். மீளப் பிறத்தல் என்பது அவர்க்கு இல்லை. ஏனையோரெல்லாம் இந்த உடம்பினின்றும் நீங்குவது மீண்டும் வேறு உடம்பை எடுப்பதற்குத்தான்; அடுத்த பிறவியில் இன்பதுன்பங்களை அடைவதற்குத்தான்.

**உடம்பில் ஒட்டாமை:**

சீவன் முத்தர் இந்த உடம்பில் இருந்தாலும் உடம்போடு ஒட்டுதல் இன்றி வாழ்வர். புளியங்காயில் மேலே உள்ள தோடும் உள்ளே உள்ள காயும் பிரிக்க முடியாதபடி இணைந்து ஒட்டியே இருக்கும். அதுவே பழமானால் தோடும் பழமும் தனித்தனியே பிரிந்து விடும். இரண்டுக்கும் ஒட்டுறவு இருக்காது. புளியம்பழம் தோட்டினுள் இருந்தாலும் அதனோடு தொடர்பு கொள்ளாததுபோலச் சீவன் முத்தர் உடலில் பற்றுதல் இல்லாமல் வாழ்வர்.

இதுவரை கூறியவற்றால், முத்தியின்பத்தை இந்த உடம்போடு வாழும்போதே பெறலாம் என்பதும், அந்த நிலையே நிட்டை நிலை என்றும் சீவன் முத்தி நிலை என்றும் சொல்லப்படுகிறது என்பதும், அந்நிலையை அடைந்த சீவன் முத்தர் உடம்போடும் உலகியலோடும் ஒட்டாமல் பற்றுதல் இன்றி வாழ்வர் என்பதும் பெறப்படும்.

*வலிமை, உண்மை, தன்னடக்கம் கொண்டவனே உண்மையான வீரன்.*

**தூங்கிக் கண்டார்:**

திருமூலர் இவரைத் "தூங்கிக் கண்டார்" என்று குறிப்பிடுவார். தூங்குதல் என்பது ஒன்றையும் அறியாத நிலையல்லவா? அந்நிலையில் எப்படிக் காணமுடியும்? என்று எண்ணலாம். தூங்குதலும், காணுதலும் ஆகிய இரண்டையும் நம்மால் ஒரே நேரத்தில் செய்யமுடியாது. ஆனால் சீவன் முத்தரால் அது முடியும். அவர் கொள்வது ஞானத் தூக்கம் ஆயிற்றே. அவர் தம்மையும், தம்மைச் சார்ந்துள்ள உடம்பு, உலகம் என்பவற்றையும் அறிதலை ஒழிந்து, எல்லாம் மறந்து, தன்வசம் அழிந்து, சிவானந்தத்தில் தோய்ந்திருப்பர். ஆதலின் அவர் தூங்கியவர் ஆனார். அதேநேரத்தில் அவர் சிவத்தை இடைவிடாது உணர்ந்து நிற்றலினால் கண்டவரும் ஆனார். இவ்வாறு இவ்விரு நிலைமையும் அவரிடத்து ஒருங்கு நிகழ்தல் பற்றி அவரதம் நிலையைத் "தூங்காமல் தூங்குதல்" எனக் கூறுவர்.

"தூங்காமல் தூங்கிச் சுகப்பெருமான் நின்நிறைவில்
நீங்காமல் நிற்கும் நிலை பெறவும் காண்பேனோ?

என்பது தாயுமானவரின் அனுபவ மொழி.

உலகத்தார் பகல் முழுதும் வேலை செய்து உழைத்து இரவில் கருவி கரணங்கள் எல்லாம் அறிவு இன்றி ஒடுங்கிய நிலையில் துயில் கொள்வர். சீவன் முத்தரோ கருவி கரணங்கள் எல்லாம் அறிவோடு ஒடுங்கிய நிலையில் பேரின்பத்தில் அழுந்தி அறிதுயில் கொள்வர்.

**சோம்பர்:**

சீவன் முத்தராகிய ஞானியரைச் "சோம்பர்" என்ற சொல்லால் குறிப்பதும் உண்டு. சோம்பர் என்பவர் தாமத குணம் உடையவராய், எங்கும் செல்லாமல், எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருந்து வீணே பொழுது போக்குபவர். இவ்வாறு சும்மாயிருப்பது அஞ்ஞான நிலை.

இனி, ஞானிகளும் சும்மாயிருப்பர். அ∴தாவது, யான் எனது என்னும் செருக்கு ஒழிந்து, மனம், வாக்கு, உடம்பு ஆகிய மூன்றும் செயலற்று, மௌன நிலையடைந்து, இறைவனது திருவடி நிறைவில் ஒடுங்கி இன்புற்றிருப்பர். இவ்வாறு சும்மாயிருப்பது ஞான நிலையாகும்.

செயலற்றிருத்தல் என்பது சோம்பருக்கும் உரியது. ஞானியருக்கும் உரியது. ஆயின், இவ்விருவர் நிலைகளும் தம்முள் ஒவ்வாதன என்பது மேற்கூறியவற்றால் விளங்கும். என்றாலும் சும்மாயிருத்தல் என்னும் சொல் ஒற்றுமைபற்றி, ஞானியர் சோம்பர் எனப்பட்டனர் என அறியலாம்.

**மௌனம்:**

சும்மாயிருக்கின்ற ஞானியராகிய சீவன் முத்தரை உலகர் அறியாமற் போதல் கூடும். எடுத்துக்காட்டாக ஒரு நிகழ்ச்சியைக் கூறலாம். ஞானி ஒருவர் கோயிலுக்கு நாள்தோறும் வருவார். வழக்கமாக ஓர் இடத்தில் அமர்வார்; யாருடனும் பேசமாட்டார்; எதுவும் கேட்கமாட்டார்; எப்பொழுதும் மௌனமாகவே இருப்பர். கோயிலிலிருந்து அவருக்கு ஒரு பட்டைச் சோறு நாள்தோறும் கொடுப்பது வழக்கம்.

*அமைதியாக வாழ நீங்கள் கண்டதையும் கேட்டதையும் பிறரிடம் கூறாதே.*

அங்கிருந்த அதிகாரி மாறுதலாகிப் போனார். புதிய கோயிலதிகாரி வந்தார். அவர் கணக்குகளைப் பார்த்தபோது "சும்மாயிருக்கும் சாமியாருக்கு ஒரு பட்டை" என்று எழுதியிருப்பதைக் கண்டார். பக்கத்தில் இருந்தவர்களைப் பார்த்துக் கோபத்தோடு கேட்டார், "சும்மா இருப்பவர்களுக்கு எதற்குச் சோறு? இன்றுமுதல் அந்தச் சாமியாருக்குக் கொடுப்பதை நிறுத்திவிட வேண்டும்" என்று ஆணைபிறப்பித்தார்.

அங்கிருந்தவர்கள் அதிர்ந்து போனார்கள். அவர்கள் அந்த ஞானியின்மேல் மட்டில்லா மதிப்பு வைத்திருந்தனர். ஆதலால் அவர்களில் ஒருவர் அந்த அதிகாரியை அணுகி மெல்ல எடுத்துரைத்தார். "சும்மாயிருப்பது என்பது எளிமையான காரியமன்று. முற்றுந் துறந்த ஞானிகளுக்குத்தான் அது முடியும். அவர் பெரிய ஞானி" என்று கூறினார். அதற்கு அந்த அதிகாரி, "சும்மா இருப்பது பெரிய காரியமா? என்னால் அப்படி இருக்க முடியும். நான் இன்று முழுதும் யாருடனும் பேசாமல் இருந்து காட்டுகிறேன்" என்று வீறாப்பாய் பேசிவிட்டு வீட்டிற்குப் புறப்பட்டார்.

அங்கேதான் அவருக்குச் சோதனை காத்திருந்தது! அவர் வீட்டிற்குள் நுழையும்போதே அவரது மனைவி "காய்கறி எல்லாம் தீர்ந்துவிட்டது கடைக்குப் போய் ஏதாவது வாங்கி வருகிறீர்களா?" என்று கேட்டாள். அவர் வாயைத் திறக்கவில்லை. பேசாமல் உள்ளே போனார். அவரது மௌனவிரதம் அந்த அம்மாவுக்கு எப்படித் தெரியும்? அவளுக்குச் சற்று எரிச்சல் உண்டாயிற்று. "நான் பேசிக்கொண்டேயிருக்கிறேன். நீங்கள் பேசாமல் போகிறீர்களே. உங்களுக்கு என்ன ஆயிற்று?" என்றாள். அதற்கும் அவர் பேசவில்லை. "இன்றைக்குச் சமையல் செய்யாமல் இருந்துவிடுகிறேன். எனக்கு என்ன?" என்று கூறியபடி உள்ளே போய்விட்டாள். "இது என்ன தொல்லை" என்று நினைத்துக்கொண்டே மௌனமாக இருந்தார்.

அன்றைக்குப் பார்த்து ஒருவர்மேல் ஒருவராக அவரைத் தேடி ஆட்கள் வந்தவண்ணமாய் இருந்தனர். அவர் கைகளாலும், முகத்தாலும் என்னென்னவோ சைகை செய்தார். வந்தவர்களுக்கு ஒன்றும் புரியவில்லை. "இவர் ஏன் இப்படி ஊமையாகிவிட்டார்? முனி, கருப்பு ஏதாவது இவரை அடித்திருக்குமோ? என்று கவலைப்பட்டார்கள் சிலர்; "இவர் இப்படியே இருந்துவிட்டால் எவ்வளவு நன்றாயிருக்கும்" என்று உள்ளூர ஆசைப்பட்டவர்களும் உண்டு!

வந்தவர்களையெல்லாம் வாய் பேசாது வழியனுப்பி வைத்தார். அவரது பொறுமை எல்லாம் போயிற்று. தனது மௌனத்தைக் குலைக்க இந்த உலகமே தனது எதிராகச் சதி செய்வதாக அவருக்குத் தோன்றியது.

மாலை ஐந்து மணியிருக்கும். அப்பொழுது இடிபோல ஒரு செய்தி வந்து அவரைத் தாக்கியது. பள்ளிக்குப்போன அவரது ஒரே பிள்ளை இன்னும் வீடு திரும்பவில்லை. "ஐயோ பையனுக்கு என்ன ஆயிற்றோ? எங்கே போனானோ? என்று அலறித் துடித்தாள் அவரது மனைவி. அவரால் இப்பொழுது சும்மாயிருக்க முடியவில்லை. அவரையறியாமல் அவரது வாய் பேசியது. வேலையாட்களைக் கூவி அழைத்தார். "நீ அந்தப் பக்கமாகப் போய்ப் பார்; நீ இந்த வழியாகச் சென்று தேடு" என்று அவர்களுக்கு ஆணையிட்டார்; அவரும் தேடப்புறப்பட்டார். அந்த நேரத்தில் அவரது மகன் தனது நண்பர்களோடு வந்து சேர்ந்தான். அவர்கள் வகுப்பிற்குச் செல்லாமல் திரைப்படம் பார்த்துவிட்டு இவ்வளவு நேரம் கழித்து வந்திருக்கிறார்கள் என்பது தெரியவந்தது.

*பொறுமை என்பது தன்நிலையில் தாழ்வு வராது பாதுகாத்துக் கொள்வதாகும்.*

மௌனமாக இருப்பது எவ்வளவு சிரமமான செயல் என்பதை அனுபவமாகத் தெரிந்து கொண்டார் அந்த அதிகாரி. மறுநாள் அவர் கோயிலுக்குச் சென்றார். சென்றவுடன் ஆணை பிறப்பித்தார். "சும்மாயிருக்கும் சாமியாருக்கு இரண்டு பட்டைச் சோறு" என்பதுதான் அந்த ஆணை.

மோனம் என்பது அனுபவத்திற்கு அறிகுறி. இன்ப அனுபவம் தலைப்படும்போது மோனம் தலைப்படும். இன்ப அனுபவம் ஞானத்தின் நிறைநிலையில் வரும். இது பற்றியே "மோனம் என்பது ஞான வரம்பு" என்றார் ஔவையார்.

**சிவனருளாகக் கருதுவர்:**

சீவன் முத்தர்களுக்கு உடம்பு உள்ள அளவும் பிராரத்த வினை இருக்கும். பிராரத்த வினை காரணமாக இன்ப துன்பங்கள் தோன்றினால் அவைகளை இறைவனது அருளாகவே கருதுவர். அவ்வாறு கருதிய ஒருவரைக் குறிப்பிடுவோம்.

அவர் ஒரு சிவயோகி. ஒருநாள் அவர் காவிரிக் கரை வழியே செல்லும்போது ஓரிடத்தில் பசுக் கூட்டங்கள் வருந்திப் புலம்புவதையும், அவற்றை மேய்க்கும் இடையன் இறந்து கிடப்பதையும் கண்டார். அப்பசுக்களின் துயரை ஒழிக்கத் திருவுளம் கொண்டார். தம்முடைய உடலை ஓரிடத்தில் காவல் செய்து வைத்துத் தம் உயிரை மூலன் என்ற பெயரை உடைய அந்த இடையனது உடலுட் புகுத்தித் திருமூலராய் எழுந்தார்.

மாலையில் பசுக்கள் தாமாக ஊரை நோக்கிச் சென்றன. திருமூலரும் சாத்தனூர் என்ற அவ்வூரையடைந்து, இடையனது மனைவியின் அழைப்பை மறுத்து, அங்கிருந்த பொது மடத்தில் புகுந்து சிவயோகத்தில் அமர்ந்தார்.

பின் அந்நிலையினின்றும் எழுந்து தமது முன்னைய உடலைத் தேடினார். அதனைக் காணவில்லை. பாதுகாப்பில் வைத்த தம் உடம்பு காணாமற் போனதையும், தாம் மூலன் உடம்பிலே இருக்க நேர்ந்ததையும் குறித்து அவர் வருந்தவில்லை. அதனைச் சிவனருளாகவே கருதி ஏற்றார் என்பது நினைக்கத்தக்கது.

**மூவகை வினையும் நீங்குதல்:**

ஞானிகளாகிய சீவன் முத்தர் வினைப்பயனாகிய இன்ப துன்பங்களை அவனது அருளாகவே கருதி, இன்பத்தில் விருப்பும் துன்பத்தில் வெறுப்பும் இல்லாமல் பற்றற்ற நிலையில் நுகர்ந்து கழிப்பர். பற்றுச் செய்யாமையால் பிராரத்த வினை அவர்தம் உணர்வைத் தாக்காமல் உடலையே தாக்கி ஒழியும். அ∴தாவது, உடம்பில் நோய், புண் முதலியவற்றைத் தோற்றுவித்து ஒழியும். அவர் "உடம்பு நாமல்ல" என்று தெளிந்தவர் ஆதலால் உடம்பிற்கு வருகின்ற ஊறுபாடு அவர் தம் உணர்வைத் தாக்குவதில்லை.

இன்பம் வரும்போது அதனை விரும்பி நிலை நிறுத்திக்கொள்ள அவர் முயல்வதில்லை; துன்பம் வரும்போது அதனை விரைவில் போக்க முயல்வதும் இல்லை. அதனால் அவர்களுக்கு ஆகாமிய வினை உண்டாகாது என அறியலாம்.

சஞ்சிதம், பிராரத்தம், ஆகாமியம் என்னும் மூவகை வினைகள் நாம் அறிந்தவை. அவைகளுள் சஞ்சிதம் முன்னரே ஞானாசிரியர் செய்த நிருவாண தீக்கையால் எரிக்கப்பட்டு ஒழிந்துவிட்டது.

*ஆசையற்றவனே அகில உலகிலும் மிகப்பெரும் பணக்காரன்.*

இப்பிறப்பிற்கென்று முகந்துகொண்டு வந்த பிராரத்தம் உள்ளது. அதனை அனுபவித்துத் தீரவேண்டும். அவர் அதனை மேற்கூறியவாறு பற்றுதல் இன்றி நுகர்வர். ஆதலால் அஃது அவரது உணர்வைத் தாக்காது உடலளவாய் வந்து நீங்கும். தன்முனைப்பின்றி "எல்லாம் அவனருள்" என்று அவர் அனுபவித்தலால் ஆகாமியமும் உண்டாகாது.

இவ்வாறு மூன்று வகையான வினைகளும் நீங்குவதால் அவர்க்கு இனிப் பிறவியில்லை என்பது சொல்லாமலே விளங்கும். அதனால் இவ்வுடம்பு நீங்கியதும் அவர் அடைவது வீடுபேறேயாகும்.

**உயிர்களிடத்தில் கருணை:**

ஞானிகள் எல்லோரையும் சமமாகப் பார்ப்பர். "மகவெனப் பல்லுயிர் அனைத்தையும் ஒக்கப் பார்க்கும் செல்வக் கடவுள் தொண்டர்கள்" அவர்கள். மூச்சுக் காற்று "நான் செல்வரது உடலுக்குள்தான் சென்று வருவேன்; ஏழையின் உடலுக்குள் புகமாட்டேன்" என்று சொல்லாது. தண்ணீர் "நான் பசுவின் தாகத்தை மட்டும் தீர்ப்பேன்; புலியின் தாகத்தை தீர்க்கமாட்டேன்" என்று சொல்லாது. முழுநிலவு பெரியவர் சிறியவர் என்று பாராமல் அனைவருக்கும் குளிர்ச்சியை அளிக்கும். இவற்றைப்போல ஞானிகள் எல்லா உயிர்களிடத்தும் வேறுபாடின்றிக் கருணை காட்டுவார்கள். பள்ளங்களைப் பார்த்ததும் அவற்றின் குறையை முற்றிலும் நிறைவு செய்தபின்பே முன்னேறிச் செல்கின்ற வெள்ளத்தைப்போல் அவர்கள் துன்புற்றவர்களின் தளர்ச்சியைப் போக்கிய பின்பே மேலே செல்வார்கள்.

திருமருகல் என்ற ஊரில் ஒரு வணிகப் பெண் தான் மணக்க விரும்பியவனோடு வந்து தங்கியிருந்தாள். வந்த இடத்தில் பாம்பு தீண்டி அவன் இறந்தான். அப்பெண் ஆதரவற்ற நிலையில் அழுது அரற்றினாள். அவளது அழுகுரல் ஞானசம்பந்தரின் திருச்செவியில் சேர்ந்தது. "இது அவள் விதி" என்று அவர் சொல்லிச் செல்லவில்லை. அவள்மீது கருணைகொண்டு, அவன் உயிர்பெற்று எழுமாறு செய்தார். இருவரும் மணம் செய்து கொள்ளவும் வழி செய்தார்.

ஓர் ஊரில் எல்லாருமே சுர நோயால் வாடுவதைக் கண்டு இரங்கி அப்பிணியை அவ்வூரை விட்டே ஓட்டினார். இவ்வாறு பிறர் துன்பந் தீர்க்க முந்துவது ஞானிகளின் இயல்பாகும்.

எங்கும் நிறைந்திருக்கும் வானம் ஒன்றிலும் பற்றில்லாது இருப்பதுபோன்று, உலகரோடு ஒட்டி வாழ்ந்தும் உலகில் அவர்கட்கு எவ்வகைப் பற்றும் இல்லாதிருக்கும்.

**திருவடி நிழலில் அகலாது நிற்றல்:**

எப்பொழுதும் தம்மைச் சிவத்தில் ஆழ்த்தி வைத்திருக்கும் அவர்கள் அதனின் நீங்கிப் புறம் போதார். புறம்போக நேருமாயின், அப்பொழுது அவர் செய்யும் செயல்கள் திருக்கோயில்களுக்குச் சென்று வணங்குதல், அடியார்களுடன் கூடி இறைவனைப் பற்றிப் பேசி இன்புறுதல் போன்ற வீட்டு நெறிச் செயல்களாகவேயிருக்கும்.

சுருங்கக் கூறினால், அவர் உலகிற்கு வழிகாட்டியாய் வாழ்வர்; உலகில் வாழ்ந்தாலும் இறைவன் திருவடி நிழலில் அகலாது நிற்பர்.

**அதிகாரத் தொகுப்பு:**

இனி, இவ்வதிகாரத்தின் வழி நின்று சீவன் முத்தராகிய அணைந்தோர் தன்மையினை தொகுத்துக் கூறுவோம்.

*செல்வச்செழிப்பு பெருந்தன்மையை அழித்துவிடாமல் பார்த்துக்கொள்ளுங்கள்.*

சிவப்பேறு பெற்ற சீவன் முத்தர் திருவருளில் அடங்கி நின்று பேரின்பத்தைத் துய்ப்பர். இன்பத்துள் ஆழ்ந்தமையால் அவருக்கு எந்த நினைவும் எழாது. நினைவின் வழிப்பட்டதே சொல். நினைவு எழாதாகவே சொல் எழாமையும் பெறப்படும். எனவே அவர் பேச்சடங்கி மோன நிலை பூண்டிருப்பர் என்பது விளங்கும்.

எல்லையின்றிப் பெருகும் சிவானந்தத்தைத் துய்த்தவர் ஆதலின் வேறு எந்த இன்பமும் அவருக்கு ஒரு பொருட்டாகத் தோன்றாது. இறைவனைப் போலத் தாமும் ஐந்தொழில் செய்யவேண்டும் என்று அவர் விரும்புவதில்லை; காரணக் கடவுளர் பதவிகளைப் பெற வேண்டும் என்றும் கருதார். பொறி வழியாக நுகரும் உலக இன்பங்களில் சிறிதும் இச்சை கொள்ளார்.

எல்லாவற்றையும் அறியும் அறிவாகிய சிவனது அறிவைப் பெற்றவராயினும் அவ்வறிவைக் கொண்டு வேறு பொருள்களை அறியார்; சிவம் ஒன்றையே உணர்ந்து நிற்பார். ஆமை நிலத்தில் இயங்கும்பொழுது தனக்குத் தீங்கு வருகிறது என்று உணர்ந்தால் அப்பொழுதே தனது தலையையும் நான்கு கால்களையும் தனக்குப் பாதுகாப்பாக உள்ள ஓட்டினுள்ளே அடக்கிக்கொண்டு அசைவற்றுக் கிடக்கும். அதுபோலத் தமது மனம் உலக வாசனை காரணமாக உலக சுகங்களில் செல்வதாக உணர்ந்தால், அக்கணமே அவ்வுணர்வை அடக்கிச் சிவஞானத்துள் ஒடுங்கி உலகை நினையாதிருப்பர்.

அணைந்தோர் சீவத்தன்மை நீங்கிச் சிவமாம் தன்மை பெற்றவர். சிவனது தன்மை வியாபக நிலை. சிவனை அணைந்தோரும் சிவனைப்போலவே எங்குமாய் நிற்பர். எந்த இடமும் சிவனையின்றி இல்லை. அவ்வாறே சீவன் முத்தரையின்றியும் எந்த இடமும் இல்லை.

சிவம் எங்கும் நீக்கமற நிறைந்து நிற்பதால் சிவஞானிகள் எவ்விடத்திலும் எப்பொருளிலும் சிவத்தையே கண்டு நிற்பர். உலகம் அவர்க்குச் சிவமாய்த் தோன்றும். ஆதலால் எப்பொருளையும் அவர் வெறுத்தல் இல்லை.

மாந்தர் தன் முனைப்போடு பொருந்திப் பற்றோடு செய்யும் செயல்களுக்குப் பயன் இன்ப துன்பமாகிய உலக போகம் ஆகும். அணைந்தோர் தன் முனைப்பின்றி அருள் வழியிலே நின்று பற்றின்றிச் செய்யும் செயல்களுக்குப் பயன் பரபோகமாகிய வரப்பில் இன்பமேயாகும்.

அணைந்தோர் உடம்பு முகந்து வந்த வினையை நுகர்ந்து கழிப்பர். அவர் பற்றின்றி நுகர்வதனால் ஆகாமிய வினை தோன்ற வழியில்லை. எப்பொழுதாயினும் பிராரத்த நுகர்ச்சியில் விருப்பு வெறுப்புத் தோன்றி அது காரணமாக ஆகாமியம் தோன்றுமாயின் அது வளராதவாறு திருவருளே அதனைச் சுட்டழிக்கும். இவ்வாறு அவர்க்கு வினை நீங்குதலால் இனிப் பிறப்பு என்பது அவர்க்கு இல்லை.

சீவன் முத்தர் இவ்வுடம்பு உள்ளபோதே அது நீங்கிய பின் பெறுதற்குரிய பரமுத்தியின்பத்தைப் பெற்றவராவர். அவர்கள் ஏனைய ஆன்மாக்கள் படும் துயருக்கு மிகவும் இரங்குவர். அவர்கள் மேல் பரிவு கொண்டு நூல் வாயிலாகவும் உபதேச வாயிலாகவும் அவர்களுக்கு உய்யும் நெறியை உணர்த்துவர்.

இனி, இக்கருத்துக்களை விளக்கமாகக் காண்போம்.

(தொடரும்...

*இடைவிடாத முயற்சியும் எப்போதும் மலர்ந்த முகமும் அறிவின் அறிகுறிகள்.*

# தில்லைக் கூத்தனின் திரு நடனமும் வாழ்வியலும்

– **திருமதி ப.நடராஜா** அவர்கள் –

சிதம்பரத்தில் சீர்பெற நடமிடும்
நாதனின் நற்றாள் சரண்புகுந்தே
வேத முதல்வனின் திருவிளையாடலைக்
காதலுடன் செப்பக் கணபதியே காப்பு

சிதம்பரத்தை ஐம்பூதங்களில் ஆகாயத் தலமாகக் கொள்வர். ஆகாயம் பரிசுத்தமானது, நிர்மலமானது, பரவெளியாய் எங்கும் நிறைந்து எல்லையற்ற பெருவெளியாயுள்ளது. இந்த எல்லையற்ற பரவெளி பேரம்பலமாகத் திகழ்வதால் நடராஜப் பெருமானைப் பேரம்பலவன் என்ற பெயரால் அழைக்கின்றோம். அதேபோல் சிதம்பரத் திருத்தலத்தில் நம் கண்களுக்குப் புலப்படும்படியாக நடமிடும் நடராஜமூர்த்தியைச் சிற்றம்பலவன் என்றும் அழைக்கின்றோம். எல்லையற்ற பரம்பொருளை ஓர் எல்லைக்குட்பட்ட ஓர் உருவத்தில் அடக்கி அந்த உருவைத் தியானித்து மனதில் எழுந்தருளச் செய்து உள்ளமதில் நிலைநிறுத்தி அவனருளால் பேரின்பமாகிய



*செல்வம் நல்ல பணிப்பெண். ஆனால் மிக மோசமான எசமானி.*

பரவெளியில் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் இறைவனின் மகிமையை உணர்ந்து கொள்தலே சிதம்பர இரகசியமும் வாழ்வின் பயனுமாகும். வாழ்வின் அதி உன்னதமான இந்த இலட்சியத்தை அடைந்தவர்கள் இனி வாழ்வில் (உலகில்) அடைய வேண்டியது எதுவுமில்லை. இந்த மேலாம் நிலையை அடையும்வரை வாழ்க்கைப் பயணம் தொடர்ந்து கொண்டேயிருக்கும். இந்த இலக்கை வைத்து வாழ்க்கைப் பயணத்தைத் தொடங்காவிடில் திக்குத் திசை தெரியாத காட்டில் பாதையைத் தவறவிட்டுத் தவிப்பதுபோலவும், நடுக்கடலில் திசை தெரியாது காற்றடிக்கும் திசைக்கெல்லாம் சுழன்று நீர்ச்சுழலில் அகப்பட்ட கப்பல் பயணிகள்போலவும் தவித்துத் தாம் செல்லவேண்டிய இடத்தைச் சென்றடைய முடியாது வாழ்வைத் தொலைத்துவிட்டு நிர்க்கதியாய் நின்று அல்லற்பட நேரிடும்.

இறைவனின் திருநடனத்தை உற்று நோக்குமிடத்து வலது காலை ஊன்றி இடது காலைத் தூக்கி ஆடுவதைக் காணலாம். வலது பாகம் இறைவனையும் இடதுபாகம் உலகையும் குறிப்பதால், வலது பாகமாகிய இறைவனை உறுதியாகப் பற்றிப் பிடித்துக்கொண்டு சுழலுகின்ற உலகின் மாற்றங்களுக்கேற்ப ஆடுவதே (வாழ்வதே) மனித வாழ்வாகும். இறைவன் கையிலிருக்கும் மான் எப்போதும் இறைவனை நோக்கியபடியே இருக்கின்றது. மான் அலைபாயும் மனத்தைப் பிரதிபலிப்பது. இந்த மான் இறைவனை நோக்கியிருப்பது போன்று அலைபாயும் எமது மனத்தையும் இறைவன்பால் திருப்பிவிட்டால் அலையும் மனம் அடங்க ஒரு நிலைப்படுகின்றது. இதனால் மனத்தை ஒருமுகப்படுத்தித் தெளிந்த சிந்தையோடு எப்பணியையும் செம்மையாகச் சிறப்பாகச் செய்யமுடியும். அக்கினி அழித்தலையும், உடுக்கை ஓசையையும் குறிக்கிறது. ஒரு திருக்கரம் பாதத்தை நோக்கியும் மற்றொரு திருக்கரம் அபய முத்திரையையும் காட்டி நிற்கும் தன்மை தம் பாதத்தைச் சரணடைந்தவரை அபயமளித்துக் காப்பதைக் குறிக் கின்றது. இறைவன் தாள் பணியாது அகங்காரம் கொண்டு உழலும் ஜீவாத்மாக்களைப் பணிய வைக்கவே மழுவாயுதம் தாங்கி நிற்கும் கோலம். இத்தகைய வேடம்தாங்கி ஆடும்பிரான் உலகை இயக்கும் கர்த்தாவாகின்றான்.

இறைவன் ஐந்தொழிலாகிய படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் ஆகியவற்றைத் தன் நடன முத்திரையின் வாயிலாக விளக்கி நிற்கின்றான். படைத்தல் தொழிலைச் செய்யும் சிவசக்தி சொரூபமாக; அம்மையப்பனாக விளங்குவதோடு; காத்தற் கடவுளாகச் சங்கு சக்கரமேந்திப் பாற்கடலில் அரவணைமேல் அறிதுயில் கொள்பவராகவும் விளங்குகின்றான். இங்கு பாற்கடல் என்பது நமது உள்ளமாகவும் சக்கரம் சுழன்று மாறிக்கொண்டேயிருக்கும் காலத்தையும் சங்கு மாறிக்கொண்டேயிருக்கும் உலக நியதிக்கேற்ப ஒலித்துக்கொண்டிருப்பதையும் குறிக்கின்றது. "அறிதுயில்" என்பது யோகநிலை. புலனுணர்வுகளால் பாதிக்கப்படாது. சிவத்தியானத்தில் ஆழ்ந்து வாழ்வில் எப்பொழுதும் "நான் யார்?" என்பதை மறவாது; உலக மாயையில் மயங்காது விழிப்பு நிலையில் இருப்பதைக் குறிக்கின்றது. இதை நாம் ஆழ்ந்து நோக்கினால் சக்கரம்போலச் சுழலும் இவ்வுலகில் ஒவ்வொரு கணமும் மாற்றங்கள் நிகழ்ந்துகொண்டேயிருக்கின்றது. பருவ காலங்கள் மாறுகின்றன. உருவங்கள் மாறுபடுகின்றன. செய்யும் பணிகள் அன்றாட வாழ்க்கை முறைகள் எல்லாம் மாறிக்கொண்டேயிருக்கின்றன. இவற்றினால் மயக்கமடையாது சோர்ந்து போகாமல் தொடர்ந்து நம் பணியைச் செவ்வனே ஆற்றுவதற்கு நாம் எப்பொழுதும் விழிப்பு நிலையில் இருத்தல்

*சேமிப்பு இல்லாத குடும்பம் கூரை இல்லாத வீட்டிற்குச் சமம்.*

வேண்டும். கர்த்தாவைச் சிந்தித்துக்கொண்டு கருவியாக இயங்க வேண்டும். மனத்தை மாயையால் மயங்கி மாசுபடாமற் காத்தலே "காத்தல்" என்பதின் பொருளாகும்.

அழித்தல் என்பது உலகின் முட்கள் நிரம்பிய நச்சு மரங்களை அழித்து விவசாயத்துக்கு ஏற்ற நிலமாகப் பயன்படுத்துவதுபோல் நம் உள்ளத்தே எழும் தீய எண்ணங்களை, தர்ம நியாயத்துக்குப் புறம்பான ஆசைகளை, விருப்பங்களை அழித்து நல்ல எண்ணங்களை வளர்ப்பதாகும். தீய எண்ணங்களால் நிரம்பியிருக்கும்போது நல்ல எண்ணங்கள் மலர அங்கே இடமில்லை. ஆகவே நன்மை தீமைகளை அறிவால் அறிந்து தீயவற்றை விலக்கி நல்லவற்றை விருத்தி செய்ய வேண்டும். தீயோர் நட்பை விடுத்து நல்லாரோடு இணங்கியிருக்கப் பழக வேண்டும். இதற்கு மகான்களின் அருள்மொழிகளை வாசித்தும் கேட்டும் அதனை வாழ்வில் கடைப்பிடிப்பதோடு தேவார திருவாசகங்களை ஓதுதல் சத்சங்கம் முதலியவற்றில் ஈடுபடுவதின் மூலமும் தீயவை அணுகாமல் மனத்தைக் காத்துக்கொள்ளலாம். தீயவற்றை அழிக்கும்போது இறைவன் ருத்ர மூர்த்தியாகின்றான். அவன் கையில் இருக்கும் தீ அழித்தலைக் குறிக்கும் சின்னமாகின்றது. இது இறைவனின் ருத்ர தாண்டவமாகும்.

இவ்வாறு தீய பதிவுகள் மனத்திலிருந்து அகற்றப்பட்டபின் அங்கே வேத வித்துக்கள் ஆகிய நல்விதைகள் ஊன்றப்படுகின்றன. சற்குருவின் மூலமாக இவை உள்வாங்கப்படுகின்றன. தீயவற்றை முளையிலேயே கிள்ளிவிட்டால் அது மீண்டும் தலையெடுக்காது. நல்லவை இலகுவாகப் பதியும். ஆகவே குழந்தைகளின் ஆரம்பக் கல்வி அவர்கள் வாழ்வின் அடித்தளமாக அமைவதால் அவர்களின் ஒழுக்கத்தையும் மேலான குணநலன்களையும் விருத்தி செய்யுமுகமாகக் கல்வி அமைய வேண்டும். வீட்டிலும் கல்வி நிலையங்களிலும், பாடசாலைகளிலும் இத்தகைய ஒழுக்க விழுமியங்கள் நடைமுறைக்கு வரவேண்டும். குழந்தைகள் கற்பது சிறிதுநேரம் பார்ப்பது அதிகநேரம். கேட்டவைக்கு முரணாகக் காண்பவை தென்பட்டால் அவர்கள் குழப்ப நிலையடைவர். எதிர்காலச் சந்ததிகள் ஆரோக்கியத்துடன் வாழவேண்டுமெனின் பெற்றோர், ஆசிரியர் மற்றும் பெரியோர்கள் வாழ்வியல் நடைமுறை முன்மாதிரியாக அமைய வேண்டும். உலகிலுள்ள குருவுக்கெல்லாம் குருவாக இறைவன் தெட்சணாமூர்த்தியாக இருந்து அருள்பாலிக்கின்றான். இது அருளல் எனப்படுகின்றது.

இவ்வகையில் ஜீவாத்மாக்களைப் படைத்துக் காத்து அழித்து அருளியபின் மாயத்திரையால் மூடி உலகில் விளையாட விடுகின்றான். இது மறைத்தல் ஆகும். இது குழந்தைகள் அன்றிலிருந்து இன்றுவரை விளையாடும் கண்ணாமூச்சி விளையாட்டாகும். ஒரு குழந்தை கண்ணைக் கட்டிக்கொண்டு தன் விளையாட்டுத் தோழர்களைக் கண்டுபிடிக்க முயற்சிப்பதுபோல் இறைவன் மாயத்திரையால் அகக்கண்ணை மூடிவிட்டுத் தான் ஒளிந்து கொண்டு தேடிக் கண்டுபிடிக்க வைப்பதே உலக வாழ்க்கையாகும். இறைவனின் லீலையே உலக வாழ்க்கையெனும் விளையாட்டு.

பரவெளியாக ஓர் உருவுமற்றதாக உள்ள நிலையைக் குறிப்பதே சிதம்பர இரகசியமாகும். இங்கே இறைவன் புலன்களுக்கு அப்பாற்பட்டவனாகின்றான். புறக் கண்களுக்குப் புலப் படுவதில்லை. ஆனால் அவன் எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் தன்மையை, அவ்வுண்மையை அந்த இறைவனுடன் தொடர்புகொள்ளல் மூலமாக அதாவது அன்புடன் இறைவனை நேசித்து அவனருளை யாசித்து அதனை உணர்வதன்மூலமே அறிந்து கொள்ளலாம். இத்தத்துவத்தை

*நல்ல நண்பனைத் தேடிக்கொள்ளாதவன் தனக்குத் தானே பகைவன்.*

உணர்த்துவதற்காக எடுத்துக்கொண்ட உருவமே நடராஜ மூர்த்தமாகும். இத்தத்துவத்தைப் புரிந்துகொள்ள அம்மையப்பனாக இறையுருவைக் கண்டு கொள்ளவும் அவனது திருவிளையாடலான லீலைகளைக் கேட்கவும் நாவால் அவனைப் புகழவும் ஒருருவில் காட்சி தருகின்றான். பரவெளியில் அம்பரத்தே ஆடுவது அண்டமெல்லாவற்றையும் இயக்கும் தன்மையைக் குறிப்பதாகவும்; நடராஜ மூர்த்தியாக ஓருருவத்தில் (ஒரு பிண்டத்தில்) காட்சி தருவது தேகத்துக்குள் இருக்கும் ஜீவாத்மனை இயக்கும் தன்மையைக் குறிப்பதாகவும் அமைகின்றது.

இந்த இரகசியத்தை அறிந்துகொண்டால் அண்டத்துள் பிண்டத்தையும், பிண்டத்துள் அண்டத்தையும் கண்டு இறைவனின் அற்புத லீலைகளை அறிந்து அந்த ஆனந்தமே மனித வாழ்வின் இயல்பென்பதை அறிந்து வாழ்வின் பயனை அடையலாம்.

உலகில் ஒரு நாடகத்தை எடுத்துக்கொண்டால் அந்த நாடகத்தை அரங்கேற்றுதற்கு முக்கியஸ்தராக விளங்குபவர் அதன் இயக்குனராவார். நடிகர்கள், மேடை அலங்காரம், மற்றும் ஒப்பனைகள் எல்லாம் அவரது ஒழுங்கமைப்புக்கு ஏற்ப இருந்தால்த்தான் அந்த நாடகம் சிறப்பாக அரங்கேறும். அதேபோல் உலகமாகிய நாடக மேடையில் வாழ்க்கை என்னும் நாடகத்தை ஒழுங்காக அரங்கேற்றி வெற்றிபெற உலக இயக்குனராகிய இறைவனின் தொடர்பை ஏற்படுத்திக்கொண்டு செயற்படுவது அவசியம். சிலந்தியானது தானே வலையைப் பின்னுகின்றது. அதற்குள் சிக்கிக்கொண்டதுபோல் அவ்வலைக்குள் சீவிக்கின்றது. பின் தானே அதனின்றும் விடுபட்டுக் கொள்கின்றது. அதேபோல் இறைவன் தன் மாயா சக்தியால் உலகையும் உயிரினங்களையும் தோற்றுவித்து; வாழும் நெறி முறைகளையும் அருளி வாழ்க்கையெனும் நாடகத்தை நடாத்துகின்றான். இவ்விளையாட்டில் இயக்குனராக இருப்பதோடு நடுவராக இருந்து கண்காணிக்கவும் செய்கின்றான். அவனருளிய நெறிமுறைகளை ஒழுங்காகக் கடைப்பிடிப்பதன் மூலம் வாழ்க்கை சுலபமாகவும், இயல்பாகவும், ஆனந்தமாகவும் அமைகின்றது. பரீட்சைக்குத் தோற்றும் எல்லாப் பரீட்சாத்திகளும் ஒரே அமர்வில் சித்தியடைவதில்லை. அதேபோல் மனித உருவெடுத்த எல்லா மனிதர்களும் பரிணாம வளர்ச்சிக்கேற்பப் படிப்படியாகவே முன்னேற வேண்டும். மீண்டும் மீண்டும் அவனருளை வேண்டி முயற்சித்துப் பரீட்சைக்குத் தயாரானால் வெற்றி நிச்சயம். ஏனெனில் எல்லா உயிர்களும் இறைமகவே. இறைவன் பாரபட்சமற்றவர். எல்லாருக்கும் அவரவர் தகுதிக்கேற்ப நாடக பாத்திரத்தைக் கொடுத்து வாழ்வியல் நாடகத்தைச் சிறப்புடன் அரங்கேற்றித் கொண்டிருப்பார். ஆகவே அவனருளால் அவன்தாள் வணங்கி அவனருளைப் பெற்றுய்வோமாக.

எல்லாம் அவன் செயல்
எங்கும் அவன் திருநடனம்

---

## ஆன்மிகச் சிந்தனை

**மிகவும் தெளிந்த உள்ளமே ஞானக்கண். எந்த ஒரு நற்செயலையும் தொடர்ந்து செய்து வந்தால் அது ஒரு ஞான சாதனையாகும். நல்ல எண்ணங்களைத் திரும்பத் திரும்ப நினைக்கும்போது, அவை நம்மை இறைவனுடன் தொடர்புபடுத்தி வைக்கின்றன. எனவே நல்ல எண்ணங்கள் அனைத்தும் ஞான சாதனையே ஆகும். இறைவனிடம் அரிய ஆன்மீகப் பொக்கிஷங்கள் உள்ளன. அவற்றைப் பெறுவதற்குரிய தகுதிகளை நாம் வளர்த்துக் கொள்வதே ஞான சாதனையாகும்.**

*உண்மையான பெரிய மனிதருக்கு முதல் அடையாளம் பணிவாக இருத்தல்.*

# சமய வாழ்வு

(தொடர் -17)

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

"சோதனை மேல் சோதனை போதுமடா சாமி, வேதனைதான் வாழ்க்கையென்றால் தாங்காது பூமி"- இது கவியரசு கண்ணதாசனின் பாடல் வரிகள். இன்றைய பெரும்பான்மை மக்களுக்கு இந்த வரிகள் பொருந்தும் என நினைக்கிறேன்.

வேதனை - துன்பம் எப்படி வருகிறது என்று சிந்திக்கும்போது மனதில் சில எண்ணங்கள் தோன்றுகின்றன. அவற்றை ஞானச்சுடர் வாசகர்களுடன் பகிர்ந்துகொள்ள விரும்புகிறேன்.

குடும்ப வாழ்விற்குள் நுழைந்து துன்பப்படுபவர்களைவிட, என் பார்வையில் "இளைஞர்கள்" அனுபவிக்கும் துன்பம் அதிகமானது எனக் கருதுகிறேன். இன்றைய இளைஞர்களின் துன்பத்திற்கு காரணமாகக் காணப்படுபவை காதல், நட்பு, தீய பழக்கங்கள், கல்வி.... எனப் பல உண்டு. இந்த நான்கு விடயங்களையும் என் அறிவில் ஆராய விளைகிறேன்.

இளைஞர்கள் காதல் என்பதைப்பற்றி கொண்டிருக்கும் கருத்து யாது? காதல் தோல்வி எனில் அதற்கு என்ன பொருள்? ஒருவன் அல்லது ஒருத்திக்கு இரண்டு மூன்று காதல் தோல்விகள் இருக்கின்றனவே எப்படி? இளைஞர்கள் இந்த வினாக்களை முதலில் தமக்குள் கேட்டுப் பார்க்கவேண்டும்.

இப்படி உன்னை நீயே கேள்விகளால் துளைத்துக்கொண்ட பிறகு கண்மூடிக்கொண்டு சிந்திக்கத் தொடங்குங்கள். இரண்டு உடல்கள் சங்கமம் ஆவதற்கான காரியமல்ல காதல். காதலில் உடல் சங்கமம் முக்கியமானது என்றாலும் முதன்மையானது அல்ல. உணர்ச்சிகள் ஆரம்பித்து வைக்க, அறிவு வந்து முடித்து வைப்பதுதான் காதல்.

உணர்ச்சிகளில் ஆரம்பித்து உணர்ச்சிகளிலேயே முடிந்து போவதற்கு வேறொரு பெயர் இருக்கிறது. அதுதான் காமம். சங்ககாலத்தில் காதல் என்ற வார்த்தை இல்லை. காமம் எனும் சொல் பயன்படுத்தப்பட்டது. அன்று காமம் எனும் வார்த்தைக்கு இருந்த விளக்கம் வேறு என்பதை நினைவுபடுத்திக் கொள்ளவேண்டும். இன்று காமம் என்பது உடல் கவர்ச்சியின் செயலே ஆகும்.

காதல் என்பது உள்ளங்களால் முன்மொழியப்பட்டு உடல்களால் வழிமொழியப்படல் வேண்டும். ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ளும்போதுதான் காதல் உருவாக முடியும். ஆனால் நம் இளைஞர்கள் காதல் என்ற வார்த்தைக்கு அவரவருக்கு ஏற்ற அர்த்தமெலாம் பூசி வைத்திருக்கிறார்கள்.

இருபது வயதுக்குள் சிலர் ஏழெட்டுக் காதல் தோல்விகளுக்கு ஆளாகிவிடுகிறார்கள். மிக இளம் வயதில்- மீசை முளைக்கும் பருவத்தில் மனதில் தோன்றும் ஒரு மர்ம உணர்ச்சிக்கு காதல் என்று பெயர் சூட்டி விடாதீர்கள்.

தெரியாத ஒன்றை தெரிந்துகொள்ள வேண்டும் என்ற உணர்ச்சியின் கிளர்ச்சி; மீசை என்பது சொல்லாமல் முளைக்கிறதல்லவா இந்த உணர்ச்சியும் அப்படித்தான். அது ஒரு பருவக்காற்று; வீசியே தீரும். இளைஞனுக்கு யுவதியும், யுவதிக்கு இளைஞனும் புதிராகத் தோன்றுகிற பொல்லாத வயது அது. அந்த நேரத்தில் மனமென்னும் பந்து முகவரி தெரியாமல் முட்டி மோதுகிறதே அந்த அவஸ்தைக்கு காதல் என்று பெயர் சொல்வது தவறாகும்.

*பெற்றோர்களின் வாழ்க்கையென்பது குழந்தையின் பாடப்புத்தகமாக அமைகிறது.*

நிகழ்காலத்தில் பெரும்பாலான இலக்கியங்களும் கலைகளும் அந்த அவஸ்தையைத் தான் காதலென்று அழைக்கின்றன. இதனால் ஏற்படும் விளைவு விபத்தாகி வருகிறது. இளைஞனின் வாழ்வில் ஒளிமயமான பகுதி இருண்டு விடுகிறது. தானாகவே ஒருத்தியை மனதில் வரித்துக்கொண்டு மனதிற்குள் அவளைச் சிலை செதுக்கி- தனது மனம் எனும் நந்தவனத்தில் பொய்யாகப் பூக்க வைத்து பிறகு தன்னோடு தானே யுத்தம் நடத்தி, தானாகவே தோற்றுப்போய்- சின்னதாய் தாடி வளர்த்து- ஒரு சோக போதையோடு கவிதை எழுதி- திரைப்படப் பாடல்கள் எல்லாம் (போனால் போகட்டும் போடா...) தன்னோடு சம்பந்தப்படுத்தி ஒரு குறிப்பிட்ட வயதில் ஒரு கூட்டம் வாழ்ந்து வருகிறது என்பது வருத்தத்துக்குரியது.

பஸ் நிலையத்தில் எவளோ ஒருத்தி எங்கேயோ பார்த்துச் சிரித்ததைத் தனதாக்கிக் கொண்டு அவளைத் தேடித் தேடித் தெருத் தெருவாய் அலைந்து மூளை கலங்கி திரியும் இளைஞர்களை என்னவென்று சொல்வது?

பொய்யுணர்ச்சியை காதல் என்று காட்டுகிறவர்கள்- காதலிக்காமலே காதல் தோல்வி கண்டவர்போல் கவிதை எழுதுபவர்கள்- காதல் என்பதன் அர்த்தத்தை திரித்துச் சொல்லும் அறிவிலிகள் இவர்களெல்லாம் ஒரு தலைமுறையின்மீதே விசம் தெளிப்பவர்கள்.

இளைஞர்களே வந்துபோகும் வானவில் உணர்ச்சிகளை எண்ணிக்கையில் வைக்காதே. உனது உணர்ச்சியினால் ஏற்படுவது காதல் என்று எண்ணி வாழ்க்கையைத் தொலைத்துவிடாதே.

காதல் என்பது என்ன என்பதையும், ஆண் பெண் உறவு பற்றிய தீர்மானம் எது என்பதையும் உன் அறிவுக்கு தெளிவாக்கிக் கொள்ள வேண்டும்.

இளைஞர்களே உங்கள் துன்பம் காதல் தோல்வி என்று புலம்புவதை நிறுத்துங்கள். காதலில் தோல்வி இனி எனக்கு வாழ்க்கையே இல்லை. அதனால் "மது"வுக்கு அடிமையாகி விட்டேன் என்று கவிதை எழுதியவர்கள்கூட பின்னாளில் அர்த்தமுள்ள இந்து மதம் என்று நிம்மதி அடைந்த வரலாறு நம் கண்முன் இருப்பதை மறந்து விடாதீர்கள்.

காதலில் வெற்றி பெறுவதற்கு சரியான பாதையைத் தெரிந்து கொள்ளுங்கள். நண்பர்களுடன் வேடிக்கையாக இராமாயணம், மகாபாரதம் போன்ற இலக்கியங்களை நல்லூர் திருவிழாக் காலத்தில் கேட்டோம். (அன்று, மணி பாகவதர் தண்ணீர்ப் பந்தலில் பிரசங்கமாக கதை சொன்னார்.) இந்த இலக்கியங்களை மாணவப் பருவத்திலேயே கற்க முடிந்தது. நல்ல ஆசிரியர்கள் வழிகாட்டிகளாகக் கிடைத்ததால்- இறைவன் கொடுத்த வரம்- ஆர்வமாக ஆராய முடிந்தது. என் மனதில் இடம்பிடித்த இராமாயணக் கதையின் காதலை அறிந்திருப்பீர்கள். இன்றைய இளைஞனுக்கு இவற்றைச் சொல்லிக்கொடுக்க நல்ல ஆசிரியர்கள் இல்லை என்பது இன்னொரு வேதனை.

இராமனும் சீதையும் ஒருவரையொருவர் கண்டு காதல் வசப்படுகின்றனர்.

**எண்ண அரு நலத்தினாள் இனையள் நின்றுழி**
**கண்ணொடு கண் இணை கவ்வி, ஒன்றை ஒன்று**
**உண்ணவும் நிலைபெறாது உணர்வும் ஒன்றிட**
**அண்ணலும் நோக்கினான்; அவளும் நோக்கினாள்.**

இராமனும் சீதையும், இராமனது பார்வை சீதைமேல் செல்ல, அவள் கண் இராமன்மேல் பாய, அப்போது இருவரது மனவுணர்ச்சியும் ஒன்றுபட்டு ஒரு தன்மைத்தான காதலைக் கொண்டது புலனாகும்.

*ஆசையும் ஏக்கமும் செல்வத்தைச் சேர்க்காது. உழைப்பே செல்வத்தைத் தரும்.*

நோக்கிய நோக்கு எனும் நுதி கொள்வேல் இணை
ஆக்கிய மதுகையான் தோளின் ஆழ்ந்தன;
வீக்கிய கனை கழல் வீரன் செங்கணும்
தாக்கு அணங்கு அனையவள் தனத்தில் தைத்தவே.

இராமன், சீதை ஆகிய இருவரும் ஒருவரை ஒருவர் கண்களால் பருகினர்; ஓர் ஆவிற்கு இரு கோடுபோல ஒத்த காதல் கொண்டவராயினர்; "கண்கொண்டு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச் சொற்கள். என்ன பயனும் இல் (குறள்)

பருகிய நோக்கு எனும் பாசத்தில் பிணித்து
ஒருவரை ஒருவர்தம் உள்ளம் ஈர்த்தலால்,
வரி சிலை அண்ணலும் வாள்- கண் நங்கையும்
இருவரும் மாறிப் புக்கு, இதயம் எய்தினன்.

சீதை, இராமன்; இருவரும் தம் கண் பார்வையால் காதல் கொண்டு ஒருவரது மனதில் மற்றொருவர் குடிகொண்டார் எனலாம்.

மருங்கு இலா நங்கையும், வசை இல் ஐயனும்
ஒருங்கிய இரண்டு உடற்கு உயிர் ஒன்று ஆயினார்
கருங்கடல் பள்ளியில் காவி நீங்கிப் போய்ப்
பிரிந்தவர் கூடினால், பேசல் வேண்டுமோ?

ஈருடல் ஓருயிர்- இராமனும் சீதையும் ஒருவரை ஒருவர் பார்த்த அளவில் இரு உடல்களுக்கு ஓர் உயிர் அமைந்ததுபோல மனம் ஒன்றுபட்டார்கள் என்றார்.

கம்பனின் கைவண்ணத்தில் காட்டப்பட்ட "காதல் காட்சி" இந்தக் காட்சியொன்றை, அதன் உண்மை அர்த்தத்தை இன்றைய இளைஞர், யுவதிகள் சரியாகப் புரிந்துகொண்டால் "காதல்" என்பதற்கு விடை கிடைக்கும். அதுமட்டுமல்ல உடற் கவர்ச்சியால் ஏற்படுவது காதல் அல்ல என்பதும் தெரியவரும்.

ஆண்களுக்கு இராமாயணத்திலிருந்து ஒரு காட்சியைக் காண்பிக்க விரும்புகிறேன்.

ஆகும் நல்வழி; அவ்வழி என் மனம்
ஆகுமோ? இதற்கு ஆகிய காரணம்,
பாகுபோல் மொழிப் பைந்தொடி, கன்னியே
ஆகும்; வேறு இதற்கு ஐயுறவு இல்லையே!

இராமன் சீதையை மனதில் வரித்துக்கொண்ட பின்னர் அவனுக்கு ஒரு சந்தேகம் ஏற்படுகிறது. யாரோ ஒருத்தியை என் மனச்சிறையில் வைத்துவிட்டேன். அந்தப் பெண் வேறு ஒருவனின் மனைவியாக அல்லது காதலியாக இருந்துவிட்டாள் என் எண்ணம் தவறானதாகி விடுமே! என்று சிந்திக்கிறான். அடுத்த கணம் அவன் எடுக்கும் முடிவு, "எனது மனம் தவறான எண்ணத்தை உருவாக்குமா? ஒருக்காலும் இல்லை! என் மனது தவறான பாதையை தெரிந்தெடுக்காது" என்று முடிவுகட்டி "பாகுபோல் மொழிப் பைந்தொடி- கன்னியே ஆகும்" என்று இறுதி முடிவுக்கு வந்து விடுகிறான்.

இளைஞர்களே! சிந்தியுங்கள். உங்களுடைய காதல் தூய்மையானதா? என்பதைவிட, அந்தப் பெண் திருமணமானவளா? வேறு ஒருவனை விரும்பாதவளா? என்று எப்போதாவது சிந்தித்தது உண்டா? உங்களுக்கு காதலினால் ஏற்படும் துன்பம் சரியானதா? முடிவு செய்து கொள்ளுங்கள்.

(தொடரும்...

# இல்லறம் அல்லது நல்லறம் அன்று

– **திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

"இல்லறம் அல்லது நல்லறம் அன்று" என்பது அனுபவம் வாய்ந்தோர் வாக்காகும். இல்லறத்தில் சமய அனுட்டானங்கள் பின்னிப் பிணைந்துள்ளன. அத்தியாவசியமான சமய அனுட்டானங்கள் ஆற்றுவதற்கு இல்லறம் மிகவும் கைகொடுப்பதால் மனிதனை மேல் நிலைக்கு உயர்த்துகின்ற தர்மங்களில் இல்லற தர்மமே முதல் தர்மமாகின்றது என்பது சுவாமி கெங்காதரானந்தாவின் கூற்றாகும். விருந்தோம்பலைச் செவ்வனே ஆற்ற இல்லறம் போன்று வேறு எதுவுமே உதவமுடியாது. அதனால் இல்லற தர்மத்தை ஒவ்வொருவரும் முறையாக அனுசரித்து வாழுதல் மிகமிக அவசியம் ஆகின்றது. இல்லத்திலே தந்தையின் கடமைகள், தாயின் கடமைகள், பிள்ளைகளது கடமைகள் எனப் பல அம்சங்கள் உண்டு. இங்கே ஒவ்வொருவரும் தத்தம் கடமைகளை சரிவரச் செய்தாகின்றபோதுதான் இல்லறம் நல்லறம் ஆகின்றது.

இல்லத்தில் தமது கடமைகளை அனுசரித்து வாழ்கின்றவர்களே உத்தம மனிதர்கள். இவர்களே ஞானவான்களாகப் பரிணமிக்க முடியும். பக்தியைச் செயலாற்ற முதலில் நாம் வாழும் இல்லம், எமது குடும்பத்தவர், ஒழுங்காக அமைய வேண்டும். அமைய ஒவ்வொருவரும் தமது இல்லற வாழ்க்கையை நன்கு அமைத்துக்கொள்ள வேண்டும். ஆகாய விமானத்தைப் பாருங்கள். அது பூமியில் சிறிது நேரம் ஓடிய பின்னர்தான் மேல் எழுந்து பறக்கின்றது. விமானம் மேலெழுந்து பறக்கின்ற சக்தியும் வேகமும் அது தரையில் ஓடுகின்ற ஓட்டத்தில் இருந்துதான் பெறப்படுகின்றது.

இதேபோன்றுதான் எமது நிலையும். இப்பூவுலக வாழ்க்கையை கிரமமாய் வாழ்ந்து முடிப்பவர்களுக்குத்தான் மேலான ஞான வாழ்க்கைக்குரிய சக்தியும் மனப்பக்குவமும் கிடைக்கின்றன.

இல்லற தர்மத்தின் ஒவ்வொரு படியையும், ஒழுங்காக ஏறிச் செல்பவர்களே இறுதியில் ஞானத்திற்கு அருகதை உடையவர்களாயிருப்பார்கள் என்பது நிஜம். இல்லற தர்மம் மனிதனது ஆரம்ப தர்மமாகும். இதனைச் செவ்வனே செய்து முடிக்காதவர்கள் எவ்வுலகத்திலிருந்தாலும் சரி அவர்கள் கர்ம தோஷத்தினால் சதா துன்பப்பட்டுக்கொண்டே இருப்பார்கள்.

இத்தகைய முதல் தர்மமாகிய இல்லற தர்மத்தின் மகிமையையும் பெருமையையும் இயல்பையும் எடுத்துக்காட்டவே நமது தெய்வங்களும், அவதார புருஷர்களாகிய இராமர், கிருஷ்ணர் போன்றோரும் இல்லறவாசிகளாகத் திகழ்ந்தனர்.

தனது கடமைகளை நன்கு செய்யும் ஒருவன் இந்த விசாலமான சம்சார சாகரத்தை வெகு சாதுரியமாகக் கடந்து நற்கதி அடைவான்.

இல்லறவாசிக்கு தனது சொந்தக் கடமையிலிருந்து தேசக்கடமை வரையிலும் பல்வேறு கடமைகள் உள்ளன. இக்கடமைகளை ஆற்ற இல்லத்தில் தலைவனோடு தலைவியும் ஒத்துழைக்க வேண்டும். சம்சாரம் என்பது தர்ம சாரம் சுக ஜீவன ஆதாரம். இந்த சம்சார சாகரத்திலே துயரங்கள் ஏற்படும்போது தாரமோடு கணவன் அதைத் தாங்கி வாழ வேண்டும்.

*உன்னைத் தாழ்த்திப் பேசும்போது நீ அடக்கமாய் இருத்தல் பெரிய சாதனையாகும்.*

மனிதன் தன் கடமைகளைச் செய்யுமிடத்து ஏற்படும் இடையூறுகளே வாழ்க்கைப் பிரச்சினைகள் என்று சொல்லப்படுகின்றன.

இன்றைய காலத்தில் பெரும் மூளைசாலிகளாக மனித இனம் வளர்ந்து கொண்டு வருதல் உண்மை. ஆனால், அதனிலும் மேலாக வாழ்க்கைப் பிரச்சினைகளும் மனிதனை மீறி வளர்ந்துகொண்டு வருதல் கண்கூடு. கெட்டிக்காரர்கள் என்று தம்மைச் சொல்லிக் கொள்பவர்கள்கூட இன்றைய வாழ்க்கைப் பிரச்சினைகளை எதிர்கொள்ள முடியாது தடுமாறி நிற்பதைக் காண்கின்றோம். இவர்களுடைய அறிவாற்றல் எல்லாம் வாழ்க்கையின் மர்மங்களை அறிவதற்கு பயன் அற்றவையாகின்றனவோ என எண்ணத் தோன்றுகின்றது.

வாழ்க்கைத் தர்மங்களை, சமயங்கள் கூறுமாப்போல் சரிவரக் கற்றுக்கொள்ளாத காரணத்தால்த்தான், இன்று தனி மனிதனிலிருந்து உலகம் பூராகவும் குழப்பங்களும் கொலை களும் நிரம்பியுள்ளன.

எனவே மனிதன் செயலாற்றும் திறமைசாலியாக இருந்தால் மட்டும் போதாது, தன்னை எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளைப் புரிந்துகொண்டு அவற்றை சாதுரியமாகத் தீர்த்துக்கொள்ளும் நுண்ணறிவாற்றல் பெறவேண்டும். இதற்கு சமய சிந்தனையே கைகொடுக்கும். முயற்சிப்போமா?

---

## இறைத்தன்மை அடைய

இயற்கைத் தத்துவத்தையும், அதன் விளைவுகளையும் அன்றாடம் வாழ்வில் நாம் சந்தித்துக் கொண்டிருக்கிறோம். இயற்கையின் விளைவுகளுக்குத் தொடர்ந்து ஆளாகிக் கொண்டும், சில நேரங்களில் பயன்படுத்திக்கொண்டும் வருகின்றோம். இதனைச் செயல் விளைவுத் தத்துவம் என்று சொல்லலாம். விதி என்றும் சொல்லலாம். தெய்வச் செயல் என்றும் சொல்லலாம். வினை அல்லது வினைப்பயன் என்றும் இதை மதிக்கலாம்.

இயற்கையை எவ்வளவுக்கெவ்வளவு நாம் அறிந்துகொள்கிறோமோ, அவ்வளவுக்குத்தான் நம் மனம் விரிவும், திண்மையும் பெறும். மனதின் திண்மைக்கு ஏற்பவே செயல் திறம் அமையும். செயல் திறமைக்கு ஏற்ப வாழ்க்கையானது வெற்றியும் மகிழ்ச்சியும் நிரம்பியதாக விளங்கும்.

மனிதனின் துன்பமெல்லாம், அவனுடைய குறையெல்லாம் இயற்கையை அறியாமலும் அல்லது அறிந்தும் அதனை மதியாமலும் அவன் நடந்துகொள்வதாலேயே தோன்றுகின்றன. இந்நிலையைத்தான் ஆணவம் என்பார்கள். நாம் இதனைத் "தன்முனைப்பு" என்கிறோம்.

உலக உயிர்கள் அனைத்திலும் மனிதன் மிகவும் உயர்ந்தவன். இயற்கையின் பரிணாமச் சிறப்புக்கள் அனைத்தும் அவனிடம் ஒருங்கிணைந்துள்ளன. மனிதனிடம் இவ்வளவு பேராற்றல் இருந்தும் அவன் தன் ஆற்றலின் பெருமையை, தன் ஆற்றலின் முழுமையை மறந்திருக்கிறான். அதனால் அப்பேராற்றல் அவனிடம் இயக்கம் பெறாமல் பலங்குன்றியிருக்கின்றது. இதை மூடநிலை எனலாம். மூடம் என்றால் மறைவு என்று பொருள். மூடன் என்றால் அறிவு இருந்தும் அது அவனிடம் இயக்கம் பெறாமல் இருப்பவன். அறிவு இருப்பது வெளிப்படாமல் அதாவது மறைவாக இருக்கும் நிலையில் உள்ளது. இயக்கம் பெறாமல் தடைப்பட்டிருக்கும் நிலையாகும். தன்முனைப்பின் காரணமாக மனிதனானவன் தன் பேரறிவைத் தன் உடல் அளவில் குறுக்கிக் கொண்டு, பொருள் அனுபோகத்திலும் புலன் அனுபோகத்திலும் மட்டுமே கவனம் கொள்ளச் செய்கிறது. அப்போது அவனது பேரறிவானது வெறும் பொருள் வழி மற்றும் புலன்வழி குறுகித் தன் உயர்வையும், சிறப்பையும் இழந்துவிடுகிறது.

*மரணம் என்பது கடன். அந்தக் கடனை எல்லோரும் கொடுத்துத்தான் ஆகவேண்டும்.*

# படங்கள் தரும் பதிவுகள்




தைமாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...





தைமாத ஞானச்சுடர் மலரின் சிறப்புப்பிரதி பெற்றோரிற் சிலர்...



சந்நிதியான் ஆச்சிரமத்தினால் மேற்கொள்ளப்பட்டுவரும் சமுதாயப் பணிகளின் வரிசையில் யா/ அல்வாய் இந்து தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வல்லுனர் போட்டிக்காக 120 மாணவர்களுக்கான பரிசுப் பொருட் களை வாராந்த வெள்ளி நிகழ்வினில் கலந்து சிறப்பித்த தொண்டுநாத சுவாமி அவர்களும் வேத வித்தியாசாகரர் சுவாமிகளும் வழங்கியபோது....

# சந்நிதியான் ஆச்சிரமத்தின் மலையகக் கல்விப்பணி (தொடர்ச்சி...)

– மோகனதாஸ் சுவாமிகள் –

அன்று பிற்பகல் 3 மணியளவில் கற்றல் செயற்பாட்டினை முடித்து நாம் அனைவரும் கதிர்காமக் கந்தனைத் தரிசிப்பது என்ற எண்ணத்துடனேதான் எமது மலையகப் பயணம் ஆரம்பமாயிற்று. அவ்வகையில் மாணவர்களது மனப் பதிவினையும் எழுதி வாங்கிக் கொண்டு மாணவர்கள், அதிபர் ஆகியோரின் அன்பு கலந்த உபசரிப்பிலிருந்து நாம் அனைவரும் விடைபெற்று கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கும் ஆவலுடன் புறப்பட்டோம். இரவு 7 மணியளவில் செல்லக் கதிர்காமத்தை அடைந்தோம்.



வழமையாக நாம் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கப் போகும் காலங்களில் செல்லப் பிள்ளையார் ஆலயத்தை அடைந்து ஆற்றில் நீராடி அதன்பின் ஆலய தரிசனம் செய்வது எமது வழமையான செயற்பாடு. ஆனால் இம்முறை அக் கடமைகளை நிறைவேற்ற முடியாதபடி ஆற்றில் நீர் பெருக்கெடுத்து ஆலயத்தைச் சுற்றிப் பாய்ந்து கொண்டிருந்தது. குளிக்க முடியவில்லையென்ற மனக்கிலேசத்துடன் சென்ற எம்மை திடீரென வருணபகவான் மழையாகப் பொழிந்து குளிக்க முடியவில்லையே என்ற எமது மன ஆதங்கத்தைப் பூர்த்தி செய்து

*ஊக்கம் இல்லாமல் எந்த ஒரு பெரிய காரியமும் சாதிக்கப்பட்டது கிடையாது.*

நனைந்த ஈர உடையுடன் சூழ்ந்திருந்த நீரினூடாக ஆலயத்தைச் சென்றடைந்த பொழுது ஆலய பூசகரின் பஞ்ச தீப ஆராதனையுடன் விநாயகப் பெருமானைத் தரிசித்தது ஒரு பெரும் பேறாகவே எமது ஆசிரிய குழாமால் கருதப்பட்டது.

விநாயகப் பெருமானது வழிபாட்டை நிறைவு செய்து நாம் அனைவரும் கதிர்காமக் கந்தனது ஆலயத்தை அடைந்தோம். வழமைபோன்று இந்து யாத்திரிகர்களின் விடுதியில் எமது பேருந்தை நிறுத்திவிட்டு கந்தனது ஆலயத்தை அடைந்தோம். எமது ஆசிரிய குழாமைச் சேர்ந்த ஒருசில ஆசிரியர்களைத் தவிர்ந்த மற்றவர்கள் அனைவரும் பல வருடங்களின் பின் கதிர்காமக் கந்தனைத் தரிசிக்கும் பாக்கியம் கிட்டியிருப்பதாகக் கூறி ஆலய தரிசனத்தில் ஈடுபடலாயினர். அவர்களது தரிசனம் முழுமை அடையும்வரை நாமும் அவர்களோடு கலந்து எமது வழிபாட்டினை நிறைவு செய்தோம். சுமார் ஒரு மணித்தியாலம் வரை ஆலய வழிபாட்டில் லயித்து ஆலய சூழலினை அவதானித்தபடி ஆலய முன்றலில் வீற்றிருந்தோம். அப்போது நாம் ஒன்றைக் கவனித்தோம். ஆலயச் சூழல் முழுக்க எமது குழுவினரைத் தவிர முற்று முழுதாக சிங்கள சமூகம் சார்ந்த மக்களால் நிரம்பி வழிந்தது. தூய வெண்ணிற ஆடையில் கந்தனைத் தரிசனம் செய்ய வந்த அவர்கள், வழிபாட்டிற்கு கொண்டு வந்த பொருட்களை பூசகர்களிடம் கொடுத்து வழிபாடு முடிந்தபின் அதனைப் பெற்று ஆலய வீதியில் இருக்கும் எம்போன்றவரை அணுகி அத்தட்டிலுள்ள பழவகைகள் உட்பட அனைத்துப் பொருட்களையும் எடுக்கும்படி பவ்யமாகக் கூறி அவற்றை வழங்கிச் செல்லும் மாண்பு எங்கும் காணமுடியாது.

ஆனால் நம்மவரோ வழிபாடு முடிந்தபின் அப்பொருட்களை தத்தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்வது என்பது எவ்வகையில் பொருத்தமானது என்பது ஒரு புரியாத புதிராகவே இருக்கின்றது. அவர்கள் வழிபாடு அப்படி, எம்மவர்கள் வழிபாடு இப்படி என இச் செயற்பாடுகளை விமர்சித்தபடி இந்து யாத்திரிகர் விடுதியிலமைந்த சிற்றுண்டிச் சாலையில் இரவு உணவை முடித்துக்கொண்டோம். எமது பேருந்தில் பயணத்தைத் தொடர்ந்த நாம் அனைவரும் மறுநாள் அதிகாலை யாழ் நகரினை அடைந்து எம்மோடு வருகை தந்த ஆசிரியர்களை அவரவர் இடங்களில் இறக்கிவிட்டு ஆச்சிரமத்தை அடைந்தோம். ஒரு மன நிறைவான காரியத்தை ஆற்றியதை இட்டு சந்நிதி வேலவனுக்கு நன்றிகூறி இத் தொடரினை நிறைவு செய்கின்றேன்.

**ஒரு குறிப்பு:**

**எமது பயிற்சித் திட்டத்தில் பங்குகொண்ட மாணவர்களின் கருத்துக்களைக் கேட்டபோது, அவர்கள் தம் மனப்பதிவினை சுருக்கமாக எழுதித் தந்தார்கள். அக் கடிதங்களுள் சில அவர்களது சொந்த நடையில் பிரசுரமாகிறது என்பதை வாசகர்கள் கவனத்திலெடுக்கவும்.**

சேர் நீங்கள் அனைவருக்கும் படிப்பித்துக் கொடுத்தது அனைத்தும் நன்றாகவே இருந்தது. ஆங்கில பாடத்தில் F எடுக்கும் நிலையிலிருந்தேன். இப்போது C எடுக்கும் அளவிற்குத் தைரியம் வந்துள்ளது. சமயம் நல்லா விளங்கியது. படிப்பித்தது பிடித்திருந்தது. கணிதபாடம் படிப்பித்த 2 சேர்மாரும் நன்றாகப் படிப்பித்தார்கள். இறுதியாக தமிழ் பாடம் செய்யவந்த சேர் நல்லா விளங்கப்படுத்தினார். முக்கியமாக விஞ்ஞானம் கற்பித்த சேர் ரொம்ப நல்லா படிப்பித்தார். நீங்கள் அனைவரும் நல்லா படிப்பித்தீங்கள். All are Thanks.

இப்படிக்கு
V. Shamila
11B

மதிப்பிற்குரிய ஆசிரியருக்கு

சனிக்கிழமையும் ஞாயிற்றுக்கிழமையும் நடந்த அனைத்துப் பாடங்களும் நன்றாக விளங்கியது. அனைவரும் மறுபடி ஒருமுறை இவ்வாறான கருத்தரங்கு எனக்கு மிகவும் ஆங்கிலத்திலும், சமயத்திலும், கணிதத்திலும் ஆங்கில பாடத்தில் Bயும் சமயபாடத்தில் Aயும், கணித பாடத்தில் Sம் எடுப்பேன் என்ற நம்பிக்கை வந்துவிட்டது. ஆனாலும் நான் மேலும் சித்திபெற மறுபடியும் எங்கள் பாடசாலைக்கு வருமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் பணி தொடர வாழ்த்துக்கள்.

நன்றி.

இப்படிக்கு
உண்மையுள்ள மாணவன்
T. பிரதீப்

கனம் மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு,

நீங்கள் கற்பித்த பாடங்கள் அனைத்தும் எனக்கு நன்றாகப் புரிந்தது. நாங்கள் தெரிந்துகொள்ளாத விடயங்கள் பலவற்றை அறிந்துகொண்டோம். விஞ்ஞான பாடம் நன்றாகப் புரிந்தது. பல புதிய தகவலை அறிந்து கொண்டேன். சமயம் நன்றாக விளங்கியது. பல புதிய தகவலையும் சமயக் குரவர்களின் கதைகளையும் அறிந்துகொண்டேன். கணிதம் வரைபுபற்றி அறிந்து கொண்டோம். கனவளவு, பரப்பளவு பற்றிய தகவல்களை அறிந்து கொண்டேன். ஆங்கிலப் பாடத்தில் எனக்கு ஒரு C வரும் என்ற ஒரு தன்னம்பிக்கை வந்துள்ளது. எங்களுக்காக அங்கிருந்து வருகை தந்து கற்பித்தமைக்காக உங்களுக்கு எனது தாழ்மைக்குரிய நன்றிகள்.

R. சஞ்ஜீவனி

கனம் ஆசிரியருக்கு,

நேற்றும், இன்றும் எங்களுக்கு கருத்தரங்கு நடத்திய வளவாளர்களுக்கு நன்றி. ஆங்கிலம், கணிதம், தமிழ், சமயம் போன்ற பாடங்களில் கடினமானதாக நாங்கள் நினைத்த பாடம் ஆங்கிலம், கணிதம் போன்ற பாடங்கள் இலகுவானது எனவும் அப்பாடங்களில் சிறந்த புள்ளிகள் பெறவும் முடியும் என எங்களுக்கு ஊக்குவித்த ஆசிரியர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவிப்பதோடு எங்களால் ஏதும் இடையூறு ஏற்பட்டிருந்தால் மன்னிக்கவும். எல்லாப் பாடங்களும் சுவாரஸ்யமாக இருந்தது. கணித பாடத்தில் அந்த அண்ணா நல்லா படித்துக் கொடுத்தார். ஆங்கில பாடத்திலும் என்னால் "C" எடுக்க முடியும் என நம்பிக்கையும் இலகு வழியும் கூறிய ஆசிரியருக்கு நன்றி.

J. நிலோஜன்
C.T.M.V.

இந்தக் கருத்தரங்கு மிகவும் சிறப்பாக இருந்தது. இதில் சமய பாடம் சிறப்பாக இருந்தது. அத்தோடு அனைத்துப் பாடங்களும் சிறப்பாகவும், பயன்மிக்கதாகவும் அமைந்தது. கணித பாடத்தில் மேலும் புள்ளிகளை பெற கடம்பன் ஆசிரியர் உதவி செய்தார். உங்கள் பணி மேலும் எங்கள் மலையக மாணவர்களுக்கு வேண்டும். இது எங்கள் வேண்டுகோள். எங்களால் எந்தக் குறை ஏற்பட்டிருப்பினும் எங்களை மன்னிக்க வேண்டும். இங்கு வருகை தந்த அனைத்து ஆசிரியர்களுக்கும் நன்றிகள். கருத்தரங்கிற்கான நேரப் பற்றாக் குறைக்காக நாங்கள் வருந்துகின்றோம்.

by
Shild.

கனம்,

எனது முதலாவது கருத்து என்னவென்றால் யாழ்ப்பாணத்திலிருந்து பல நிறைய சிரமங்கள் மத்தியிலும் மலையகத்தை உயர்த்த வேண்டும் என்ற எண்ணத்தில் சகல பாடசாலைக்கும் சென்று எங்களது பாடசாலைக்கும் வந்து இந்த கருத்தரங்கை நடத்திய எல்லோருக்கும் முதலாவதாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்தோடு இவ்வளவு நாளாக ஆங்கிலம் மற்றும் கணிதம் மிகக் கஷ்டமாக உள்ளது என நினைத்துப் பார்த்தேன். அப்பொழுது தெய்வம்போன்று வந்து எங்களுடைய கஷ்டங்களை நீக்கிய உங்களுக்கு நன்றிகள். நிறைய தெரியாத விடயங்கள் அனைத்தையும் அறிந்து கொண்டேன். நீங்கள் நலமாக வாழ நாமும் வாழ்த்துவதோடு கடவுளும் வாழ்த்துவாராக.

நன்றி.

B. Puganendira Raja
B/ Craig Tamil maha vidyalayam,
Banrarawella.

நீங்கள் படிப்பிச்ச பாடங்கள் அனைத்தும் நன்றாகப் புரிந்தது. நீங்கள் எங்களுக்கு வந்து படிப்பிச்சது மிகவும் நன்றாகப் புரிந்தது. அனைத்து சேர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றி. கணித பாடம், ஆங்கில பாடம் அனைத்து சேர் வந்து கூறியபடிபின்னால்தான் நான் பாஸ் பண்ணுவேன் என்று ஒரு நம்பிக்கை வந்தது. அனைத்து ஆசிரியர்களுக்கும் எனது மிகமிக நன்றிகள். நாங்கள் விஞ்ஞான பாடத்தில் மிகவும் கஷ்டப்பட்டோம். ஆனால் இவர்கள் வந்து படிப்பிச்ச பிறகு அனைத்துப் பாடங்களும் இலகுவாயிற்று. நான் அனைத்துப் பாடங்களிலும் சித்தியடைவேன். என்னை அனைத்து ஆசிரியர்களும் ஆசீர்வதிக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

இப்படிக்கு
ஆ. சுகுமார்
கோணமுட்டாவ தமிழ் பாடசாலை.

வடமாகாணத்தில் உள்ள யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த ஆசிரியர்களிற்கும் மற்றும் பாபா சுவாமி, மற்றும் மோகன் சுவாமி அவர்களுக்கு வணக்கத்தினைத் தெரிவித்துக் கொள்கிறோம். எங்களிற்கு இலவசமாகப் பரீட்சை வினாத்தாள் மற்றும் மதிய உணவு வழங்கியமைக்கு மிக்க நன்றி. நாங்கள் கோணமுட்டாவ பாடசாலையில் இருந்து பேருந்தில் வந்து பண்டாரவளை நகரில் இறங்கினோம். அப்போது அவர்களுடைய பேருந்தில் ஏற்றியும் மற்றும் கருத்தரங்கு முடிந்தபின் நகரிற்கு பேருந்து மூலம் ஏற்றிச் சென்றமைக்கு உங்கள் அனைவரிற்கும் மனம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றேன். எங்களிற்கு முதலில் ஆங்கில பாட ஆசிரியர் பாடம் படிப்பித்தார். அதன்மூலம் சில கேள்விகளிற்கு விடை கிடைத்தது. நன்றாகப் புரிந்தது. அவர் எங்களுடன் ஆசிரியராக மட்டுமன்றி ஒரு மாணவராக எங்கள் எல்லோரிற்கும் படிப்பித்தார். இதனால் நாங்கள் பொதுப் பரீட்சையில் சித்தியடைவோம் என்ற நம்பிக்கை வந்தது. பாடம் படிப்பித்த ஆசிரியருக்கு நன்றி கூறிக்கொண்டு, அடுத்த பாடமாக கணித ஆசிரியர் வந்தார். அவர் எங்களிற்கு ஏற்பட்ட வரைபு சம்பந்தமான சந்தேகங்களைத் தீர்த்தார். அவருக்கும் நன்றி. அடுத்ததாக தமிழாசிரியர் கட்டுரை எழுதுதல் சுருக்கம் எழுதுதல் பற்றி விரிவாகக் கூறினார். அவருக்கும் மிக்க நன்றி. விஞ்ஞான ஆசிரியர் இதயம் தொடர்பாக உள்ள சந்தேகம் மற்றும் இலத்திரனியல் தொடர்பான சந்தேகங்களைத் தீர்த்தார். அவருக்கும் நன்றி.

M. துஷாந்தினி
கோணமுட்டாவ பாடசாலை.

வணக்கம்

எனது முதலாவது கருத்து என்னவென்றால் எங்க பாடசாலைக்கு வந்து கருத்தரங்கு ஒழுங்கை செய்ததற்கு உங்கள் அனைவருக்கும் எங்கள் பாடசாலையின் ரீதியில் வணக்கத்தினை தெரிவித்துக் கொள்கின்றேன். யாழ்ப்பாணத்தில் இருந்து மிகத் தொலைவில் இருந்து வந்த உங்களுக்கு நாங்கள் ஏதாவது தப்பு செய்திருந்தால் மன்னிக்கவும். உங்களுடைய நோக்கம் மலையக மக்களை நல்வழியில் இட்டுச் செல்வதுதான் உங்களின் நோக்கம். அதற்கு நாங்கள் O/L பரீட்சையில் நல்ல சித்தியைப் பெறுவோம்.

நன்றி

R. Shagashan
Craig T.M.V
Bandarawela.

நாங்க ரொம்ப நல்லா படிச்சேன். English I am Very Happy. ரொம்ப நல்லா இருந்திச்சி. ஆங்கிலத்தில் நான் B எடுப்பேன்னு நம்பிக்கை இருக்கு. Very Very Thank You சேர். விஞ்ஞானமும் ரொம்ப நல்லா இருந்திச்சி. ரொம்ப சந்தோசம் இத செஞ்சதுக்கு ரொம்ப நன்றி. தமிழ் கொஞ்சம் பரவாயில்லை. ரொம்ப அருமையாக இருந்திச்சி மோகன் சுவாமிக்கு மிக நன்றி கூறி முடித்துக்கொள்கின்றோம்.

S. Krishanthini
11C

---

## கண்ணாடியின் தத்துவம்

அந்தக் கால ஜப்பானில் ஒரு துறவி. அவர் எங்கே சென்றாலும் கையில் ஒரு சிறு கண்ணாடியை எடுத்துப் போவார். இதைப் பார்த்த அவரது சிஷ்யர்கள் தங்களுக்குள் பேசி சிரித்துக்கொண்டார்கள். எப்பப்பார் கண்ணாடியில் தன் முகத்தைத் தானே பார்த்து ரசிச்சுகிட்டு இருக்கார்! சிஷ்யர்கள் இப்படிப் பேசுவது குருநாதருக்கும் தெரியும். ஆனால், அவர் தன் பழக்கத்தை மாற்றிக்கொள்ளவில்லை.

ஒருநாள், அந்த ஜென் துறவியைப் பார்க்க ஓர் அரசன் வந்திருந்தான். அவன் ஆசிரமத்தினுள் நுழைந்தபோது, துறவி வழக்கம்போல் தன் முகத்தைக் கண்ணாடியில் பார்த்துக் கொண்டிருந்தார். இதைக் கவனித்த அரசனுக்கு ஆச்சர்யம். "ஐயா, நீங்கள் எல்லாவற்றையும் துறந்த முனிவர். ஆனால் இப்படி அடிக்கடி கண்ணாடியில் முகம் பார்க்கும் ஆசையை மட்டும் தவிர்க்க முடியவில்லையா?" என்று நேரடியாகவே கேட்டுவிட்டான்.

துறவி சிரித்தார். "அரசனே, எனக்கு ஏதாவது பிரச்சினை வந்தால், அந்தப் பிரச்சினைக்கு யார் காரணம் என்று தெரிந்துகொள்ள இந்தக் கண்ணாடியைப் பார்ப்பேன். அங்கே தோன்றும் உருவம்தான் என்னுடைய பிரச்சினைக்கு முழு முதல் காரணம் என்று புரிந்துகொள்வேன்!" "அப்புறம், அந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டாமா? அதைச் செய்வதற்குப் பொருத்தமான நபர் யார் என்று தேடுவேன், மறுபடியும் கண்ணாடியைப் பார்ப்பேன். அங்கே தோன்றும் உருவம்தான் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கக்கூடிய மருந்து என்று புரிந்துகொள்வேன்".

"எப்போதும் இந்தக் கண்ணாடி என்னிடம் இருப்பதால், என்னுடைய நல்லது, கெட்டதுகளுக்கு யார் காரணம் என்கிற உணர்வை நான் மறப்பதில்லை என்றார் முனிவர்.

*பகுத்தறியாமல் துணியாதே, படபடப்பாகச் செய்யாதே.*

# பங்குனி மாத வாராந்த நிகழ்வுகள்

01.03.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

விடயம் :- "பக்திப்பாடல்" (பக்கவாத்திய சகிதம்)

வழங்குபவர்கள் :- சன் இசைக்குழுவினர்

(ஆவரங்கால்)

---

08.03.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

15.03.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "திருமுறைகள் காட்டும் வாழ்வியல்"

வழங்குபவர் :- திரு பொன். சந்திரவேல் அவர்கள்

(சைவப்புலவர்)

---

22.03.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "கந்தபுராணம்" (தொடர்)

வழங்குபவர் :- திரு அ. குமாரவேல் அவர்கள்

(சிரேஷ்ட விரிவுரையாளர், யாழ்/ கல்லூரி வட்டுக்கோட்டை)

---

29.03.2019 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

**ஞானச்சுடர் பங்குனி மாத வெளியீடு**

வெளியீட்டுரை :- திரு வ. கணேசமூர்த்தி அவர்கள்

(இளை. அதிபர்)

மதிப்பீட்டுரை :- திரு நி. பாபுதரன் அவர்கள்

(ஆசிரியர்)

255ஆவது மலர்

பதிவு இல. QD/10/NEWS/2019

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்

